அறைவு 04 இயம் 27 Feb 06-12, 2016

உள்ளத்திலே உண்மையொளி உண்டாயின், வாக்கினிலே ஒளி உண்டாகும்

# மலைமுரசு
MALAIMURASU

Registered as a newspaper in Sri Lanka

பிரதி சனி தோறும் வெளியாகும் வார இதழ்

பக்கங்கள் : 20 விலை : 30.00




# போலித்தனமான தேசப்பற்று

உப்புள் பெர்ணாண்டோ
தமிழில் நித்தியபாரதி



பிரபாகரன்
சாள்ஸ் அன்டனி

பிரபாகரன் ஒரு பயங்கரவாதத் தலைவராக இருந்த போதிலும் அவர் தனது சொந்தச் சமூகத்திற்கு துரோகம் இழைக்க ஒருபோதும் நினைக்கவில்லை. பிரபாகரனின் அர்ப்பணிப்பு மனோநிலைக்கு மாறாக, மகிந்தவின் போலித்தனமான தேசப்பற்று எவ்வாறு அமைந்துள்ளது என்பதை யோசித மீதான ஆணைக் குழுவின் விசாரணை சுட்டிநிற்கிறது.

இவ்வாறு சிலோன் ருடே நாளிதழில் உபுல் ஜோசப் பெர்னான்டோ எழுதியுள்ள கட்டுரையில் தெரிவித்துள்ளார்.

டிசம்பர் 2006ல் சிறிலங்கா கடற்படையில் இணைந்து கொண்ட மகிந்த ராஜபக்சவின் மகனான யோசித ராஜபக்ச கடந்த பத்தாண்டில் எவ்வாறான பதிவுகளைக் கொண்டுள்ளார் என்பதை இங்கு பார்க்கலாம்.



யோசித்த ராசபக்ச...

பக் 8

## திருமலை நடராசன்
### -59வது ஆண்டு நினைவு -

திருகோணமலை நகரின் மத்தியிலுள்ள மணிக்கூண்டுக் கோபுரத்தில் பறந்த கறுப்புக்கொடிக்கு எதிராக மீன், மரக்கறி அங்காடிகளில் ஏற்றப்பட்ட சிங்களக் கொடிகளை அகற்ற முற்பட்ட வேளையில் சுட்டுக்-கொல்லப்பட்ட நடராசனின் 59வது ஆண்டு நினைவு கடந்த நான்காம் திகதி நினைவு கூறப்பட்டது.

தமிழ்ப் பற்றாளர்கள் திருமலை நடராசனை நினைவு கூர்ந்தனர். அச்சந்தர்ப்பத்தில் அங்கு.............

பக் 17




## “சம்பூரில் சிலர் அத்துமீறிக் குடியேறியுள்ளனர்”
### பிரதேசச் செயலாளர் மனித உரிமை ஆணைக்குழுவிற்குக் கடிதம்

மீள்குடியேற்றப்பட்ட சம்பூரில் விடுவிக்கப்பட்டு மக்கள் குடியேற்றத்திற்காக அனுமதிக்கப் - பட்டுள்ளதாகக் கூறப்படும் எண்ணூற்றுக்கும் அதிகமான ஏக்கர் நிலத்தில் அத்துமீறிச் சிலர் குடியிருப்பதாக மூதூர் பிரதேசச் செயலாளர் திருகோணமலை மாவட்ட மனித உரிமை அமைப்பிற்குக் கடிதம் மூலம் தெரிவித்துள்ளார்.

சம்பூரில் மீள்குடியேற்றப்பட்ட போது மூன்று தமிழ்க்குடும்பங்கள் தமது காணிகளுக்குள் செல்ல அனுமதிக்கப்படவில்லை.

17



# மக்கள் போராட்டத்தில்.... தமிழ் தலைவர்கள் கொண்டாட்டத்தில்

பக் 17

படங்கள் - சசிகுமார், வீரகேசரி இணையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
இல 159ஏ. கடல்முக வீதி
திருகோணமலை
026 2227677
malaimurasu@hotmail.com 075 4252042

## சுதந்திரதினம் உணர்வா? கொண்டாட்டமா?

இரண்டு தனித் தேசங்களாக இருந்த சிங்கள தேசத்தையும், தமிழ்த் தேசத்தையும் ஒற்றையாட்சியின் கீழ் கொண்டு வந்த ஶ்ரீலங்காவின் இறுதி ஆக்கிரமிப்பாளர்களான ஆங்கிலேயர்கள், பெப்ரவரி 14ம் திகதி இந்நாட்டை சுதந்திர நாடாக அறிவித்த போது தமிழ்-சிங்களத் தலைவர்கள் இலங்கையர்கள் என்ற வாசகத்தின் கீழ் ஒற்றுமைப்பட்டிருந்தனர்.

இலங்கையர்கள் நாம் என்ற எண்ணத்தைச் சிறுகச் சிறுக அழித்த பெரும்பான்மையினப் பயங்கரவாதம், தனியே தமிழர்களை மட்டும் இந்நாட்டில் இருந்து அந்நியப்படுத்தி விடவில்லை. மாறாக சிங்களவர்களையும் நாம் இலங்கையர்கள் என்ற எண்ணத்திலிருந்து அந்நியப்படுத்தி நாம் "ஶ்ரீலங்காவின் பௌத்த சிங்களவர்கள்" என்ற சிறிய வட்டத்தினுள் உள்ளடக்கிவிட்டது.

அவ்வாறு சிறிய வட்டத்தினுள் அடக்கி அவ்வட்டம் எக்காலத்திலும் தகர்ந்து போகாத வண்ணம் உருவாக்கப்பட்ட பிடிமானமாக ஶ்ரீலங்காவின் அரசியல் அமைப்டபின் முதல் வாசகம் எழுதப்பட்டது.

அந்த வாசகமானது ஶ்ரீலங்கா ஒரு சிங்கள பௌத்த நாடு என்பதை வரையறுத்தபோது ஶ்ரீலங்காவின் சுதந்திர தினத்திலிருந்து தமிழர்கள் அப்புறப்படுத் - தப்பட்ட அதே வேளை நாங்கள் ஒற்றுமையான இலங்கையர் என்ற எண்ணத்துடன் இந்நாட்டுக்குள் இருந்த சிங்கள மக்களும் அந்நியப்பட்டுவிட்டனர்.

ஶ்ரீலங்காவின் சுதந்திர தினத்தை இலங்கையின் மக்கள் தமது சுதந்திரதினமாக எண்ண விடாத பல வடுக்கள், ஆறாக்காணங்களாக இன்றும் தமிழினத்தை வதைத்து வருகின்றது.

அதனை மிகச் சரியாக வெளிப்படுத்திய சுதந்திரதினமொன்றே இவ்வருடத்தில் கடந்து போயுள்ளது.

இந்தச் சுதந்திர தினத்தின் போது வடக்குகிழக்கு மாகாணங்களில் உள்ள தமிழர்கள் கரிநாளாக இந்நாளை நினைவுகூறியுள்ளமை தமிழ மக்கள் இன்னமும் சுதந்திரத்தை உணரவில்லை என்பதையே காட்டி நிற்கின்றது.

அதே வேளை இந்நாளில் பலநூற்றுக்கணக்கான சிங்கள மக்களும் சுதந்திர தினம் சம்பந்தமான எவ்வித சமூகப் பிரக்ஞையும் இன்றி சுற்றுலாக்களுக்குச் சென்றிருந்ததை விசேடமாகக் கிழக்கின் மூன்று மாவட்டங்களிலும் அவதானிக்க முடிந்ததன் ஊடாக அவர்களும் சுதந்திரதினம் தொடர்பாகப் பெரிதாக அலட்டிக்கொள்ளாத நிலையே காணப்படுவதைக் காட்டி நிற்கின்றது.

சுதந்திரதினம் என்பதை ஒரு காத்திரமான உணர்வாகக் கட்டியெழுப்ப முடியாமல் போயிருப்பதானது ஒரு நாட்டில் இறைமையைக் கேள்விக்குள்ளாக்கும் நிலை சிறிது சிறிதாக உள்நுழைவதை எடுத்துக்காட்டுகின்றது.

சுதந்திரதினத்தின் போது உள்ளார்ந்தமாக எழுகின்ற மனஉணர்வானது அதனை அனுபவிக்கின்ற மக்களை ஒரே திசையில் ஒன்றிணைத்துப் பிணைக்கும் கயிறாக அமையும்.

அந்த உணர்வால்தான் அம்மக்களைப் பாதிக்கும் புறக்காரணிகளை அப்பிணைக்கப்பட்ட மக்கள் தனியாகவும் கூட்டாகவும் எதிர்க்கத் தலைப்படுவதை நாம் காண்கின்றோம்.

தனியொரு அமெரிக்கனுக்குத் தீங்கு நேர்ந்தால் ஒட்டுமொத்த அமெரிக்காவே ஒன்றாகி நிற்கும் அமெரிக்கப் பண்பு அவர்களிடத்தே மிகவும் மேலோங்கி நிற்பதற்குக் காரணம் அவர்கள் அனைவரும் தமது சுதந்திரத்தையும், அந்நாளையும் மிகவும் உள்ளார்ந்த மனநிலையில் அனுபவிப்பதால்தான்.

அம் மனஉணர்வை உருவாக்கத்தவறிய சுதந்திர தினத்தால்தான் இன்று ஶ்ரீலங்கா என்கின்ற நாடு அந்நிய தேசத்தின் சக்திகளுக்கு பதில்சொல்லக் கடமைப்பட்டுக் கிடக்கின்றது.

ஶ்ரீலங்கா தேசத்தில் வாழுகின்ற இரண்டு தேசிய இனங்களுள் ஒன்றான தமிழ்த் தேசிய இனம் தனது சுதந்திரநாளாக இந்நாளைக் கொண்டா. முடியாதுள்ள நிலையில் அந்த இனம் தனக்கானதொரு சுதந்திர தினத்தை உருவாக்க முற்பட்ட போது உருவாகிய முரண்பாடு தான் கடந்த பல தசாப்தங்களுக்கு முன் தொடங்கி இன்றும் தொடர்கின்றது.

பெப்ரவரி 4ம் திகதியை இலங்கையர்கள் அனைவரும் தமது சுதந்திர நாளாக உணரும் காலம் வரை ஶ்ரீலங்காவில் சுதந்திர தினம் என்பது கொண்டாடப்படும் களியாட்ட விழாவாக ஒரு இனத்தால் கொள்ளப்படும் அதே வேளை மற்றொரு இனத்தால் கரிநாளாகக் கொள்ளப்படும் என்பதை ஆட்சியாளர்கள் உட்பட ஶ்ரீலங்காவில் நிலைமாறுகால நீதியைப் புறந்தள்ளி, நல்லிணக்கத்தை மட்டும் உருவாக்க முயற்சிக்கின்ற அனைத்து சர்வதேசத் தரப்புகளுக்கும் தமிழ் மக்களால் நடத்தப்பட்ட போராட்டமானது வெளிக்காட்டியுள்ளது.

இந்த அடிப்படையைப் புரிந்துகொள்ளும் எவரும் சுதந்திர தினத்தின் உணர்வை இந்நாட்டு மக்களிடையே உருவாக்க முயற்சிப்பர் என்பதே உண்மை!

## சுவிஸ் பிரதிநிதிகளுடன் ஶ்ரீஞானேஸ்வரன் சந்திப்பு



திருகோணமலைக்கு வருகை தந்திருந்த சுவிட்சர்லாந்து நாட்டின் பிரதிநிதிகளை இரா.ஶ்ரீஞ்ஞானேஸ்வரன் சந்தித்து உரையாடி - யுள்ளார்.

கடந்த 31ம் தகதி இரா.ஶ்ரீஞானேஸ் -வரனின் அலுவலகத்தில் நடைபெற்ற இச்சந்திப்பில் சுவிட்சர்லாந்து அரசின் குடிபெயர்வுச் செயலகத்தின் இலங்கைக்கான ஆய்வாளர் அன்ரேஸ் ஸ்மிட், அச்செயலகத்தின் பகுதித்தலைவர் ராமோன் செட்ஸ் மற்றும் தூதுவராலய உதவிச் செயலாளர் கெய் நினா பொரெர் ஆகியோருடன் நடைபெற்ற சந்திப்பானது மிகச் சுமுகமாக நடைபெற்றது என இரா.ஶ்ரீஞானேஸ்- வரன் தெரிவித்தார்.

கிழக்கின் தற்போதைய நிலைமைகள், மற்றும் போருக்குப் பின்னரான தமிழ் மக்களின் வாழ்வு, சனவரி 8-2015ற்குப் பின்னரான கிழக்கு மக்களின் நிலை என்பன தொடர்பாக நடைபெற்ற கலந்துரையாடலில் பல்வேறு விடயங்கள் பேசப்பட்டதாகவும் தரவுகள் ஆராயப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## ஊடகவியலாளருக்கு சமாதான நீதவான் பதவிகள்

கிழக்கு மாகாண ஊடகவியலாளர் சங்கம் தனது அங்கத்தவருக்கு சமாதான நீதவான் பதவிகளைப் பெற்றுக்கொடுக்குப் பொருட்டு சுயவிபரத்தை அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளது. தலைவர், கிழக்கு மாகாண ஊடகவியலாளர் சம்மேளனம், 6/3, பழைய கல்முனை வீதி, கல்லடி, மட்டக்களப்பு என்ற விலாசத்துக்கு ஒருவார காலத்துக்குள் அனுப்பிவைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

## திருமலை வர்த்தக சம்மேளத்தின் புதிய நிர்வாகசபை தெரிவு



திருகோணமலை மாவட்ட வர்த்தக கைத்தொழில் கல் சம்மேளனத்தின் புதிய தலைவராக கு.குலதீபன் தெரிவு செய்யப் பட்டுள்ளார். அத்துடன் செயலாளர் ஏ.ஆர்.முகமட் சைபுல்லா, பொருளாளராக மாட்டின் ஜி.ஜெயகாந்த் ஆகியோர் தெரிவானதை அடுத்து அவர்கள் அனைவரும் தமது பதவிகளை கடந்த 02.01.2016 அன்று ஏற்றுக்கொண்டனர்.

அனைத்துப் பிரதிநிதிகளும் அன்றைய பதவியேற்பில் கலந்திருந்தனர் |அச்சுதன்

## கிண்ணியா வீதிச் செப்பனிடல் பணிகள் ஆரம்பம்

|ஹலீம்

பல்லாண்டு காலமாக செப்பணிடப்படாத கிண்ணியா மக்கள் வங்கி வீதி-எகுத்தார் ஹாஜியார் வீதி நேற்று புதன் கிழமை (03.02.2016) கௌரவ பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் பிரதி அமைசசருமான எம்.எஸ். தௌபீக் அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அத்தோடு பாராளுமன்ற உறுப்பினர் அவர்களை மக்கள் ஊர்வலமாக கொண்டு சென்றதையும் படத்தில் காணலாம் இவ்வீதி பெரும் பல்லங்கள் நிறைந்ததாகவும், மழை காலங்களில் குளங்களைப்போலவே காட்சி தருவதாகவும் இருக்கின்றது. இவ்வீதி செப்பணிடப்படாத என்ற மக்களின் ஏக்கத்திற்கு தற்போது விடிவு கிடைத்திருக்கின்றது.

## சம்பூர் பழைய மாணவர்கள் கண்டனம்

|அச்சுதன்

திருகோணமலை சம்பூர் மீள் குடியேற்றப்பகுதியில் மிகவும் கோரத்தனமான முறையில் படுகொலை செய்யப்பட்ட செல்வன் குகதாஸ் தர்சன் (வயது-6) என்னும் பச்சிளம் பாலகனின் மரணத்திற்கு சம்பூர் மகா வித்தியாலய முன்னாள் மாணவர் வெளியக சங்கம், திருகோணமலை தனது வன்மையான கண்டனத்தைத் தெரிவித்துள்ளது.

தற்காலிகக் கூடாரங்களுக்குள் கடும் வாழ்ந்து கொண்டிருக்கின்ற சம்பூர் மக்களிடையே இம் மரணம் ஒருவித பயத்தை ஏற்படுத்தியுள்ளது.

எனவே மக்களிடையே சுமுகமான வாழ் சூழலை ஏற்படுத்தும் அவசியத்தை வலியுறுத்தி, பதட்டத்தைத் தணிவிக்குமுகமாக இக் கொலைச் செயலை புரிந்த படுபாதகர்களை சட்டத்தின் முன்னிறுத்தி நீதியைப் பெற்றுத் தருமாறு எமது சங்கம் நல்லாட்சிக்கான அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU

# இலங்கைச் செய்திகள்

## சிறுநீரக கடத்தல் குறித்த அறிக்கை சமர்ப்பிப்பு

கொழும்பு

இலங்கை வைத்தியர்கள் சிலர் நாட்டிற்குள் மேற்கொண்ட சிறுநீரக கடத்தல் சம்பவம் குறித்து தேடிப்பார்ப்பதற்கு நியமிக்கப்பட்ட ஐவர் அடங்கிய குழுவினரின் அறிக்கை நேற்று (05.02.2016) சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்னவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அந்தக் குழுவினர் கடந்த 23ம் திகதி சம்பவத்துடன் தொடர்புடையதாக கூறப்படும் தனியார் வைத்தியசாலைகள் உள்ளிட்ட இடங்களில் விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர்.

முன்னதாக 03 தினங்களில் அந்த அறிக்கை வழங்கப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்த நிலையில் விசாரணைகள் விரிவுபடுத்தப்பட்டதன் காரணமாக குறித்த அறிக்கை தாமதமாகியுள்ளதாக குறித்த குழுவின் அங்கத்தவர்கள் தெரிவித்தனர்.

## வவுனியா மக்களால்
### முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டம்

வவுனியா

வவுனியா, வேளன்குளம் பிரதேசத்தின் 08 கிராமங்களை சேர்ந்த மக்கள் வவுனியா - மன்னார் பிரதான வீதியை மறித்து எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். பூவரசன்குளம் சந்தியில் இருந்து திவன வீதி 35 ஆண்டுகளாக புனரமைப்பு செய்யப்படவில்லை என்று கூறி அந்த மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வேளன்குளம், மடுகுளம், சிவநகர், கோவில்மூட்டை, சின்னதன்பானை, செங்கப்படை, புன்வுகுடம், கோவில்புடுகுளம் ஆகிய கிராமங்களை சேர்ந்த 400 குடும்பங்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டுள்ளனர். யுத்தம் காரணமாக 1999ம் ஆண்டு இந்த கிராமங்களில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் 2010ம் ஆண்டு மீண்டும் இப்பிரதேசங்களில் மீள் குடியேறியதாகவும் தெரியவருகின்றது. எவ்வாறாயினும் ஆர்ப்பாட்டம் இடம்பெற்ற இடத்திற்கு வருகை தந்த வவுனியா மாவட்ட செயலாளர் ரோஹண புஷ்பகுமார குறித்த பிரச்சினைக்கு விரைவில் தீர்வு வழங்குவதாக உறுதியளித்த பின்னர் ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்து சென்றுள்ளனர்.

## களவாக மின்சாரம் பயன்படுத்தியோருக்கு அபராதம்
### இலங்கை மின்சார சபை அதிரடி

ලංකා විදුලිබල මණ්ඩලය
இலங்கை மின்சார சபை
CEYLON ELECTRICITY BOARD

2015ம் ஆண்டில் சட்ட விரோதமான முறையில் மின்சாரத்தை பயன்படுத்திய 2704 பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக மின்சாரம் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கை மின்சார சபையின் விசேட விசாரணைப் பிரிவினர் நாடளாவிய ரீதியில் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் இவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சுற்றிவளைப்புக்கள் மூலம் சுமார் 17 கோடி 39 இலட்சம் ரூபா வரை தண்டம் அறவிடப்பட்டதாக மின்சாரம் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது. அத்துடன் இனி அவதானமாக இருக்குமாறும் பொது மக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இலங்கை மின்சார சபையின் அபிவிருத்தி நடவடிக்கையின் ஒரு செயற்பாடாக இலங்கை மின்சார சபையின் விசேட விசாரணைப் பிரிவினர் பலப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கழிவொயிலால் நீர் மாசுபடுத்தப்பட்டுள்ளதா??
### உண்மையை வெளிப்படுத்துமாறு மக்கள் கோரிக்கை

கழிவொயில் காரணமாகப் பாதிக்கப்பட்ட பகுதிகளில் குடிநீர் விநியோகம் சீராக மேற்கொள்வதில்லையென, அதனால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களைச் சேர்ந்த இரு சுகாதார வைத்திய அதிகாரிகள் மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

இது தொடர்பான வழக்கு விசாரணை மல்லாகம் நீதிமன்றத்தில் இரண்டாவது தடவையாக எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. இதன் போது கழிவொயில் காரணமாகப் பாதிக்கப்பட்ட பகுதிகளில் இடைநிறுத்தப்பட்ட குடிநீர் விநியோகத்தைச் சீராக மேற்கொள்வது தொடர்பில் விவாதிக்கப்படும் எனச் சட்டத்தரணி சோ.தேவராஜா தெரிவித்துள்ளார்.

நீர் மாசுபடுத்தப்பட்டிருப்பதால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான குடிநீரினை வழங்க வேண்டிய பொறுப்பு அனர்த்த முகாமைத்துவ அமைச்சு, தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச்சபை ஆகியவற்றிற்குரியது எனக் கட்டளையிடப்பட்டது. பொது மக்களால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் குறித்த நிறுவனம் மூடப்பட்டதற்கெதிராக மேற்படி நிறுவனம் மேன்முறையீடு செய்ததன் அடிப்படையில் தற்போது மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை ஏற்கனவே 150 கிணறுகளைத் தெரிவு செய்து பரிசோதனை நடாத்தியதில் 5 கிணறுகளில் ஈயமிருக்கிறது. அல்லது ஒயில் இருக்கிறது. ஆபத்தானது எனச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், அந்த ஐந்து கிணறுகளும் எவை? என இன்னும் பிரகடனப்படுத்தப்படவில்லை. உண்மையில் இந்த விடயத்தை அவர்கள் நீதிமன்றத்துக்குத் தெரியப்படுத்த வேண்டும்.

குறிப்பிட்ட அந்த ஐந்து கிணறுகளைச் சுற்றவுள்ள மக்களின் சுகாதார நிலைமைகளைப் பரிசோதித்து அதிலிருந்து அவர்களைப் பாதுகாப்பதற்கு, குறித்த கிணறுகளிலுள்ள நீரினைப் பாவிக்காமல் தடுப்பதற்கு ஏற்ற வழிவகைகள் செய்யப்பட வேண்டும். அதனை நீதிமன்றம் தான் செய்ய வேண்டும் என அண்மையில் சுன்னாகத்தில் இடம்பெற்ற கழிவோயில் பாதிப்புத் தொடர்பான கலந்துரையாடலில் மக்கள் கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## 68 கோடிக்கும் மேல் கடன் சுமை

மீன்பிடி கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு 2008ம் ஆண்டு முதல் ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி என்பன செலுத்தப்படவில்லை என மீன்பிடி மற்றும் நீரியல்வள அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார். மேலும் மீன்பிடி கூட்டுத்தாபனத்திற்கு 68 கோடி ரூபாவுக்கும் மேல் கடன் சுமை இருப்பதாகவும் அமைச்சர் கூறியுள்ளார்.

அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அமைச்சர் அமரவீர இதனை கூறியுள்ளார். மீன்பிடி கூட்டுத்தாபனத்தில் பணி புரிய சுமார் 500 ஊழியர்களின் எண்ணிக்கை போதுமானது என்ற போதிலும் அங்கு ஆயிரத்து 26 பேர் பணியாற்றி வருகின்றனர்.

எதிர்வரும் ஏப்ரல் மாதமளவில் ஐரோப்பிய ஒன்றியம் விதித்துள்ள மீன் ஏற்றுமதி தடை நீக்கப்படலாம். இதனால், எதிர்காலத்தில் மீன் அறுவடைகளை அதிகரிக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுத்து வருவதாகவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## எதிர்வரும் 09 வரை விளக்கமறியல்



கடந்த 04.02.2016 அன்று கைது செய்யப்பட்ட செலிங்கோ கூட்டு நிறுவனத்தின் தலைவர் லலித் கொத்தலாவலவின் மனைவி சிசிலியா கொத்தலாவலவை எதிர்வரும் 09ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டு உடல் நலம் இல்லை எனத் தெரிவித்த அவர், இரகசிய காவல்துறையினரின் பாதுகாப்பில், கொள்ளுபிட்டியிலுள்ள தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், அவர் குறித்தான விசாரணையின் பொருட்டு, கொழும்பு கோட்டை நீதவான் நேற்று வெள்ளிக்கிழமை அவரை நேரில் சென்று பார்வையிட்டார்.

இரகசிய காவல்துறையினரால் முன்வைக்கப்பட்ட அறிக்கையை கருத்தில் கொண்ட நீதவான், அவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டதோடு, அவர் தொடர்பான மருத்துவ அறிக்கையை சமர்ப்பிக்குமாறும், கொழும்பு நீதிமன்ற வைத்திய அதிகாரிக்கு உத்தரவிட்டார்.

நீதிமன்றத்தில் ஆஜராவதிலிருந்து தவிர்த்து வந்த அவர், வெளிநாடு சென்றிருந்ததோடு, 7 வருடங்களின் பின்னர் அன்றைய தினம் லண்டனிலிருந்து டுபாய் வழியாக இலங்கை வந்த போது கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து குடிவரவு, குடியகல்வு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## கைதான அதிகாரி
## வைத்தியசாலையில்

எம்பிலிபிடிய சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள, எம்பிலிபிடிய பகுதியின் முன்னாள் உதவி காவல் அத்தியட்சகர் டப்ளியூ.சி.தர்மரதன, குருவிட சிறைச்சாலை வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளார். அவரது பாதுகாப்பு தொடர்பிலுள்ள பிரச்சினைகளை கருத்தில் கொண்டே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் நிஷான் தனசிங்க தெரிவித்துள்ளார்.

எம்பிலிபிடிய பகுதியில் காவல்துறையினருடன் இடம்பெற்ற மோதலில் ஒருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட எம்பிலிபிடிய பகுதியின் முன்னாள் உதவி காவல் அத்தியட்சகர் தர்மரத்ன, எதிர்வரும் 17ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். இவரது பதவிக் காலத்தில் கைதுசெய்யப்பட்ட சிலர் குருவிட சிறைச்சாலையில் இருப்பதால், அது தர்மரத்னவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருக்கலாம் என, நிஷான் தனசிங்க குறிப்பிட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு MALAIMURASU
இலங்கைச் செய்திகள்

## தவறு புரிந்தமையை ஒப்புக் கொள்கிறாரா முன்னாள் சனாதிபதி

கொழும்பு

கண்டி கட்டுகஸ்தோட்டை பிரதேசத்தில் அண்மையில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றிய முன்னாள் ஜனாதிபதியும் நாடாளுமன்ற உறுப்பினருமான மகிந்த ராஜபக்ச, "யார் குற்றம் செய்திருந்தாலும் வழக்கு தாக்கல் செய்யுங்கள். தந்தைமார் செய்த தவறுகளுக்காக மகன்மாரை தண்டிக்கும் பழக்கம் நாட்டில் இல்லை.

யோஷித்த உட்பட 5 பேர் பண சலவை சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர். பயங்கரவாதத்திற்கு நிதி வருவதை தடுக்கவே நாங்கள் அந்த சட்டத்தை அமுலுக்கு கொண்டு வந்தோம். குப்பையான கோப்புகளை தேடிக்கொண்டிருக்காமல், ஆட்களை கொண்டு வேலையை ஆரம்பியுங்கள் என்று இந்த அரசாங்கத்திடம் கேட்டுக் கொள்கிறேன்" என மகிந்த ராஜபக்ஸ குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு முன்னரும் பல முறை தான் தவறிழைத்ததாகவும் தனது பதவிக்காலத்தில் மோசடியாளர்களை நெருக்கமாக்கி கொண்டதால், தவறு நேர்ந்ததாகவும், ஆனால் தான் தவறு செய்யவில்லை எனவும் பலதடவைகள் கூறியிருந்தார்.

இதன் மூலம், தான் தவறு செய்திருப்பதை முன்னாள் ஜனாதிபதி ஒப்புக் கொண்டுள்ளதாக அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

## ஊடகவியலாளர் விசாரணையில்

### புங்குடுதீவு மாணவி கொலை தொடர்பில் உண்மை வெளிப்படுமா

புங்குடுதீவு



புங்குடுதீவு மாணவி கொலை வழக்கில், நீதிமன்றத்துக்கு வெளியில் வைத்து சந்தேகநபர்கள், காவல்துறையினர் ஒருவருக்கு கொலை அச்சுறுத்தல் விடுத்ததாக வெளியிடப்பட்ட செய்தி தொடர்பில், அச்செய்தியுடன் தொடர்புடைய ஊடகவியலாளர், ஊர்காவற்றுறை காவல் நிலையத்தில் நேற்று வெள்ளிக்கிழமை (05) விசாரிக்கப்பட்டார்.

மாணவி கொலை வழக்கு மன்றில் நடைபெற்ற பின்னர் வெளியில் வந்த சந்தேகநபர்கள், ஊர்காவற்றுறை காவல் நிலையத்தைச் சேர்ந்த காவல் உத்தியோகத்தர் ஒருவரை கொலை செய்யப்போவதாக மிரட்டியதாக, யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் பத்திரிகையில் செய்தி வெளியிடப்பட்டது. அந்தச் செய்தி தொடர்பில விளக்கமளிப்பதற்காகவே, குறித்த ஊடகவியலாளர் விசாரணைக்கு அழைக்கப்பட்டு, சுமார் 3 மணித்தியாலங்கள் வரையில் விசாரணை இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மனித உரிமைகள் ஆணையாளரை சந்திப்பதாக தீர்மானம் – காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்கள்

யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொள்ளவுள்ள ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளரை சந்திப்பதற்கான ஏற்பாடுகளை செய்து தருமாறு காணாமற்போனோரின் உறவினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.


தமது கோரிக்கை அடங்கிய இரண்டு மகஜர்களை யாழ்ப்பாணத்திலுள்ள ஐ.நா. அலுவலகத்திடமும் வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனிடமும் அவர்கள் சமர்ப்பித்துள்ளதாக தெரிய வந்துள்ளது. காணாமற்போனவர்களின் உறவினர்கள் யாழ்ப்பாணத்தில் கூடி கலந்துரையாடிய போது தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்களும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொள்ளவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரை சந்தித்து தமது நிலைமை குறித்து தெளிவுபடுத்துவதற்கு காணாமற்போனவர்களின் உறவினர்கள் இதன்போது தீர்மானித்துள்ளனர்.



## உறவுப்பாலத்தை புதுப்பிக்க ஆவல் – பிரதமர்

ஸ்ரீலங்காவிற்கும் சீனாவிற்கும் இடையிலான இருதரப்பு உறவினை புதுப்பிப்பது தொடர்பில் இந்த வருடம் நடவடிக்கை எடுக்கவுள்ளதாக பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார். அந்நாட்டின் அரச ஊடகமான சின்சுவாவிற்கு அனுப்பிவைத்துள்ள வாழ்த்துச் செய்தியில் பிறக்கவுள்ள புதுவருடம் சமாதானம் மற்றும் செழிப்பு மிக்கதாக அமையவேண்டுமென வாழ்த்துவதாக பிரதமர் தெரிவித்துள்ளார். அத்துடன் அண்மையில் சீனாவுடனான உறவினை புதுப்பிக்க விரும்புவதாகவும் இந்த புத்தாண்டிலிருந்து சுமூகமான உறவினை பேண விரும்புவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## குற்றம் நிரூபிக்கப்பட்டால் சொத்துக்கள் அரசுடைமையாகும்



யோஷித்த ராஜபக்ச உள்ளிட்ட சிலர் மீது சுமத்தப்பட்டுள்ள கறுப்பு பணத்தை வெள்ளையாக்கிய குற்றச் சாட்டு மேல் நீதிமன்றத்தில் நடத்தப்படும் வழக்கு விசாரணைகளில் உறுதிப்படுத்தப்பட்டால், அவர்களின் குடும்ப சொத்துக்கள் அனைத்தும் அரசு உடமையாக்கப்படும் என தெரியவருகிறது.

பண சலவை சட்டத்தின் கீழ் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, அந்த குற்றச் சாட்டு நிரூபிக்கப்பட்டால், குற்றவாளிகளுக்கு இந்த தண்டனை விதிக்கப்படும்.

அதேவேளை தற்போது விசாரணைகள் நடத்தப்பட்டு வரும் ஷிராந்தி ராஜபக்ச நடத்தி வந்த சிரிலிய சவிய என்ற அரசசார்பற்ற நிறுவனத்-திற்கு எப்படி பணம் கிடைத்தது என்ற பல சந்தேகமான நிலைமைகள் காணப்படுவதாக தெரியவந்துள்ளது.

சீ.எஸ்.என் தொலைக்காட்சி மற்றும் சிரிலிய சவிய அமைப்பு ஆகியவற்று வெளிநாடுகளில் இருந்து பெருந்தொகை பணம் கிடைத்துள்ளது.

அந்த பணத்தை வேறு நாடுகளில் வைப்புச் செய்து, அந்த பணத்தை இலங்கையில் நடத்தப்படும் திட்டங்களுக்காக அனுப்பி வைத்ததன் மூலம் வெள்ளை பணமாக மாற்ற முயற்சித்துள்ளமை தெளிவாகியுள்ளது.

பண சலவை தடுப்புச் சட்டத்தின் மூன்றாவது பந்திக்கு அமைய இந்த குற்றச்சாட்டை எதிர்நோக்கும் நபருக்கு 5 முதல் 20 வருடகாலம் வரை சிறைத் தண்டனையை வழங்க நீதிமன்றத்திற்கு அதிகாரம் உள்ளது.

மேலும் மோசடி செய்யப்பட்ட பணத்தை விட மூன்று மடங்கு பணத்தை அவர்களிடம் இருந்து அபராதமாக பெற முடியும் என்பதுடன் நபர்களின் சொத்துக்களையும் அரசுடமையாக்க முடியும் என அந்த பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## போதிய வசதியின்மையினால் மக்கள் அல்லல்

யாழ்ப்பாணம்



வலி. வடக்கில் விடுவிக்கப்பட்ட பகுதிகளில் போதிய வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை என்பதை காரணம் காட்டி பெரும்பாலான குடும்பங்கள் இன்னமும் தமது சொந்த நிலங்களுக்கு செல்லாமல் தற்காலிக முகாம்களிலேயே தங்கியுள்ளனர். இக் குடும்பங்கள் உடனடியாக மீள்குடியேறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று தெல்லிப்பழை மற்றும் கோப்பாய் பிரதேசங்களுக்கான ஒருங்கிணைப்பு குழு கூட்டங்களில் பாதிக்கப்பட்ட மக்கள் சுட்டிக்காட்டியிருக்கின்றனர்.

மேலும் மீள்குடியேற்றத்திற்காக அனுமதிக்கப்பட்ட பகுதிகளில் மக்கள் சென்று குடியேறுவதற்கான வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும் என பாதிக்கப்பட்டிருக்கும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

## சர்வதேச நாணய நிதியத்திடம் உதவி கோரியது அரசு

சர்வதேச நாணய நிதியத்திடம் ஸ்ரீலங்கா உதவி கோரியுள்ளதாக இலங்கை மத்திய வங்கியின் திறைசேரி அதிகாரி ஒருவர் தெரிவித்தார். உலக வங்கியிடம் ஒரு பில்லியன் நிதியுதவி கோரப்பட்டுள்ள நிலையில் தற்போது சர்வதேச நாணய நிதியத்திடமும் உதவி கோரப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

உள்ளக அபிவிருத்தி மற்றும் எரிபொருள் மானியம் ஆகிய தேவைகளை உள்ளடக்கி சர்வதேச நாணய நிதியத்திடம் உதவி கோரப்பட்டுள்ளது என்றும் அதற்கான பேச்சுக்கள் நடத்தப்படும் என்றும் திறைசேரி அதிகாரி குறிப்பிட்டார்.

சென்மதி நிலுவை பற்றாக்குறை இடைவெளி அதிகரித்துச் செல்லும் நிலையில் அதனை கையாள்வதற்கு உதவியாக புதிய பிணை மீட்புப் பொதியை சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து பெற்றுக்கொள்வதற்கு ஏற்றமுறையிலும் நிதியமைச்சு அதிகாரபூர்வமாக கோரிக்கை விடுத்துள்ளது என்றும் அந்த அதிகாரி கூறினார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச அரசாங்கம் 2009ஆம் ஆண்டு 2.6 பில்லியன் நிதியை கடனாக பெற்றிருந்தது. அத்துடன் 2011ஆம் ஆண்டு எரிபொருள் மானியத்தை வழங்க பணத்தை மேலதிகமாக அச்சிட நேரிட்டதால் சென்மதி நிலுவை நெருக்கடி ஏற்பட்டது. இதன் காரணமாக சர்வதேச நாணய நிதியத்திடம் நிதியுதவியை கோர வேண்டிய தேவை ஏற்பட்டதாக உயர் அதிகாரி தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU

# உலகச் செய்திகள்

## 60000 பேர் இருக்குமிடத்தில் 80,000 பேர் தஞ்சம்

ஜோர்டான்

ஐக்கிய நாடுகள் மன்றத்தினால் பதிவு செய்யப்பட்டுள்ள 4.6 மில்லியன் சிரியா அகதிகளில் ஜோர்டான் அரசு மட்டும் 6 லட்சம் பேருக்கு தஞ்சம் அளித்துள்ளது. தஞ்சமடைந்துள்ள இந்த அகதிகளை ஜோர்டான் அரசு அங்குள்ள பாலைவனத்தில் அமைந்துள்ள முகாமில் தங்க வைத்துள்ளது. 60 ஆயிரம் பேர் மட்டுமே தங்குவதற்கு உகந்த அந்த முகாமில் தற்போது 80 ஆயிரம் பேர் குடியிருப்பதாக கூறப்படுகிறது.

தஞ்சம் புகுந்துள்ள அகதிகளால் தம் நாடு வளர்ச்சியில் பின்தங்குவதாகவும், இது அகதிகளுக்கு எதிரான கிளர்ச்சியை ஜோர்டான் மக்களிடையே உருவாக்கலாம் என தமது அச்சத்தையும் அந்நாட்டு அரசர் அப்துல்லா வெளிப்படுத்தியுள்ளார். மேற்கத்திய நாடுகள் அகதிகள் விவகாரத்தில் உடனடியாக தீர்வுக்கு வர வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.



## அஸ்ஸானை கைப்பற்றியது அல் – கொய்தா

ஏமன்



ஏமன் நாட்டில் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் அரசு படைக்கு எதிராக சண்டையிட்டு வருகிறது. மறுபுறம் அல்–கொய்தா தீவிரவாதிகளும் சண்டையில் குதித்தனர். இதனால், அரசு படைகளுக்கு ஆதரவாக அமெரிக்க போர்விமானங்கள் குண்டு வீசி தாக்குதல் நடத்தியது. கடந்த ஏப்ரல் மாதம் அமெரிக்காவின் ஆளில்லாத விமானம் ஏமனில் நடத்திய தாக்குதலில் அல்–கொய்தா தீவிரவாத இயக்கத்தின் முக்கிய தலைவர்களில் ஒருவரான இப்ராகிம் அல்–ருபாய்ஷ் பலியானார். இது இயக்கத்தினரால் உறுதிப்படுத்தப்பட்ட செய்தியாகும்.

இந்நிலையில் ஏமனின் அஸ்ஸான் நகரை அல்-கொய்தா தீவிரவாதிகள் கைப்பற்றி உள்ளனர் என்று செய்திகள் வெளியாகி உள்ளது. 70,000 மக்கள் தொகை கொண்ட மலைப்பகுதியான அஸ்ஸான் நகரை தீவிரவாதிகள் கைப்பற்றினர் என்று அங்குள்ள மக்கள் தெரிவித்து உள்ளதாக செய்திகள் வெளியாகி உள்ளது. இதுதொடர்பான தகவல்களை வெளியிட அதிகாரப்பூர்வமான அதிகாரிகள் நாங்கள் கிடையாது என்று தீவிரவாதிகள் மறுத்துவிட்டதாக செய்திகள் வெளியாகியுள்ளது.

## தரைப்படையை அனுப்ப நாம் தயாராகவுள்ளோம்

சவுதி

ஐக்கிய அமெரிக்கா தலைமையிலான கூட்டணித் தலைமைகள் அனுமதி அளிக்கும் பட்சத்தில் ஐ.எஸ்.ஐ.எஸ் இற்கு எதிராக தரைப்படையை அனுப்ப தாம் தயாராகவுள்ளதாக சவுதியின் இராணுவப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். எனினும் எத்தனை படைவீரர்களை அனுப்பவுள்ளனர் என்பது குறித்த எதுவித தகவல்களும் வெளியிடப்படவில்லை.

ஏற்கனவே அவர்களுக் கெதிராக சவுதியின் விமானப் படை இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இருப்பினும் இது குறித்து, ஐ.எஸ்.ஐ.எஸ் இற்கு எதிராக போராடும் கூட்டணி நாடுகளின் பாதுகாப்பமைச்சர்களின் எதிர்வரும் வாரத்தில் பெல்ஜியத்திலுள்ள புருசெல்ஸில் இடம்பெறவுள்ள சந்திப்பில் ஆராயப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

## ரஷ்யா மீது குற்றஞ் சுமத்தும் பிரித்தானியா

ஐ எஸ் ஆயுததாரிகளுக்கு எதிராக போராடுவதற்கு பதிலாக பஷார் அல் அசாத்திற்கு எதிராக போராடுவோர் மீது ரஷ்யா குண்டு தாக்குதல்களை நடத்தி சிரிய நாடொன்றை அவருக்கு அமைத்துக் கொடுப்பதற்கு முயற்சிக்கின்றது என பிரித்தானிய வெளிவிவகார செயலாளர் பிலிப் ஹமெண்ட் குறிப்பிட்டுள்ளார். ஐ எஸ் ஆயுததாரிகளுக்கு எதிராக போரிடுவோர் மீது குண்டுத் தாக்குதல்களை நடத்துவதன் மூலம் சிரியாவின் உள்நாட்டு யுத்தத்தை விளாமடிர் புட்டின் மோசமாக்குவதாக அவர் மேலும் குற்றஞ்சாட்டியுள்ளார்.

## அமெரிக்கர் எப்போதும் உறுதுணையே

அமெரிக்கா

மேரிலேண்ட், பால்டிமோரில் உள்ள மசூதிக்குச் சென்றிருந்த ஒபாமா, அங்கிருந்த முஸ்லிம் சமுதாயத்தினரிடையே உரை நிகழ்த்தியுள்ளார். இதன்போது, முஸ்லிம்களுக்கு எதிரான டோனல்ட் ட்ரம்பின் கூற்றுக்குத் தனது கண்டனங்களை வெளியிட்டதுடன், மத நம்பிக்கைகளுக்கு எதிரான பரப்புரைகளை ஒருபோதும் அமெரிக்க மக்கள் பார்த்துக்கொண்டிருக்க மாட்டார்கள் எனவும் ஒபாமா தெரிவித்துள்ளார்.

மேலும், பயங்கரவாதத்தை ஒழிக்கும் நடவடிக்கையை முன்னெடுக்கும் போது இஸ்லாமை ஒடுக்காமல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றமையை உலகிற்கு நிரூபிக்க வேண்டும் எனவும் முஸ்லிம்களுக்கு ஆதரவாக அமெரிக்கர்கள் எப்போதும் உறுதுணையாக இருப்பார்கள் எனவும் தெரிவித்துள்ளார். மேலும் நீங்கள் முஸ்லிம் அல்லது அமெரிக்கர் அல்ல, நீங்கள் முஸ்லிமாகவும் அமெரிக்கராகவும் இருக்கின்றீர்கள், என குறிப்பிட்டுள்ளார் அமெரிக்க அதிபர் ஒபாமா.



## தங்க சுரங்க விபத்து 115வரை காணவில்லை

தென்னாபிரிக்கா

தென்னாபிரிக்காவின் பூமலங்காவில் ஏற்பட்ட தங்க சுரங்க விபத்தில் சிக்கிய 115 தொழிலாளர்கள் குறித்த எதுவித தகவல்களும் கிடைக்கப்பெற வில்லை என அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

உலகிலேயே மிக ஆழமானதாகவும் ஆபத்தானதுமாக தென்னாபிரிக்காவில் உள்ள சுரங்கங்கள் கூறப்பட்டு வரும் நிலையில் இவ்விபத்து ஏற்பட்டதற்கான காரணம் இதுவரை கண்டுபிடிக்கப்பட வில்லை என விசாரணையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

## கசிந்த ஆவணத்தில் வெளிவந்த உண்மை

அவுஸ்திரேலியா



ஆவணத்தில், பயங்கரவாதம் தொடர்பாகவும் அவுஸ்திரேலியாவிலுள்ள தீவிரப்போக்கானவர்களை வெளியேற்றுவது தொடர்பிலும் அவுஸ்திரேலியா எந்தளவு நீட்சிக்கு கரிசனை கொண்டுள்ளது என வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

சிரிய அகதிகளைக் குடியமர்த்தும் திட்டத்தில் பாரிய மாற்றத்தை கொண்டுவரவும் நிரந்த வதிவிடவுரிமையைப் பெறுவதை மேலும் கடினமாக்கவும் புகலிடக் கோரிக்கையாளர்கள் மீதான கண்காணிப்பை அதிகரிக்கவும் அவுஸ்திரேலிய குடியேற்ற அமைச்சர் பீற்றர் டுட்டன் திட்டமிட்டுள்ளதாக கசிந்த அவுஸ்திரேலிய அமைச்சரவை ஆவணமொன்றில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

லேட்லைன் எனப்படும் தொலைக்காட்சி நிகழ்ச்சியினால் வெளிப்படுத்தப்பட்ட, மேற்கூறப்பட்ட பாதுகாக்கப் பட்டது, உணர்ச்சிமிக்கது, அமைச்சரவை என அடையாளமிடப் பட்டுள்ள ஆவணமானது, டுட்டனால் அவுஸ்திரேலிய அமைச்சரவையின் தேசிய பாதுகாப்புச் சபைக்கு கையளிக்க வேண்டியிருந்த நிலையில், அவருக்கான ஆலோசனைகளே இவை என நம்பப்படுகிறது.

இந்நிலையில், மேற்படி ஆவணத்தை, தானோ அல்லது குடிவரவு அமைச்சரோ பார்வையிடவில்லையென அவுஸ்திரேலிய பிரதமர் மல்கொம் டேர்ண்புல் தெரிவித்துள்ளார்.

## மரண தண்டனையிலிருந்து விடுவிப்பு

எகிப்து

எகிப்தின் தலைநகரான கெய்ரோவில், எகிப்திய இராணுவத்தால், அந்நேரம் ஜனாதிபதியாக இருந்த மொஹமெட் மோர்சி, பதவியிலிருந்து அகற்றப்பட்ட போது துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்ட காவல்துறையினரால் நூற்றுக்கணக்கான ஆர்ப்பாட்டக்காரர்கள் கொல்லப்பட்டதை அடுத்து இடம்பெற்ற தாக்குதலில் 13 அதிகாரிகள் கொல்லப்பட்டிருந்தனர்.

இதன் போது கைதான 149 பேருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டிருந்தது. எனினும் கடந்த புதன்கிழமை எகிப்திய மேன்முறையீட்டு நீதிமன்றமொன்று, இவர்களின் மரணதண்டனையை நீக்கியுள்ளதாக எகிப்திய அரசாங்கத்தினால் ஆளப்படும் அல் அஹ்ரம் பத்திரிகை தெரிவித்துள்ளது.

## தடுத்து வைக்கப்பட்டமை நியாயமற்றது

ஜூலியன் அசாஞ் சுயாதீனமாக நடமாட அனுமதிக்கப்பட வேண்டும் எனவும் மறுக்கப்பட்ட சுதந்திரத்திற்காக அவருக்கு நட்ட ஈடு வழங்க வேண்டும் எனவும் ஐக்கிய நாடுகள் சபை தீர்ப்பளித்துள்ளது.

பாலியல் பலாத்கார குற்றச்சாட்டில் சுவிடனுக்கு நாடு கடத்தப்படும் நிலையை 44 வயதான விக்கிலீக்ஸ் ஸ்தாபகர் ஜூலியன் அசாஞ் எதிர்நோக்கியுள்ளார். எனினும் தம் மீதான இந்த குற்றச்சாட்டை அவர் நிராகரித்துள்ளதுடன், 2012ம் ஆண்டு முதல் லண்டனிலுள்ள ஈக்குவடோர் தூதரகத்தில் அவர் அரசியல் தஞ்சம் அடைந்துள்ளார். எனினும் ஜூலியன் அசாஞ்சை கைதுசெய்யும் ஐரோப்பிய பிடியாணை உத்தரவு தொடர்ந்தும் நடைமுறையில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் இவரை நாடு கடத்துவதற்கான சட்டரீதியான கடப்பாட்டை பிரித்தானியா தொடர்ந்தும் கொண்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவில் இருந்து தமிழர்களுக்கு.... மக்கள் முரசு




அமெரிக்காவிற்கு அடுத்து பிரித்தானியாவில் இறங்கிய ஹோசிமின் அங்கேயும் ஒரு உணவுவிடுதியில் கோப்பைகள் கழுவுபராக பணிசெய்து பஸ்ற்றி தயாரிப்பாளராகவும் பணியாற்றியிருக்கிறார். பின்னர் அங்கிருந்து மீண்டும் பிரான்ஸ் க்குள் நுழைந்த ஹோசிமின் அங்கே வியட்நாம் விடுதலையை வலியுறுத்தும் வியட்நாமியர்களின் பத்திரிகைகளில் அவர் ஒரு எழுத்தாளராக இருந்திருக்கிறார்.

அத்துடன் அரசியலையும் அங்கேயே அவர் கற்றார். பின்னர் அங்கிருந்து இரசியா சென்று அங்கே ஒரு மாநாட்டில் கலந்து கொண்டு, அடுத்து சீனாவுக்குள் நுழைந்தார். சோசலிஸ்ட் புயல் அடித்துக் கொண்டிருந்த காலம். வியட்நாமுக்காக சீனா இரசிய பாடுபட்டுக் கொண்டிருந்த காலத்தில் அங்கே பயிற்சியும் எடுத்து பயிற்சிகளை போராளிகளுக்கு வழங்கும் ஒருவராக, ஒரு தலைமை நிலைக்குள் வந்தார் ஹோசிமின். சீனாவிலேயே ஒரு பெண்ணை திருமணம் செய்தார் என்று தகவல்கள் சொன்னாலும். இல்லை அவர் திருமணம் செய்யவில்லை என்றும் சொல்கிறார்களாம். என்னவோ பண்ணுங்க.

அதே சீனாவின் அரசியல் குழப்பநிலைகள் காரணமாக இவர் கைதுசெய்யப்பட்டு பல சித்திரவதைகளுக்குள்ளும் ஆளாக்கப் பட்டிருக்கிறார். ஆனால் இதே சீனா வியட்நாம் விடுதலையை தாங்கிப் பிடித்தது பின்னைய வரலாறு. அங்கே சிறைகளுக்குள் அவர் இருக்கின்ற பொழுதுதான் தன்னை அவர் மெருகேற்றிக் கொண்டிருக்கிறார். சிந்தித்து இருக்கிறார். தனது வருங்கால சுதந்திர வியட்நாம் தேசம் பற்றி கனவும் கண்டிருக்கிறார். அதனோடு நிற்காமல் அவர் எழுதிய "சிறைக் குறிப்புகள்" மிகவும் பிரபலமடைந்தது என்பதற்கப்பால் வடக்கு தெற்கு வியட்நாமியர்களை கொதித்து எழச்செய்தது. வீறு கொண்டு எழச்செய்தது. வியட்நாம் தேச எல்லைகள் கடந்தும் ஆசிய ஆபிரிக்க சுதந்திர இயக்கங்களுக்குள் தீயை பரவச் செய்கின்ற வாசகங்களாக அந்த சிறைக்குறிப்புகள் மாறிக் கொண்டன. பல மொழிகளில் மொழி பெயர்க்கப் பட்டு விற்று தீர்ந்தன அவை.

அவரது குறிப்புகள் பற்றி அவர் சொன்ன சின்ன விடயம் "தனித்த இருள் சூழ்ந்த அறையில், எனது நிழலே எனக்குத் துணையாக நான் வாழ்ந்த காலத்தில், வேறு யாருடனும் பேசத் தடை விதிக்கப் பட்டிருந்த காலத்தில், வேறு எதனையும் செய்ய எனக்குத் தோன்றவில்லை." முக்கியமான விடயம் யாதெனில் சீன காவற்றுறையினர் தன்னை சந்தேகம் கொள்ளக் கூடாது என்பதற்காக அந்த சிறைக் குறிப்புகளை சீன மொழியிலேயே எழுதினார் என்பது அவரது பன்மொழித் திறமையை வெளிக்காட்டுகிறது.

இப்படி காலம் உருவாக்கிய தலைவர், ஒரு காலத்தை தனக்காக உருவாக்கிக் கொண்டார். 1940 இல் சீன எல்லையில் வைத்து வியட்நாம் போராளிக் குழுக்களுடன் தொடர்பை ஏற்படுத்தி, பின்னர் வியட்நாம் திரும்பிய அவர்



பிரான்ஸ் க்கு எதிரான சுதந்திரப் பிரகடனம் செய்துகொண்டார்.

1941 இல் வியட்நாம் வடக்கு மாநிலத்தின் ஒரு மறைவான மலைத்தொடரில் உருமறைக்கப்பட்ட பெரிய குகை அமைத்து அங்கே போருக்கான ஆயத்தங்கள், ஒருங்கிணைப்புகளை செய்தார். 1942 ஆம் ஆண்டு சீன ரசியாவின் உதவிகளைப் பெற அவர் மீண்டும் சீனாவுக்குள் நுழைந்த பொழுதில்தான், அவர் தவறுதலாக ஒற்றன் என கருதப்பட்டு கைது செய்யப்படுகிறார்.

# நிகழ்வுகள்

## மட்டக்களப்பில் மகுடம் அனுசரணையில் "கண்ணாடி" அறிமுக நிகழ்வு

மகுடம் கலை இலக்கிய வட்டத்தின் ஆதரவில் கடந்த 30 - 01 - 2016 அன்று நடைபெற்ற கண்ணாடி தமிழ் மாத இதழ் அறிமுக நிகழ்வும் "சிற்றிதழ்கள் செய்தவையும் - செய்ய வேண்டியவையும்" இடம்பெற்றது.

மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமாகிய இந்நிகழ்வில் கிழக்குப் பல்கலைக் கழக மொழித் துறை தலைவர் திருமதி ரூபி வலண்டீனா பிரான்சிஸ் சிறப்புரை ஆற்றினார். முன்னாள் வடக்கு கிழக்கு மாகாண கலாசார பணிப்பாளர் கலாபூசணம் செ.எதிர் மன்ன சிங்கம் விமர்சன உரையை நிகழ்த்தி வைத்ததுடன் கண்ணாடி மாத இதழின் ஆசிரியர் இரா.ஸ்ரீஞானேஸ்வரன் அவர்களால் தலைவருக்கும் ஏனைய அதிதி-களுக்கும் பிரதிகள் வழங்கி வைக்கப்பட்டன. அத்துடன் ஆசிரியரால் ஏற்புரையும் நிகழ்த்தப்பட்டது.

இந்நிகழ்வினை மகுடம் இதழின் ஆசிரியர் திரு. மைக்கல் கொலின் அவர்கள் ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.






## நூல் வெளியீடு விழா

**ஜே.பிரோஸ்கானின் காக்கைச் சிறகினிலே நந்தலாலா (சிறுவர் பாடல்கள்)** மற்றும் **பேனா காலாண்டு - இலக்கியச் சஞ்சிகை** எனும் இரு நூல்களின் வெளியீட்டு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை கிண்ணியா பொது நூலகக் கட்டிடத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வினை முன்னாள் நகரசபை பிரதித் தலைவர் கிண்ணியா சபருள்ளா அவர்கள் தலைமை தாங்கினார். அத்துடன் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ அப்துல்லா மஃரூப் அவர்கள் பிரதம அதிதியாக கலந்து சிறப்பி-த்தமை குறிப்பிடத்தக்கது.

நிகழ்வில் நூல்கள் குறித்த பல விடயங்கள் பேசப்பட்டன. ஆசிரியரது உரையுமும் இடம்பெற்றது.





## "யாழ்ப்பாண நினைவுகள்" அறிமுக நிகழ்வு

வேதநாயகம் தபேந்திரனின் "யாழ்ப்பாண நினைவுகள் பாகம் - 2" நூலின் அறிமுக நிகழ்வு திருகோணமலை ஜெசுவிட் ஆங்கில கலாசாலையில் நீங்களும் எழுதலாம் ஆசிரியர் எஸ்.ஆர்.தனபாலசிங்கம் தலைமையில் 31.01.2016 ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெற்றது. எஸ்.ஆர்.தனபாலசிங்கம் அவர்களின் வரவேற்புரையுடன் ஆரம்பமான இந்நிகழ்வில் கலாச்சார உத்தியோகத்தர் வி.குணபாலா, வாழ்த்துரைகளை வழங்கியதுடன் எழுத்தாளான நந்தினி சேவியர், கவிஞர் ஷெல்லி தாசன் மாவட்ட சமூக சேவை அலுவலர் பிரகலா சுதர்சன் ஆகியோர் நூலின் அறிமுக உரையினையும் வழங்கினர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவி முரசு



## தீர்ப்பிடாய்!!!

இப்புவி மாந்தர், எண்ணொணா வகையார்!
அப்பனார் ஒருவகை அம்மையார் ஒருவகை!
மக்களார் ஒருவகை மற்றுளார் ஒருவகை
தக்கவர் ஒருசிலர் தகாதவர் பற்பலர்!
ஆவிபோம் வரையும் அநாதைத்தராதரம்!
ஆவி அகன்றபின் அற்புதச்சடங்கு!
காசிலே தான் கண் கறப்பதே அரும்பணி!
ஆசைகள் அதிகம் அறமிலா உழைப்பு!

"வேலொடு நின்றான் "இடு" என்பது போல்
கோலொடு நின்றான் இரப்(பு) எனுமாம் குறள் (552)
அதுபோல் நாணம் அகற்றிய ஒருசிலர்
இது தான் சமயம் எனப்பணம் கேட்பார்!
"நல்ல சமயமாம்" நழுவிடக்கூடா!
ஏல்லாம் பணமெனில் எமக்கொரு மதிப்பாம்!
என்று நினைப்போர் இருந்தார் அன்றும்
இன்றுமே உள்ளார் இறைவா தீர்ப்பிடாய்!

-- கிழவன் --

## செந்தமிழே!

மூச்சும் பேச்சும் தமிழானால்
முதலும் முடிவும் தமிழானால்
வீச்சும் பூச்சும் பா வானால்
வீறும் கூறும் பா வானால்?

தமிழினம் உயரும் வல்லினமாய்
தலைகீழாகும் தீமையெல்லாம்!
அமுதாய் இனிக்கும் அரிய தமிழ்
அழகில் எதுவும் நிகராகா!

போனது போகப் புதிதாவோம்
பொன்போல் தமிழைக் காத்திடுவோம்!
ஆனதை எல்லாம் ஆக்கிடுவோம்
அற்புதக்குறளின் வழி நடப்போம்!

நாடுவதெல்லாம் தமிழ் நாட்டம்
நடைமுறையெல்லாம் தமிழோட்டம்!
தேடுதல் எல்லாம் தமிழ்த்தேட்டம்
தெரிவன வெல்லாம் செந்தமிழே!

– தாமரைத்தீவான்–
[ஈச்சந்தீவு, கிண்ணியா]




## நீ எங்கே என் அன்பனே ....?

- மாயன் -

உன்னுள்ளே பார்

வெறிச்சோடிக் கிடக்கும்
மயானவெளியில் - விருப்பக்
கல்லறைகள்

இன்னும் ஆழப் புகு...

உக்காத எலும்புகள்
பற்கள் - மண்டை
ஓடுகள்...

இன்னும் உள்ளே புகப் புக...

உன்
ஊன் தின்று உடல்
வளர்த்த புழுக்களைத்
தாண்டி...

வெறும் மண்...

ஒருகையில் அள்ளு - உன்
பெயர் சூட்டு - அது
நீதான் எனக் கொண்டாடு

அக் கணம்
அக்கணமே...
ஆயிரம் பேர்வருவர்
அம் மண் தாமென
எனில்
நீ எங்கே
இருக்கின்றாய்...?

## பொங்கல் பொங்க

கலாபூஷணம். சி.என் துரைராசா

"சேறு வளர் காய் நெல்
கழனிமா அத்து விளைந்து உருதிப்பழம்
கன்னல் கரும்பும் வாழைப்பழம்
கருநாகு பாலும் நெய்யுமாய்
நீறு சாந்தம் குங்குமம் பன்னீர் தெளித்து
கும்பம் வைத்து குத்து விளக்கேற்றி
நறுமலர்கள் நால்வகை பரப்பி
அம்பலத்து ஆடும் அரனகழல் போற்றி
வைகறைப் பொழுதில் இழையென
எந்தையும் நுங்கையும் தாழ்பணிந்து
லந்தனம் செய்து வாய்மை கொண்டு
செந்தமிழ் பொங்கல் சிறப்புடன்
முக்கல்லில் மேல் முத்தமிழ்
பொங்கல் பொங்கிட ஒக்கல்
இனியே பொங்க வாரீர்! வாரீர்!!"



## சாதனை படைத்திடாத சம்பவங்கள்

கவிக்குயிலன். சேனையூர்

சூதாட்ட அரசியல்
சுழியோட்டும் ஊழல்:
ஆதாயம் தேடும் கலப்படம்
ஆதிகாரம் மேயும் மீறல்:
ஓதப்படும் இனவாதம்
உரிமை மறுக்கும் வன்மம்:
காமந் தரும் போதை
காலங் கடத்தும் விசாரணை:
சேதமாக்கும் மோதல்கள்
செயற்பாடற்ற வாக்குறிதிகள்:
சாதகப் பொருத்தமற்ற
தாம்பத்திய இணைப்பு:
ஆதாயமற்ற வியாபாரம்
அன்பேயில்லாத அரவணைப்பு:
சாதனை படைத்திடும்
சரித்திரங்கள் அல்ல:

# இராஜராஜ சதுர்வேதி மங்கலம் (கந்தளாய்)



கடந்தவார தொடர்ச்சி ....

### பளமோட்டைச் சாசனம்

இவர்கள் சேவைமானியமாக நிலங்களைப் பெற்றிருந்தனர். இவ்வாறான படைப்பிரிவுகளில் ஒன்றான விக்கிரம சாலமேகத் தெரிந்த வலங்கை வேளைக்காறர் என்னும் படைப்பிரிவிடமே நங்கை சானி மேற்கூறிய தானங்களை மேற்பார்வை செய்யும் பொறுப்பினை ஒப்படைத்திருந்தார். இச்செய்தி மூலம் அந்த பிராமணப்பெண் செல்வ வழத்துடன் , அரசியல் செல்வாக்கும் கொண்டவளாக இருந்தாள் என்பது புலனாகிறது.

முதலாம் விஜயபாகுவின் காலத்து நங்கை சானியின் கல்வெட்டுக்குப் பின்னர் இப்பிராமணக் குடியேற்றம் தொடர்பில் கிடைக்கும் அடுத்த தகவல் இரண்டாம் கஜபாகு(கி.பி 1132-1153) மன்னன் காலத்திற்குரியது. இக்கல்வெட்டு ஒரு எல்லை நிர்ணயம் தொடர்புடையது. இலங்கேஸ்வரன் எனப்போற்றப்பட்ட கஜபாகு மன்னன் தேவர் என்ற அடைமொழியால் இதில் அழைக்கப்படுகிறார். சைவச்சார்புடையவனாக நடந்து கொண்ட இச்சிங்கள மன்னன் திருக்கோணேஸ்வர ஆலயத்திற்கு ஆதரவு கொடுத்தவன் என்பது குறிப்பிடத்தக்கது.


இம்மன்னனுடைய ஆட்சிக்காலத்தில் கந்தளாயில் இருந்த பிரம்மதேயமான பிராமணக் குடியிருப்பில் இடையர்கல் எனும் இடத்தில் ஊர் மக்களால் எல்லைக்கல் நாட்டப்பட்டது. இதற்காக குறிக்கப்பட்ட இடத்தில் நீர் ஊற்றி அவ்விடத்தில் பெண்யானையினை நடக்கச் செய்து, யானை உழக்கிய இடத்தில் எல்லைக்கல் நாட்டப்பட்டதை இக்கல்வெட்டு குறிப்பிடுகிறது. கந்தளாய் பிரம்மதேயத்தின் எல்லைதனை நிர்ணயிக்க வேண்டிய தேவை ஏன் ஏற்பட்டது என்பதனைக் இக்கல்வெட்டு கூறாது போனாலும் கஜபாகு மன்னன் காலத்திலும் அரச ஆதரவுடன் இது நிலைபெற்றிருந்ததை அது உறுதிப்படுத்துகிறது.

### திருப்பள்ளியெழுச்சியுடன் தொடர்புடைய கந்தளாய்ச் சாசனம்

இதற்கு அடுத்ததாக கந்தளாய் பிரம்மதேயம் தொடர்பில் தகவல்தரும் சாசனம் அபயசாலமேகவர்மர் என வர்ணிக்கப்படுகிற சக்கரவர்த்தி ஜயபாகு தேவரின் 35ம் ஆண்டுகளுக்குரியது(கி.பி 1145). இக்கல்வெட்டு விஜயராஜ சதுர்வேதி மங்கலத்தில் (கந்தளாய்) அமையப்பெற்றிருந்த விஜயராஜேஸ்வரமுடையார்க்கு திருப்பள்ளியெழுச்சி பாடப்படும் போது மந்த்ரபோனகம் இடுவதற்கென பத்துக்காசுகள் வழங்கப்பட்டதைக் குறிப்பிடுகிறது.




இதுவரை இலங்கையில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டுக்களில் இதில்தான் முதன் முறையாக திருப்பள்ளியெழுச்சி, திருப்போனகம் (கடவுளுக்குப் படைத்த அமுது) என்னும் சொற்பதங்கள் பயன்படுத்தப் பட்டுள்ளதாக பேராசிரியர் பத்மநாதன் அவர்கள் குறிப்பிடுகிறார். சோழப் பேரரசில் தேவாரங்களைப் பாடுவதற்கு ஓதுவார்கள் நியமிக்கப் பட்டதையும், அவர்களைக் கவனிக்கும் பொறுப்பு தேவாரநாயகம் என்ற அதிகாரியிடம் ஒப்படைக்கப் பட்டதையும் கல்வெட்டுக்கள் மூலம் அறியமுடிகிறது.



தொடரும்.. .. ..

வைத்திய கலாநிதி த.ஜீவராஜ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரபாகரனின் சாள்ஸ் அண்டனியும் - ராசபக்சவின் யோசித்தவும்

யோசித கடற்படையில் இணைந்த போது, ஏனைய உலகத் தலைவர்கள் போலல்லாது தான் தனது மகனை இந்த நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் யுத்தத்தில் பங்கெடுக்க ஒப்படைத்துள்ளேன் என மகிந்த பெருமையுடன் அறிவித்தார். மகிந்தவின் இந்த அறிவிப்பின் பின்னர் பௌத்த மகா சங்கம் மகிந்தவை உண்மையான நாட்டுப்பற்றாளர் எனக் கௌரவப் படுத்தியது.

மகிந்த தனது மகனைக் கடற்படையில் இணைத்த போது, தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் மகனான சாள்ஸ் அன்ரனி ஏற்கனவே சிறிலங்காப் படைகளுக்கு எதிராக வன்னிக் காடுகளில் இடம்பெற்ற யுத்தத்தில் பங்கு கொண்டிருந்தார்.

நோர்வே அனுசரணையுடன் சிறிலங்கா அரசாங்கத்திற்கும் புலிகள் அமைப்பிற்கும் இடையில் மேற்கொள்ளப்பட்ட சமாதான முன்னெடுப்புக்கள் முறிந்த பின்னர், மகிந்த ராஜபக்சவால் ஆரம்பிக்கப்பட்ட செய் அல்லது செத்து மடி என்கின்ற யுத்தத்தில் பிரபாகரன் தனது மகனையும் பங்கேற்க வைத்தார். தமிழீழ விடுதலைப் புலிகளின் வான் தாக்குதல் நடவடிக்கைகளை சாள்ஸ் அன்ரனி பொறுப்பெடுத்து நடத்தியதாக கூறப்பட்டது.

கே.பி என அறியப்படும் குமரன் பத்மநாதனின் அண்மைய கூற்றின் பிரகாரம், தனது அப்பா, அம்மா, சகோதரி மற்றும் இளைய சகோதரன் ஆகியோரை பாதுகாப்பான வெளிநாடொன்றுக்கு அனுப்பி வைக்குமாறு கே.பியிடம் சாள்ஸ் அன்ரனி கோரியிருந்தார். சாள்ஸ் அன்ரனி தனது தந்தையான பிரபாகரனிடம் வடக்கை விட்டு வெளியேறி பாதுகாப்பாக வெளிநாட்டிற்குச் செல்லுமாறு மீண்டும் மீண்டும் கோரிக்கை விடுத்த போதும் புலிகளின் தலைவர் பிரபாகரன் அதற்கு செவிசாய்க்கவில்லை என கே.பியிடம் சாள்ஸ் அன்ரனி முன்னர் தெரிவித்திருந்தார்.

எனினும், போர் இடம்பெற்ற போது யுத்த களத்திலிருந்து தப்பிச் செல்லாது தனது மகனுடன் இணைந்து போரின் தோல்வியை எதிர்கொள்ள வேண்டும் என்கின்ற பிரபாகரனின் உறுதிப்பாடானது அவர் தனது அமைப்பிற்காகச் செய்த மிகப்பாரிய அர்ப்பணிப்பாகும். இறுதியில், போரில் கொல்லப்பட்ட சாள்ஸ் அன்ரனியின் உடலம் இராணுவத்தால் கண்டெடுக்கப் பட்டது.

இதற்கு மாறாக, மகிந்த தனது அரசியல் நலன்களைப் பெற்றுக் கொள்வதற்காகவே யோசிதவை கடற்படையில் இணைத்திருந்தார். யோசித இந்த நாட்டைப் பாதுகாப்பதற்காகத் தன்னை ஒருபோதும் யுத்தத்தில் அர்ப்பணிக்கவில்லை. போர்க் காலத்தில் யோசித என்ன செய்தார் என்பது எவருக்கும் தெரியாது. போர் வலயத்திற்குள் யோசித காலடி எடுத்து வைத்தாரா என்பதற்கான எவ்வித சமிக்கையும் இல்லை.

மைத்திரி-ரணில் அரசாங்கம் இந்த நாட்டைப் பொறுப்பெடுத்த பின்னர், போர்க் காலத்தில் யோசித என்ன செய்தார் என்பதை விசாரணை செய்வதற்கான மூன்று உறுப்பினர்களைக் கொண்ட ஆணைக்குழு நியமிக்கப்பட்டது.

பிரபாகரன் ஒரு பயங்கரவாதத் தலைவராக இருந்த போதிலும் அவர் தனது சொந்தச் சமூகத்திற்கு துரோகம் இழைக்க ஒருபோதும் நினைக்கவில்லை. பிரபாகரனின் அர்ப்பணிப்பு மனோநிலைக்கு மாறாக, மகிந்தவின் போலித்தனமான தேசப்பற்று எவ்வாறு அமைந்துள்ளது என்பதை யோசித மீதான ஆணைக்குழுவின் விசாரணை சுட்டிநிற்கிறது.

சிறிலங்கா கடற்படையில் இணைவதற்கான சட்டஒழுங்கு விதிகளை மீறி, ராஜபக்சவின் மகனான யோசித கனிஸ்க ராஜபக்ச உக்ரேய்ன் அரசாங்கத்தின் சுயஆதரவு வெளிநாட்டு வர்த்தக மற்றும் முதலீட்டு நிறுவனமான ருமசஜெயசளா இன் நிதி ஆதரவுடன் 13 மாத பயிற்சியைப் பெற்றிருந்தார். இது மட்டுமல்லாது, மருத்துவ சார் முனைவர் பட்டத்தைப் பெறுதல் உட்பட மூன்று வெவ்வேறு துறைசார் பயிற்சி நெறிகளையும் யோசித பெற்றிருந்தமை ஆணைக்குழுவின் விசாரணையின் இறுதியில் கண்டுபிடிக்கப்பட்டது.

இவ்வாறான துறைசார் பயிற்சிகளை யோசித பெற்றுக் கொள்வதற்கு, ரஸ்யாவுக்கான சிறிலங்காவின் முன்னாள் தூதுவரும் ராஜபக்சவின் சொந்த மைத்துனருமான உதயங்க வீரதுங்கவே காரணம் எனவும் அறியப்பட்டது. வீரதுங்க ஏற்கனவே விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு தற்போது தலைமறைவாக உள்ளார்.

ரஸ்ய ஆதரவு கிளர்ச்சிக் குழுக்களுக்கு ஆயுதங்களை விற்பனை செய்ததாக உக்ரேய்ன் அரசாங்கத்தால் குற்றம் சுமத்தப்பட்ட வீரதுங்க, சிறிலங்காவின் முன்னாள் அதிபர் மகிந்த ராஜபக்சவுடனும் அவரது சகோதரரான முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்சவுடனும் நெருங்கிய தொடர்பைப் பேணியிருந்தார் என்பதை இவ்வாறான சில சம்பவங்கள் சான்று பகர்கின்றன.

மைத்திரி-ரணில் அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பின்னர், யோசித ராஜபக்ச தொடர்பாக விசாரணை செய்வதற்காக மூன்று உறுப்பினர்களைக் கொண்ட சபை ஒன்றை கடற்படைத் துணைத் தளபதி ஜெயந்த பெரேரா நியமனம் செய்தார். இந்த ஆணைக்குழு ஜனவரி 2015 தொடக்கம் பாதுகாப்பு அமைச்சின் கீழ் செயற்படுகிறது.

யோசித மீதான விசாரணைக் குழுவில் றியர் அட்மிரல் டி.டபிள்யு.பி. வெட்டேவ, கொமடோர் யு.எஸ்.ஆர்.பெரேரா மற்றும் கொமடோர் எம்.எம்.வி.பி.மெடேகொட ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர். இவர்களது விசாரணை அறிக்கையின் முடிவுகள் அதிர்ச்சியளிக்கின்றன.

மூன்று உறுப்பினர்களைக் கொண்ட விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையின் பிரகாரம், யோசித ராஜபக்ச கடற்படையில் இணைந்த பின்னர் கடற்படையின் ஒழுக்க விதிகள் மற்றும் பிரமாணங்கள், விதிகள் போன்றவற்றை மீறிச் செயற்பட்டுள்ளார் என்பது தெளிவாகிறது. கடற்படையில் இணைவதற்கான கோவை விதிகள் கூட யோசித கடற்படையில் இணைக்கப்பட்ட போது மீறப்பட்டுள்ளது.

மூன்று அங்கத்தவர்களைக் கொண்ட விசாரணை ஆணைக்குழுவானது பின்வரும் மூன்று விடயங்களை யோசித தொடர்பில் முன்வைத்துள்ளது:

சிறிலங்கா கடற்படையின் 45வது அதிகாரிப் பயிலுனராக கடற்படையில் இணைந்து கொண்ட யோசித ராஜபக்ச க.பொ.த. சா.த பரீட்சையில் ஒரே தடவையில் ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம் மற்றும் சிங்களம் உட்பட ஆறு பாடங்களில் திறமைச் சித்திகளையும், க.பொ.த.உ.த பரீட்சையில் இரண்டு சித்திகளையும் பெற்றிருக்க வேண்டும். ஆனால் யோசித இவ்வாறான கல்வித் தகைமைகளைப் பெற்றிருக்கவில்லை என்பதை இவரது தனிப்பட்ட கோவை உறுதிப்படுத்துகின்றது. ஒரே தடவையில் க.பொ.த.சா.த பரீட்சையில் யோசித சிங்கள பாடத்தில் திறமைச் சித்தி பெற்றிருக்கவில்லை. இவரது சாதாரண தர மற்றும் உயர்தர பரீட்சைகளின் பெறுபேற்றுச் சான்றிதழ்கள் இவருக்காக ஒதுக்கப்பட்ட கோவையில் காணப்படவில்லை.

கடற்படைப் பயிலுனராக இணைந்து கொண்ட யோசிதவால் வழங்கப்பட்ட 2003,2004 காலப்பகுதியில் எடுக்கப்பட்ட க.பொ.த.சா.த பரீட்சைப் பெறுபேறுகளை கடற்படை அதிகாரிகள் ஏற்றுக் கொண்டனரா அல்லது இல்லையா என்பதற்கான எவ்வித சான்றுகளையும் விசாரணை சபையால் பெற்றுக்கொள்ள முடியவில்லை. இந்நிலையில் யோசித எவ்வாறு கடற்படையில் இணைக்கப் பட்டார் என்பதற்கான தெளிவான அறிக்கையை இந்த சபையால் முன்வைக்க முடியவில்லை. யோசித கடற்படையில் இணைக்கப்பட்டது எவ்வாறு என்பதை சிறப்பு விசாரணை மூலம் முன்னெடுக்கப்படுவதே சாத்தியமாக இருக்கும்.

கடற்படை கரையோரக் கற்கை நிறுவனத்தில் யோசித பயிற்சி பெற்றிருந்தார். இவருக்குப் பாதுகாப்பு வழங்குவதற்காக மூன்று மூத்த கடற்படை மாலுமிகள் நியமிக்கப் பட்டிருந்தனர். யோசித பயிற்சி பெற்றிருந்த பகுதிக்கால பாதுகாப்புப் பணியை அதிபர் பாதுகாப்புப் பிரிவு மேற்கொண்டிருந்த போதும் அதற்கும் மேலதிகமாகவே மூத்த கடற்படை மாலுமிகள் மூவர் யோசிதவின் பாதுகாப்பிற்காக நியமிக்கப்பட்டிருந்தனர். சிறிலங்கா கடற்படையின் விதிகளுக்கு முரணாகவே யோசித இணைக்கப்பட்டார் என்பதற்கு அப்பால், லெப்ரினன்ட் ராஜபக்சவிற்கு சிறப்புப் பரிசுகளும் வழங்கப்பட்டன. இவருக்கு சில சிறப்பு சலுகைகளும் முன்னுரிமைகளும் வழங்கப்பட்ட அதேவேளையில், முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் வசந்த கரன்னகொடவால் சிறப்புப் பரிசுகளும் வழங்கப்பட்டன.

பிரித்தானிய றோயல் கடற்படைக் கல்லூரியின் புலமைப் பரிசில் பயிற்சிக்குள் யோசித உள்வாங்கப்படாத போதிலும் இவர் இதற்கான புலமைப் பரிசில் கட்டணங்களைப் பெற்றுக் கொண்டார். இதன் பின்னர் கடற்பயிற்சி தொடர்பான இரண்டு மேலதிக பயிற்சி நெறிகளைப் பெற்றுக் கொள்வதற்கு றோயல் கடற்படையுடன் இவர் இணைக்கப்பட்டமை விசாரணை மூலம் நிரூபணமாகிறது.

சப் லெப்ரினனாக இணைந்து கொண்ட பின்னர், இவர் ஹாம்ப்சையரில் உள்ள HMS Collingwood கரையோர போர் மூலோபாயக் கல்லூரியில் அனைத்துலக நிறைவேற்று கற்கை நெறியைப் பெற்றுக் கொள்வதற்காக அனுப்பப்பட்டார்.

யோசித ராஜபக்ச, சப் லெப்ரினன்ட் நிலையை அடைந்த பின்னர், 29 ஒக்ரோபர் 2009 தொடக்கம் 31 ஆகஸ்ட் 2010 வரை உக்ரேய்ன் தேசிய பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் முதுகலைப் பட்டத்தைப் பெற்றுக் கொள்வதற்காக அவரது மாமாவான உதயங்க வீரதுங்கவால் தெரிவு செய்யப்பட்டார். இதன் பின்னர் யோசிதவிற்கான நாளாந்த வெளிநாட்டு கொடுப்பனவு, போக்குவரத்து மற்றும் தொலைபேசிச் செலவுகளை வழங்குமாறு பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச கட்டளையிட்டார்.

வீரதுங்க நெருக்கமான தொடர்பைப் பேணிய உக்ரேய்னின் Ukrinmarsh நிறுவனக்கால் யோசிதவிற்கு ஏற்கனவே சலுகைக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்ட சமநேரத்திலேயே கோத்தபாயவின் கட்டளைக்கு இணங்க மேலதிக வெளிநாட்டுக் கொடுப்பனவும் வழங்கப்பட்டன. யோசித தனிப்பட்ட முறையிலேயே உக்ரேய்ன் நிறுவனத்தின் புலமைப்பரிசிலுக்குள் உள்வாங்கப் பட்டாரே தவிர, இவர் சிறிலங்கா கடற்படையின் விதிமுறைகளுக்கு அமைவாக இவ்வாறான பயிற்சித் திட்டங்களுக்குள் உள்வாங்கப் படவில்லை. இந்த பயிற்சி நெறியைப் பூரணப்படுத்திய பின்னர், இவர் ''தத்துவவியல் கலாநிதிப்'' பட்டத்தைப் பெற்றுக் கொள்வதற்கான பயிற்சி நெறிக்குத் தெரிவு செய்யப்பட்டார் என்பது இங்கு அதிர்ச்சி தரும் தகவலாகும்.

திருகோணமலையில் இடம்பெற்ற பயிற்சி நிறைவு அணிவகுப்பின் போது, பயிலுனரான யோசித ராஜபக்சவிற்கு அந்த ஆண்டிற்கான Midshipman பதவி வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. அத்துடன் இவர் "கௌரவ பட்டயமும்'' வழங்கி மதிப்பளிக்கப்பட்டார். இவ்வாறான சிறப்பு விருதுகளை யோசித பெற்றுக் கொள்வதற்கு முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் கரன்னகொடவே காரணமாகும்.

இதன்பின்னர், கோத்தபாய ராஜபக்சவின் பாதுகாப்பு அமைச்சின் உத்தரவின் பேரில், யோசித அதிபர் பாதுகாப்புப் பிரிவுடன் இணைக்கப் பட்டார். கடற்படைத் தலைமையகத்தில் சாதாரண பணிகளைப் புரிந்த யோசித பின்னர், அதிபர் பாதுகாப்புப் பிரிவின் கீழ் அலரி மாளிகையில் பணியாற்றினார்.

இதற்காக இவருக்கு சிறப்பு அடையாள அட்டையும் வழங்கப்பட்டது. புதிய அரசாங்கம் சிறிலங்காவின் ஆட்சியைப் பொறுப்பெடுத்துக் கொண்ட பின்னர், அதிபர் பாதுகாப்புப் பிரிவின் கீழ் யோசித பணியாற்றுவதற்கான கட்டளை இரத்துச் செய்யப்பட்டது.

யோசித ராஜபக்சவினதும் சாள்ஸ் அன்ரனியினதும் சம்பவங்கள் மகிந்த ராஜபக்சவும் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனும் எவ்வாறான அர்ப்பணிப்புக்களுடனும் நாட்டுப்பற்றுடனும் பணியாற்றியுள்ளனர் என்பதை மிகத் தெளிவாக விளக்கி நிற்கின்றன.

தனது மகன் போரில் பங்கு கொண்டு போராடினான் என்பதை நினைத்து தலைவர் பிரபாகரன் திருப்தி - யடைந்தார். ஆனால் மகிந்தவின் மகன் போரின் நிழலைக் கூடத் தொட்டுப் பார்க்கவில்லை. குறிப்பாக இந்த நாட்டைப் பாதுகாப்பதற்காகத் தனது மகனை கடற்படையில் இணைத்துக் கொள்வதாகக் கூறி தனக்கான சொந்த அரசியல் இலாபத்தை மகிந்த ராஜபக்ச தேட முயற்சித்த போதிலும் இவரது மகனான யோசித ராஜபக்ச போர் வலயத்திற்குள் தனது காலடியைக் கூட எடுத்து வைக்கவில்லை என்பதே உண்மை.



Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

வாழ்வியல் ௧௦

# பகையை விலைக்கு வாங்கல்



(வி.என்.சந்திரகாந்தி)

மனிதர்களாகிய எங்களுக்கு இருக்கின்ற தொல்லைகள் போதாதென்று அனாவசியத்திற்கு பகையை வாங்கி மடியில் கட்டிக்கொள்ளும் பழக்கம் எம்மில் பலருக்கு இருக்கின்றது. அதைத்தான் "பகையை விலை கொடுத்து சம்பாதித்தல்" என்று கூறுவார்கள். ஒருவனுக்கு பல தேவைகள் கட்டாயமாக இருக்கும். அதை எப்பாடுபட்டாவது பூர்த்தி செய்யத்தான் வேண்டும். அதற்காக பகைக்க நேர்ந்தால் பரவாயில்லை. ஆனால் சல்லிக் காசுக்கும் தேவையில்லாத விடயங்களுக்காக பகைத்துக்கொள்வதை தவிர்த்துக் கொள்ளலாமல்லவா.!

அதனை ஒரு சம்பவம் மூலம் விளக்கலாம். ஒரு வகுப்பறை. பலதரப்பட்ட மாணவர்களும் அங்கு இருப்பர். அங்கு நல்ல பணவசதியுள்ள மாணவன் ஒருவன் விளையாட்டுக்காக மட்டும் மற்ற மாணவர்களது புத்தகம், பேனா, காகிதாதிகளை எடுத்து மறைத்து வைப்பான். இதை எவனாவது ஒரு மாணவன் சம்பந்தப்பட்ட மாணவனிடம் போட்டுக்கொடுத்து விடுவான். பிறகென்ன அனாவசிய அடிபிடியும் பகைமையும் தான்!.

பாடசாலை மாணவர் மத்தியில் இப்படியான நிறைய சந்தர்ப்பங்களை அவதானிக்கலாம். அவை எல்லாம் மாணவர்களுக்கிடையே அடிபிடியாகி ஆசிரியர்களின் தலையீட்டில் பெற்றோருக்கு முறைப்பாடாக போய்விடும்.



அதெல்லாம் சிறார்களின் செயல்கள் தானே என்று எவராவது சந்தோசப்பட்டால் அது தவறாக போய்விடும். ஏனென்றால் வயது வந்தவர்களே அநாவசிய பகைப்படுதலில் முன்னுக்கு நிற்கின்றார்கள்.

சிலரை அவதானிக்கலாம்... பெரிதாக பணவசதி இருக்காது. ஆனால் நாம் மிகுந்த பணவசதி படைத்தவர்கள் என்பது போல வாய்தம்பட்டம் அடிப்பார்கள். இன்னும் கொஞ்சம் சிலாகித்து சொல்வதென்றால் "யாருக்காவது பணத்தட்டுப்பாடு இருந்தால், எவரிடமும் கடமைப்பட வேண்டாம், நானே உதவி புரிவேன்" என்று கூறியும் இருப்பர். எம் மத்தியில்தான் பணத்தட்டுப்பாடுள்ள பலர் இருக்கின்றார்களே பாவம் அவர்களும் அவர் பேச்சை நம்பி அத்தியாவசிய செலவுகளை திட்டமிட்டு வரையறுத்துக்கொண்டு கடனுக்காக கையேந்துவர். உதவி செய்வதாக உறுதி அளித்தவரிடமோ உண்மையில் பணம் இருக்காது. தனது நிலைப்பாட்டை பொய்யாக்கவும் விரும்ப மாட்டார். இன்று பணம் வந்துவிடும் நாளை பணம் வந்துவிடும் என்று சமாதானம் சொல்வாரே தவிர பண உதவி செய்ய மாட்டார். கடனுக்காக கையேந்தியவரோ அவர் வேண்டுமென்றே தன்னைத் தட்டிக் கழித்ததாக எண்ணி பகை கொள்வார்!

இனி யார்தான் நோய் நொடி என்று இல்லாமல் இருக்கின்றார்கள். அலுவலகம் ஒன்றில் பணிபுரிந்து கொண்டு இருந்த அதிகாரி ஒருவருக்கு திடீரென்று நெஞ்சுவலி வந்ததால் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு ஏழுநாட்களுக்கு பின்னர் அன்றுதான் துண்டு வெட்ட இருந்தார்கள். அது வரையில் அசட்டையாக அவரை பார்த்து சுகம் விசாரிக்க வைத்தியசாலை செல்லாமல் விட்டு விட்ட மற்ற ஒரு உதவி அலுவலர் அவசர அவசரமாக அவரை சென்று சந்தித்ததுடன் "ஏன் பணம் செலவு செய்து வாட்டில் துணைக்கு ஆள் வைத்தீர்கள். எனக்கு சொல்லியிருந்தால் நானே உங்களுக்கு துணையாக வந்து நின்றிருப்பேனே" என்று கதைப்போக்கில் கூறிவிட்டார்.

அதிகாரி அலுவலகம் வந்து மூன்றே நாட்கள் தான் ஆயிற்று. மீண்டும் நெஞ்சுவலி உரமாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். அவருக்கு துணையாக நிற்பதற்கு உறுதியளித்த அலுவலர் இருக்கிறார் என்ற தெம்பில் கூலிக்கு எவரையும் அமர்த்தவில்லை. உறுதியளித்தவரும் வராவிட்டால் அநாவசிய பகைதானே!

பெண்களுடைய உலகமே வேறு. என்ன விலை கொடுத்தாலும் பகைமையை வாங்குவதில் அவர்களைப் போல் வல்லவர்கள் எவரும் இல்லை அதற்கு காரணம் அவர்கள் தம்மை பற்றி எப்போதும் பெருமிதமாக எண்ணுவதும், வாயை விடுவதும் தான். இறைவன் படைப்பில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வகை அழகுண்டு. கறுப்பு நிற பெண்களில் கூட மிகுந்த அழகிகள் இருக்கின்றார்கள். அப்படியிருக்க ஒரு சில பெண்கள் அநாவசியமாக சவால் விடுவதால் பகைமைதானே உண்டாகும். இன்னும் சொல்லப்போனால் பெண்கள் பல கடைகள் அலைந்து திரிந்து ஆடம்பர பொருட்களை வாங்குவார்கள். யாராவது நண்பிகள் தாமும் அப் பொருட்களை வாங்க விரும்பி எங்கே வாங்கலாம் என்று விசாரித்தால் பொய்யான தகவலை கூறிவிடுவார்கள். அவர்கள் அனைத்து கடைகளிலும் ஏறி இறங்கி சரியான கடையை கஷ்டப்பட்டு கண்டுபிடித்துத்தான் அப் பொருட்களை வாங்க நேரிடும். போதாக்குறைக்கு அந்த கடை முதலாளி உங்கள் சினேகிதி சில நாட்களுக்கு முன்புதான் எமது கடையில் அப்பொருட்களை வாங்கினார் என சாட்சியமும் அளித்து விடுவார். அது போதாதா பகைக்கு.

ஒரு சிலரோடு ஒன்றித்தும், மற்றும் சிலரோடு தூர விலகியும் செயற்படுவார்கள். அதைக்காட்டிலும் பிரதானமாக இரகசியம் காப்பதில் பெண்களது இயலாமை அவர்களுக்கு பெரும் சவாலாக அமைந்து பகைமையை உண்டுபண்ணி விடுகின்றது.!

இனி காதலர்களுக்கிடையே அனாவசிய பகைமைகள் ஏற்படுவதை எம்மால் அதானிக்க முடியும். அதற்கு பிரதான காரணம் சந்தேகமே!. காதலிக்க தொடங்கும் போதே இவன் வேறுயாரையாவது காதலித்து இருப்பானோ, என்று அவளும், இவள் முன்னர் எவளையாவது காதலித்து இருப்பாளோ என்று அவனும் சந்தேகத்துடன் தான் ஒருவரை ஒருவர் நெருங்குகின்றார்கள். பெண் வேறு எவருடனும் போவதைக் கண்டால் சந்தேகம். அவன் சகோதரனாக கூட இருக்கலாம். இத்தனை மணிக்கு பூங்காவில் சந்திக்க திட்டமிட்டால் ஆணோ, பெண்ணோ நேரம் தப்பக்கூடாது என்ற பிடிவாதம். கதைகள் பேச்சில் முன்னுக்கு பின் முரண்பாடு இருந்தால் சச்சரவு. காதலன் கேட்டுக்கொண்டபடி உடை அணியவில்லை என்றால் சண்டை. மொத்தத்தில் பகைமையே!

நண்பர் களுக்கிடையேயும் பகைப்படும் சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. பொய்யும் புரட்டும் தான் அவற்றுக்கு அடிப்படையாக இருக்கின்றன. எனது நண்பன் ஒருவனுக்கு அவனது நண்பன் ஒரு அழகான பெண்ணைக்காட்டி.... "இவளும் நானும் மூன்று வருடங்களாக காதலிக்கின்றோம்" என கூறினான். எனது நண்பன் அதிர்ந்து விட்டான். உண்மையில் அந்த பெண் எனது நண்பனின் மச்சாள் முறையானவளாகும்.

அவர்களுக்கு இடையான பரஸ்பர காதலை விட பெற்றோரே விவாகத்தை நிச்சயித்துள்ளார்கள். நண்பன் பொய்கூறியதால் அநாவசிய பகமைதான் உண்டாகியது.

இனி அரசியல்வாதிகளை எடுத்தால் அவர்களால் வழங்கப்படும் வாக்குறுதிகளை வைத்தே எதிர்த்தரப்பினர் அவர்களுக்கு எதிராக மக்களை துாண்டி விடுவார். பல அரசியல்வாதிகள் "உங்கள் பிள்ளைகளுக்கு தொழில் வாய்ப்பு பெற்று தருவோம், வசதி செய்து தருவோம், வீடுகள் கட்டிதருவோம்" என்றெல்லாம் கூட வாக்குறுதிகளை கொடுக்கிறார்கள். தேர்தல் முடிந்ததும் மக்கள் தொல்லை கொடுக்க தொடங்குகிறார்கள். உண்மையில் அவையெல்லாம் சமூக பிரச்சனைகளல்ல. ஈடேற்றவும் முடியாது. வாக்குறுதிகள் எப்படி பகைமையை வளர்க்கின்றன என்று பாருங்கள்!

இனி கணவன் மனைவி உறவென்பது ஒருவர் மற்றவர் மேல் கொண்ட ஈர்ப்பின் பாற்பட்டது. "ஆசை அறுபது நாள் மோகம் முப்பது நாள். அதன் பின்னர் என்ன நேர்கிறது. இருவரும் அடிப்படையை விட்டு வேறு சோலிகளில் இறங்குகிறார்கள். அதனால் உண்டாவது பகைமையே!

எனது நண்பர் ஒருவர் தினமுரசு பத்திரிகைக்கு குறுங்கதைகள் எழுதிக் கொண்டிருந்தார். "பூல்ஸ்காப்" தாளில் இரண்டரை பக்கங்களுக்கு மேற்படாமல் எழுத வேண்டும். அவராலும் அப்படித் தான் குறைந்த சொற்களில் எழுத முடியும். ஏனைய தேசிய பத்திரிகைகளுக்கும் சஞ்சிகைகளுக்கும் பத்து பக்கங்கள் வரை எழுத வேண்டும். அதனால் அப்பத்திரிகைகளுக்கு அவர் எழுதுவதில்லை. நான் ஞானம் சஞ்சிகைக்கு எழுதிய சிறுகதை ஒன்று எனது உறவுக்காரப்பெண் ஒருத்தியை கருவாக கொண்டிருந்ததால் அதை நான் பிரசுரத்திற்கு அனுப்பவில்லை. அதை அறிந்து கொண்ட நண்பர் அக்கதையை என்னிடம் வலிந்து பெற்றுக்கொண்டு ஞானம் சஞ்சிகைக்கு தனது பெயரில் அனுப்பிவிட்டார். அக் கதை மகளிர் தின சிறப்புக்கதையாக அச்சஞ்சிகையில் பிரசுரமானதுடன் பாராட்டும் பெற்றது. சில நாட்களில் ஞானம் ஆசிரியரிடமிருந்து நண்பருக்கு கடிதம் ஒன்று வந்தது. "தங்கள் படைப்புக்களை எமது சஞ்சிகையில் பிரசுரிப்பதற்கு ஆவலாக உள்ளோம் தொடர்ந்து எழுதுங்கள்" என்று. நண்பர் அதிர்ந்து விட்டார். அவராலோ பத்து பக்கங்கள் எழுத முடியாது. என்னை சந்தித்த போது... "நான் அநாவசியமாக ஆசிரியரின் பகமையை சந்தித்து விட்டேனோ" என்று கவலைப்பட்டார்.

பகைமையை விலைக்கு வாங்குவதையிட்டு எவரும் கவலை கொள்வதாக இல்லை. பலருக்கு அவை பொழுது போக்காகவோ மகிழ்ச்சி அளிப்பதாகவோதான் இருக்கின்றது. ஏனென்றால் அவர்கள் சாமர்த்தியமாக பிறரை ஏமாற்றுகின்றார்கள். தமக்கு பெருமையும் புகழும் சேர்க்கின்றார்கள். மற்றவர்களை மட்டும் தட்டுகிறார்கள்.

வாசகர்களே! இவர்களையிட்டு அவதானமாக இருங்கள்.!

# விநோதங்கள்

## நிர்வாணமாக்கி மறைத்து வைத்தால் பணக்காரனாகலாம்



ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான தான்சானியாவில், தாம் அதிகம் நேசிக்கும் பெண்ணை நிலத்திற்கு அடியில் மறைத்து வைத்தால் பணக்காரன் ஆகலாம் எனும் மந்திரவாதி ஒருவர் சொல்லக் கேட்டு தன் அன்பான காதலியை நிர்வாணமாக்கி பூமிக்கடியில் குழி தோண்டி மறைத்து வைத்திருந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வாரத்திற்கு இரு முறை மாத்திரமே உணவு வழங்கப்பட்டுள்ளதுடன் கடந்த எட்டு மாதங்களாக அப் பெண் இக் கொடுமையை அனுபவித்துள்ளாள். அந்நாட்டு காவல்துறையினர் அப்பெண்ணை மீட்டதுடன் அந்நபரை கைது செய்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

## அபாயகர பாலம்



உறைந்துபோன நீர் நிறைந்த விட்டிம் நதியின் மேல் அமைந்திருக்கும் ரயில் தண்டவாளத்தை மக்கள் போக்குவரத்திற்காக பாவித்து வருகின்றனர். எனினும் எவ்வித பாதுகாப்பு சுவர்களும் இல்லாத இப்பாலமானது 30 ஆண்டுகளுக்கு முன்னர் மரத்தினால் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இப்பாலம் மிகவும் அபாயகரமானதாக சித்தரிக்கப்பட்டாலும் இதுவரை இதில் எவ்வித விபத்துக்களும் நேர்ந்ததில்லையாம்.

## நல்லதோர் தீர்ப்பு

கனடாவில் உள்ள டீஊஐஜவு என்ற தகவல் தொழில்நுட்ப கல்லூரியில் பெண்களின் குளியலறை படங்களை எடுத்ததாக குற்றஞ்சாட்டி மாணவன் ஊஹநைா - ளுநடு லுயபெ என்ற 23 வயதானவன் கைதாகியுள்ளான். இருப்பினும் இனி கல்லாரி வளாகத்தில் தங்கக்கூடாது, அதி நவீன கருவிகளைப் பாவிக்கக் கூடாது மற்றும் ஒழுக்கங்களை கற்பிக்கும் வகுப்புக்களுக்குச் செல்ல வேண்டும் எனும் நிபந்தனைகளுடன் அவனை காவல்துறையினர் விடுதலை செய்துள்ளனர்.

## "ஆண்களுக்கு பாதுகாப்பு வேண்டும்"



ஆண்கள் பெண்களை கற்பழிக்கும் செயலுக்கு தண்டனை வழங்காது அதனை சட்டபூர்வமாக்க வேண்டும் என அமெரிக்காவைச் சேர்ந்த பிரபல எழுத்தாளர் Daryush Valizadeh கோரிக்கை விடுத்துள்ளார்.

மேலும் கருத்துத் தெரிவித்த அவர், இது சட்டமாக்கப்பட்டால் பெண்கள் தமது உடலை பாதுகாத்துக் கொள்வதுடன் விலைமதிப்பில்லாத பொருட்களையும் பாதுகாக்கலாம் எனவும் ஆண்கள் கைதாகுவதை தடுக்கலாம் எனவும் கூறியுள்ளார். அத்துடன் 43 நாடுகளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான ஆண்கள் இது குறித்த கூட்டத்திற்கு சமூகமளிக்கவிருந்துள்ளனர், எனினும் ஒன்றுதிரண்ட பெண்கள் சமூகங்களை எதிர்க்க முடியாமையினால் இக்கூட்டம் ரத்து செய்யப்பட்ட தாக தெரியவந்துள்ளது.

## அகதிகளுக்கு இலவச சீட்டு

ஜேர்மனியில் குடியேறியுள்ள அகதிகளுக்கு ஒரு தடவை விலைமாதுவிடம் சென்றுவர இலவசமான அனுமதிச் சீட்டு வழங்கப்பட்டு வருவதாக செய்திகள் பரவி வருகின்றன. அதுவும் சமூக சேவைகள் அலுவலகத்தின் மூலமாக அதிகார பூர்வமாக இந்த அனுமதி சீட்டுக்கள் வழங்கப்படுவதாகவே தகவல்கள் வெளியாகின்றன. எனினும் வன்முறையை பிரயோகிப்பதற்கு எதிரான ஆைஅமையஅய என்ற அமைப்பு இதனை அதிகாரபூர்வமாக மறுத்துள்ளதுடன் அகதிகள் இவ்விடயத்தில் ஏமாற வேண்டாம் எனவும் எச்சரிக்கை செய்துள்ளது.

## புகைபிடிக்க தடை இல்லை

ஜேர்மனியில் நடந்தேறிய சம்பவத்தினால் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டையும் மீறி மாணவர்கள் பள்ளி வளாகத்தினுள் புகைப்பிடிக்க சில பாடசாலைகள் அனுமதி வழங்கியுள்ளன. புகை பிடிப்பதற்காக வெளியே செல்லும் மாணவர்களை தீவிரவாதிகள் மூளைச்சலவை செய்து விடுவரோ எனும் அச்சத்தினாலேயே இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கல்லூரி நிர்வாகிகள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சினிமுரசு கதகளி

## ஆர்யாவை இயக்குகிறார் மஞ்சப்பை!

விமல், ராஜ்கிரண், லட்சுமி மேனன் நடித்த 'மஞ்சப்பை' படத்தை என்.ராகவன் இயக்கினார். குடும்ப சென்டிமென்ட் கதையை ஹிட்டாக்கிய அவருக்கு அடுத்த படத்தை இயக்கும் வாய்ப்பு உடனே கிடைக்கவில்லை. அவருடைய இயக்கத்தில் நடிக்க விக்ரம் பிரபு சம்மதித்து கதை கேட்டார்.

அந்தப் படத்துக்கு 'தனிக்காட்டு ராஜா' என்ற ரஜினிகாந்த் படத்தின் பெயரையும் சூட்டினார்கள். ஆனால், திடீரென்று அந்தப் படம் கைவிடப்பட்டது. இதையடுத்து என்.ராகவன் இயக்கத்தில் ஆர்யா நடிப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. பெயரிடப்படாத இந்தப் படத்தை சூப்பர் கிட் பிலிம்ஸ் சார்பில் ஆர்.பி.சவுத்ரி தயாரிக்கிறார். 'ஆக்ஷனுடன் கூடிய எமோஷனல் படமாக இதை உருவாக்குகிறேன் என்றார் ராகவன்.

## தனுஷ் எடுத்த கடும் ரிஸ்க்

தமிழ் சினிமா நடிகர்கள் பலரும் தற்போது ஸ்டண்ட் காட்சிகளில் டூப் இல்லாமல் தான் நடிக்கின்றனர். அந்த வகையில் வீரம் படத்தில் அஜித் ட்ரையின் சண்டைக்காட்சிகள் மிகவும் ரிஸ்க் எடுத்து நடித்தார்.அதேபோல் விஜய் தெறி படத்திலும் ஒரு சண்டைக்காட்சியில் மிகவும் கஷ்டப்பட்டு நடித்துள்ளார். இந்நிலையில் இந்த லிஸ்டில் தற்போது தனுஷ்உம் இணைந்துள்ளார்.பிரபு சாலமன் இயக்கும் படத்தில் ரயிலின் மேல் ஒரு சண்டைக்காட்சி உள்ளதாம், இதில் தனுஷ் மிகவும் கடினப்பட்டு அந்த காட்சியில் டூப் இல்லாமல் நடித்துக் கொடுத்துள்ளாராம்.



## தீபிகாவால் தீ பரவுது!

விமர்சனரீதியாகவும் சரி, வணிகரீதியாகவும் சரி, இதற்கு முன்பாக பாலிவுட்டில் தீபிகா படுகோனே அளவுக்கு உயரத்துக்கு போன நடிகை வேறு யாருமே இல்லை என்கிறார்கள்.

இருபத்தொன்பது வயதில் அவர் அடைந்திருக்கும் புகழ் அசாத்தியமானது. ஹாலிவுட்டில் இருந்து தொடர்ந்து அழைப்புகள் வந்து கொண்டே இருந்தாலும் பாலிவுட்டை கைவிட அவருக்கு மனமில்லை.

'ஃபாஸ்ட் அண்ட் ஃப்யூரியஸ் - 7' படத்துக்காக இவரை அழைத்தபோது 'ராம்லீலா'வில் பிஸியாக இருந்ததால் மறுத்துவிட்டார். இப்போது வின்டீசலின் வற்புறுத்தல் காரணமாக 'ட்ரிபிள் எக்ஸ்' சீரிஸில் கமிட் ஆகிவிட்டார் என்று உறுதியாகச் சொல்கிறார்கள்.

லாஸ் ஏஞ்சல்ஸுக்குப் போய்விட்டால் மும்பையை மறந்துவிடுவாரோ என்று இளம் ஹீரோக்கள் ஏக்கம் கொண்டு பசலை நோய் பீடித்துத் திரிகிறார்கள்

## இறுதிச்சுற்று விமர்சனம்

நடிகர் : மாதவன்
நடிகை : ரித்திகா சிங்
இயக்குனர் : சுதா.கே.பிரசாத்
இசை : சந்தோஷ் நாராயணன்
ஒலிப்பதிவு : சிவகுமார்

## திரை விமர்சனம்

நடிகர்: விஷால்
நடிகை: கேத்ரீன் தெரசா
இசை: ஹிப் ஹாப் தமிழா ஆதி
ஒலிப்பதிவு: பாலசுப்ரமணியம்
இயக்கம்: பாண்டிராஜ்

வெளிநாட்டிலிருந்து கடலூருக்குத் திரும்பும் விஷாலுக்கு 4 நாட்களில் கேத்ரின் தெரஸாவுடன் திருமணம். தன்னுடைய நண்பர்கள் ஒவ்வொருவராக சந்தித்து பத்திரிகை கொடுத்து வரும் நேரத்தில், கடலூரின் பிரபல தாதாவான மதுசூதனன் மர்ம ஆசாமிகளால் கொலை செய்யப்படுகிறார். அந்தக் கொலையை செய்தது யார் என விசாரிக்கும் போலீஸ், முன்பகை காரணமாக விஷாலையும் அந்தப் பட்டியலில் சேர்க்கிறது. சென்னைக்கு கேத்ரின் தெரஸாவை சந்திக்குச் சென்றிருக்கும் விஷாலை, உடனடியாக கடலூருக்கு வந்து சரணடையும்படி மிரட்டுகிறது போலீஸ். இன்னொருபுறம் மதுசூதனனைக் கொன்றது விஷால்தான் என நினைத்து, கடலூர் வரும் விஷாலை வழியிலேயே பழிவாங்கக் கிளம்புகிறார்கள் மதுசூதனனின் ஆட்கள்.



உண்மையில் மதுசூதனனைக் கொன்றது யார்? விஷால் மீது கொலைப்பழி விழுக என்ன காரணம்? இப்படிப்பட்ட இக்கட்டான சூழ்நிலையை விஷால் எப்படி சமாளிக்கிறார் என்பதை சீட்டின் நுனிக்கு கொண்டு வந்து கூறியிருக்கிறார் பாண்டிராஜ்.

விஷால் ஆறடி இளைஞனாக கம்பீர தோற்றம், இன்னும் 50 பேரை அடித்தால் கூட நம்பலாம், ஆனால், ஸ்டண்ட் காட்சிகளில் பறந்து பறந்து அடிக்காமல் மிக யதார்த்தமாக கலக்குகிறார். நடிப்பிலும், அழகிலும் அசத்துகிறார் கேத்ரின். அவருடைய சின்னச் சின்ன குறும்புகளை ரசிக்கலாம்.

காமெடிக்கு சூரியும், கருணாஸும் இருக்கிறார்கள். நீண்ட இடைவேளைக்குப் பிறகு என்னம்மா நீங்க இப்படி பண்றீங்களேம்மா லட்சுமி ராமகிருஷ்ணனை இதில் பார்க்க முடிகிறது. ஹிப் ஹாப் தமிழனின் இசை ஒரு த்ரில்லர் படத்துக்குரிய பின்னணி இசையும், அழகே பாடலும் ரசிக்க வைக்கின்றன.

தனது நண்பரின் வாழ்க்கையில் நடந்த ஒரு உண்மைச் சம்பவத்தை திரைக்கதையாக்கி இயக்கியிருக்கிறார் பாண்டிராஜ். படத்தில் எத்தனை நடிகர்கள் நடித்திருந்தாலும், படத்தின் மிகப்பெரும் பலமே திரைக்கதை தான். பாண்டிராஜ் அடுத்து என்ன அடுத்து என்ன, டுவிஸ்ட்டுக்குள் ஒரு டுவிஸ்ட், அந்த டுவிஸ்ட்டுக்குள் ஒரு டுவிஸ்ட் என ஆடியன்ஸ் பல்ஸை எகிற வைக்கின்றார்.

**மொத்தத்தில் கதகளி சஸ்பென்ஸ் ஆட்டம்!**

## காஜல் லிப் டு லிப் முத்தம்

காஜல் அகர்வால் தமிழ், தெலுங்கு படங்களில் கிடைத்த வெற்றி பாலிவுட்டில் அவருக்கு கிடைக்கவில்லை. சிங்கம், ஸ்பெ'ல் 26 என 2 இந்தி படங்களில் நடித்தபோதும் புதிய வாய்ப்புகள் குவியவில்லை. கவர்ச்சிதான் இந்தி மார்க்கெட்டுக்கு கைகொடுக்கும் என்று எண்ணியவர் சமீபத்தில் மும்பையில் நடந்த பட விழாவுக்கு கவர்ச்சி பளிச்சிட வந்து பார்வையாளர்களை அசத்தினார். பாலிவுட்டில் குத்தாட்டம் ஆடும் நாயகிகள் தினம் தினம் இதுபோல் போஸ் தருவதால் காஜலின் கவர்ச்சியை யாரும் கண்டுகொள்ளவில்லை. அடுத்த ஆயுதமாக லிப் டு லிப் கிஸ் கையிலெடுத்திருக்கிறார். ரன்தீப் "ஹடாவுடன் காஜல் நடிக்கும் புதிய இந்தி படம் □டு ல.ஃப்ஸோன் கி கஹானி□. இதில் பார்வையற்ற பெண்ணாக நடிக்கிறார். கவர்ச்சியை மூடி வைத்து இந்தியில் நடித்து வந்த காஜல் இப்படம் மூலம் ரன்தீப்புடன் அவர் லிப் டு லிப் முத்தக்காட்சியில் நடித்து பாலிவுட் இயக்குனர்களை திரும்பி பார்க்க வைத்திருக்கிறார்.

## மீண்டும் பரத்தை இயக்கும் விஜய் மில்டன்!

ஒளிப்பதிவாளரான விஜய்மில்டன் முதன் முதலாக இயக்கிய படம் 'அழகாய் இருக்கிறாய் பயமாய் இருக்கிறது'. இந்த படத்தில் கதாநாயகனாக நடித்த பரத்தை வைத்து விஜய் மில்டன் மீண்டும் ஒரு படத்தை இயக்கவிருக்கிறார். விஜய் மில்டன் சொந்தமாக தயாரித்து இயக்கும் இப்படம் அவர் இயக்கிய இரண்டாவது படமான 'கோலிசோடா'வை போல் மாறுபட்ட ஒரு கதை களத்தில் பயணிக்கும் கதையாம். இப்படத்தில் பரத்துடன் காமெடி பாத்திரத்தில் இயக்குனரும், நடிகை தேவயானியின் கணவருமான ராஜகுமாரன் நடிக்கவிருக்கிறார். இப்படத்திற்கான கதாநாயகி, இசை அமைப்பாளர் முதலானோரின் தேர்வு நடந்து வருகிறது. இயக்குனர் விஜய் மில்டனும், பரத்தும் இரண்டாவது முறையாக இணையும் இப்படத்தின் படப்பிடிப்பு வருகிற ஏப்ரல் மாதம் துவங்கவிருக்கிறது. பரத் தற்போது 'பொட்டு' என்ற படத்தில் நடித்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

## இதற்காக தான் விளம்பரத்தில் நடித்தாரா கமல்

விளம்பர படங்களில் நடிக்க மாட்டேன் என்று உறுதியாக இருந்த கமல் அண்மையில் முதன்முதலாக ஒரு விளம்பரத்தில் நடித்திருந்தார். அவர் விளம்பரத்தில் நடித்ததற்காக நிறைய காரணங்கள் சொல்லப்பட்டது. தற்போது இது பற்றி முதன்முறையாக பேசியுள்ளார் கமல்ஹாசன். அவர் கூறியதாவது, எந்த உதவி செய்தாலும் அது யாருக்கும் தெரியாமல் செய்ய வேண்டும். நானும் ஒரு பத்திரிக்கை அதிபரும் இணைந்து 7 ஆயிரம் எய்ட்ஸ் பாதித்த குழந்தைகளை தத்தெடுத்து அவர்களுக்கான உதவிகளை செய்து வருகிறோம். என் ரசிகர்கள் 20 கோடிக்கு மேல் தங்கள் சொந்த காசை போட்டு நற்பணி செய்திருக்கிறார்கள். என் பங்கிற்கு நானும் ஏதாவது செய்ய வேண்டும் என்பதினாலேயே விளம்பரத்தில் நடித்தேன் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுப் பையன்

INFOMATION TECHNOLOGY


MOBILE

## Huawei Honor 5X ஸ்மார்ட்கைப்பேசி!


Huawei Honor 5X என்ற ஸ்மார்ட்கைப்பேசி முழு HD வசதியுடன் 1920 x 1080 கொண்ட இக்கைப்பேசி 5.5 இன்ச் தொடுதிரை கொண்டுள்ளது, மேலும், Qualcomm Snapdragon 615 ப்ராசசர் மூலம் இயக்கப்படுகிறது.

மேலும், சேமிப்பு வசதியாக, 2GB of RAM, 16GB கொண்டது, மைக்ரோ SD அட்டை வழியாக விரிவாக்கக்கூடிய சேமிப்பு வசதியாக 128GB உள்ளது.

முன்புற கமெரா வசதி 5 மெகாபிக்சல் மற்றும் பின்புற கமெரா வசதி 13 மெகாபிக்சல் கொண்டது, 3000 mAh பேட்டரி திறன் மூலம் இயக்கப்படுகிறது.



## கூகுள் தீட்டிய அதிரடித் திட்டம்




தற்போது காணப்படும் 4G இணைய வலையமைப்பினை விடவும் 40 மடங்கு வேகம் கூடியதே 5G இணைய வலையமைப்பு ஆகும்.

இதற்கான முதற்கட்ட சோதனைகள் வெற்றிபெற்றுள்ள நிலையில், கூகுள் நிறுவனம் 5G வலையமைப்பு சேவையினை வழங்க புதிய திட்டம் ஒன்றினை தீட்டியுள்ளது. அதாவது சூரிய சக்தியில் இயங்கக்கூடிய ட்ரோன் வகை சிறிய விமானங்களைப் பயன்படுத்தி இவ் இணைய சேவையினை வழங்க தீர்மானித்துள்ளது. செக்கனுக்கு ஜிகாபிட்ஸ் வேகத்தில் தரவுகளை பரிமாற்றும் இச் சேவையினை முதன் முறையாக மெக்ஸிக்கோவில் அறிமுகம் செய்ய தீர்மானித்துள்ளது.

தொலைக்காட்சி அலைவரிசைகளையும் இணையத்தின் ஊடாக எவ்வித தடங்கலும் இன்றி பார்த்து மகிழும் வசதியை தரும் இந்த 5G சேவையினை வழங்குவதற்கு Federal Communications Commission (FCC) அமைப்பிடம் கூகுள் நிறுவனம் அனுமதியும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

OTHER

## நீருக்கு அடியில் இராட்சத டேட்டா சென்டரை நிறுவும் மைக்ரோசொப்ட்




கணினி உலகில் மிகப்பெரிய புரட்சியை ஏற்படுத்திய நிறுவனமாக மைக்ரோசொப்ட் நிறுவனம் விளங்குவது அறிந்ததே. இந் நிறுவனம் தற்போது மற்றுமொரு புதிய புரட்சியில் ஈடுபட்டுள்ளது.

அதாவது தனது டேட்டா சென்டரினை நீரிற்கு அடியில் நிறுவும் முயற்சியே அதுவாகும். இம் முயற்சியில் மைக்ரோசொப்ட் நிறுவனத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

டேட்டா சென்டர்கள் தொடர்ச்சியாக செயற்படும்போது வெளியாகும் வெப்பத்தின் அளவை கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் பொருட்டே இம் முயற்சி மேற்கொள்ளப்படுகின்றது. இதற்காக கடல் மட்டத்திலிருந்து சுமார் 100 அடிகள் ஆழத்தில் நிறுவப்படவுள்ளது.

மேலும் இந்த டேட்டா சென்டருக்கான மின்சக்தியினை நீர் மேற்பரப்பில் உண்டாகும் அலையினைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## HTC One M10



உலகின் முதற்தர கைப்பேசி உற்பத்தி நிறுவனங்களுள் ஒன்றாகத் திகழும் HTC நிறுவனம் One M10 எனும் புத்தம் புதிய ஸ்மார்ட் கைப்பேசியினை விரைவில் அறிமுகம் செய்யவுள்ளது.

இந்நிலையில் இக் கைப்பேசியின் சிறப்பம்சங்கள் தொடர்பான தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன. இதன்படி 5.1 அங்குல அளவுடையதும், 2560 x 1440 Pixel Resolution உடையதுமான இக் கைப்பேசியானது Qualcomm Snapdragon 820 Processor, பிரதான நினைவகமாக 4GB RAM, 32GB சேமிப்பு நினைவகம் என்பவற்றினைக் கொண்டுள்ளது. மேலும் இக் கைப்பேசியானது கூகுளின் Android 6.0.1 Marshmallow இயங்குதளத்தில் செயல்படக்கூடியதாக இருப்பதுடன் Home Button உடன் கூடிய Finger Print Button தரப்பட்டுள்ளது. இவை தவிர 12MP அல்ட்ரா பிக்சல் உடைய அதி வினைத்திறன் வாய்ந்த கமெராவும் இணைக்கப்பட்டுள்ளது.

## Google





இணைய உலகின் ஜாம்பவானாக திகழும் கூகுள் நிறுவனத்தினால் வழங்கப்படும் மின்னஞ்சல் சேவை ஜிமெயில் ஆகும். இம் மின்னஞ்சல் சேவையே இன்று உலகில் அதிகளவான பயனர்களால் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இவ்வாறான நிலையில் இச் சேவையை பயன்படுத்துபவர்களின் எண்ணிக்கை 1 பில்லியனிலும் அதிகமாகக் காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் இந்த எண்ணிக்கை நாளாந்தமா அல்லது மாதாந்தமா என்ற தகவல் வெளியிடப்படவில்லை.

இந்த ஜிமெயில் சேவை 2004ம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்டிருந்த நிலையில் குறுகிய காலத்தில் ஏனைய மின்னஞ்சல் சேவைகளுக்கு சவால் விடும் வகையில் வளர்ந்துள்ளதுடன், இம் மின்னஞ்சல் கணக்கினை பயன்படுத்தியே அன்ரோயிட் மொபைல் இயங்குதளம், யூடியூப், கூகுள் மேப் போன்ற அப்பிளிக்கேஷன்கள் கையாளப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## தொழில்நுட்ப புரட்சிக்கு தயாராகும் சோலார் பேனல் வீதிகள்

சம காலத்தில் மின் உற்பத்தியில் சோலார் பேனல் மூலமான மின் உற்பத்திக்கே அதிகளவு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருகின்றது.

இதன் ஒரு அங்கமாக சோலார் பேனலினால் வீதிகள் வடிவமைக்கும் முயற்சியும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. முதன் முறையாக பிரான்ஸ் நாட்டு அரசாங்கம் இம்முயற்சியில் ஈடுபட்டுள்ளதுடன், முதற் கட்டமாக 1000 கிலோமீற்றர்கள் நீளமான வீதியை அடுத்துவரும் 5 வருடங்களுக்குள் நிர்மாணித்து முடிக்க திட்டமிட்டுள்ளது. இதன் மூலம் பிரான்ஸ் நாட்டு சனத்தொகையின் 8 சதவீதமானவர்களின் (5 மில்லியன் மக்கள்) மின்சாரத் தேவையை பூர்த்தி செய்வதற்கு அந்நாட்டு அரசாங்கம் எண்ணியுள்ளது. இத்திட்டத்தினை பிரான்ஸ் நாட்டு வீதி நிர்மாண நிறுவனமான ஊழுலயா மற்றும் சூரிய சக்திக்கான தேசிய நிறுவனமும் இணைந்து உருவாக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## ஐபோனிற்கு சவால் விடும் Galaxy A9 Pro

ஸ்மார்ட்கைப்பேசி உற்பத்தியில் பல நிறுவனங்கள் ஈடுபட்டுள்ள போதிலும் சாம்சுங் மற்றும் அப்பிள் நிறுவனங்களுக்கிடையிலேயே கடும் போட்டி நிலவுகின்றது.



இந்நிலையில் அப்பிளின் ஐபோனிற்கு சவால் விடும் வகையில் Galaxy A9 Pro எனும் புத்தம் புதிய ஸ்மார்ட் கைப்பேசியினை சாம்சுங் நிறுவனம் விரைவில் அறிமுகம் செய்யவுள்ளது.

இக்கைப்பேசியானது 6 அங்குல அளவு, 1920 x 1080 Pixel Resolution உடைய தொடுதிரையினைக் கொண்டுள்ளதுடன், Snapdragon 652 Processor, பிரதான நினைவகமாக 3GB RAM என்பவற்றினைக் கொண்டுள்ளது. மேலும் Android 6.0 Marshmallow இயங்குதளத்தில் செயல்படக்கூடியதாக இருக்கும் இக்கைப்பேசியில் 13 மெகாபிக்சல்களை உடைய பிரதான கமெரா, 8 மெகாபிக்சல்களை உடைய வீடியோ அழைப்புக்களை ஏற்படுத்துவதற்கான கமெரா என்பவற்றினையும் கொண்டுள்ளது.

இதேவேளை Window 10 மொபைல் இயங்குதளத்துடன் கூடியதாகவும் இக்கைப்பேசி அறிமுகம் செய்யப்படலாம் எனவும் தகவல் வெளியாகியுள்ளது.

## தானாகவே நீரை நிரப்பும் ட்ரிங் போத்தல்

தூரப்பயணங்கள் மேற்கொள்ளும் போது ஏற்படும் தண்ணீர்ப் பிரச்சனையை தீர்க்கும் முகமாக நவீன ட்ரிங் போத்தல் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. காற்றில் உள்ள நீராவியை நீர்த்துளிகளாக சேமிக்கக்கூடிய இந்த போத்தலை அவுஸ்திரேலியாவை சேர்ந்த குழு ஒன்று உருவாக்கியுள்ளது.

ஒரு மணிநேரத்தில் காற்றிலிருந்து 0.5 லீற்றர்கள் அவுடைய நீரை உற்பத்தி செய்யக்கூடியதாக இருக்கும் இந்த தொழில்நுட்பத்தின் ஊடாக உலகெங்கிலும் உள்ள 1.2 பில்லியன் மக்கள் பயனடைவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. எனினும் காற்றிலுள்ள நீரை உறுஞ்சுவதனால் வெப்பநிலை அதிகரித்தல் போன்ற சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய விளைவுகள் நாளடைவில் ஏற்படும் என்பதனையும் மறுக்க முடியாது என்பதும் குறிப்பிடத்தக்கது.



## ஊழியர்களுக்கு பதிலாக ரோபோக்கள்

உலகின் முதன் முதலாக ஊழியர்களுக்கு பதிலாக முற்று முழுதாக தன்னியக்க ரோபோக்களை வைத்து தாவர பண்ணையை ஆரம்பிக்கவுள்ளதாக ஜப்பானிய தொழிற்சாலையொன்று நேற்று அறிவித்துள்ளது. கயோட்டோ பிராந்தியத்தில் கமியோகா நகரிலுள்ள மேற்படி தொழிற்சாலையானது கீரை வகையான இலைக்கோசு தாவர செய்கையை மேற்கொள்வதற்கான இந்த ரோபோ பண்ணையை எதிர்வரும் 2017 ஆம் ஆண்டின் மத்தியில் நிர்மாணிக்கவுள்ளது.



47,300 சதுர அடி பரப்பளவில் செயற்படவுள்ள இந்தப் பண்ணையில் ரோபோக்கள் தாவர விதைகளை நாட்டுதல், அவற்றைப் பராமரித்தல் மற்றும் அறுவடை செய்தல் போன்ற அனைத்து விவசாய நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவுள்ளன. இதன் மூலம் தொழிலாளர்களுக்கான செலவு அரைப் பங்காகக் குறைவதுடன் சக்தி செலவினமும் மூன்றில் ஒரு பகுதியாக குறைகிறது. இந்த உள்ளக பண்ணையில் வளர்க்கப்படும் இலைக்கோசுகளின் செய்கைக்கு இரசாயனங்கள் எதுவும் பயன்படுத்தப்படமாட்டாது என தெரிவிக்கப்பட்டுள்ளமை விசேட அம்சமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதாரணமானவனின் மனது

சஞ்சயன் செல்வமாணிக்கம்

# கோழைகளின் தோல்விகள்



அன்றொருநாள் காலை உடல்நிலை சரியில்லையாதலால் எனது வைத்தியரைச் சந்திப்பதற்காய் அவரின் வைத்திய சாலையில் காத்திருந்தேன். அப்போது கதவைத் திறந்து கொண்டு ஒரு வயதான தமிழரும், அவர் மனைவியும் உள்ளே வந்தார்கள். அவரை நான் அறிவேனாகையால் கையைக் காட்டினேன். அவரால் என்னை யார் என்று அடையாளம் காணமுடியவில்லை. எனவே அருகில் வந்து பார்த்தபடியே, சற்றுச் சிந்தித்தார். பின்பு ஆஆ... சஞ்சயன் தானே என்றார். சிரித்தேன். நாம் பல வருடங்களுக்குப் பிறகு சந்திக்கிறோம். குறைந்தது 15 வருடங்களாவதிருக்கும் அருகில் அமர்ந்துகொண்டார். அவர் மனைவி சற்றத் தள்ளி இருந்த ஒரு கதிரையில் அமர்ந்து கொண்டார்.

அவருடனான அறிமுகம் 1987 இல் நடந்தது. மிகவும் திறமையுள்ளவர். அவரின் தமிழ்ப்புலமை அலாதியானது. எல்லோருடனும் மிக இலகுவாகப் பழகுவார். அவரின் தாராளமான பேச்சு அவரின் மீது பலருக்கும் அவர் ஒரு "அலட்டல்" மனிதன் என்ற ஒரு எண்ணத்தையே கொடுத்தது. அவருக்கு பல பட்டப்பெயர்கள் வைக்கப்பட்டு அழைக்கப்பட்டார். அதிலொன்று "வெடிப்பு". வித்தியாசமான கருத்துள்ளவர்கள் அனைவரும் "வெடிப்பு" என்று அழைக்கப்பட்ட காலமது.

அவருக்கும் எனக்கும் குறைந்தது 20வயது வித்தியாசம் இருக்கும். அண்ணண் என்றே அவரை அழைத்தேன். 1987ம் ஆண்டு நாம் வெளியிட்ட ஒரு கையெழுத்துப்பிரதியொன்றில் அவர் தமிழ், தமிழின் தொன்மை, பெருமை பற்றியதொரு கட்டுரை எழுதியதும் நினைவில் இருக்கிறது.

16 வைகாசி 1987ம் ஆண்டு நான் மறக்கமுடியாத நாள். அன்று தான் முதன் முதலாக நான் பல வருடங்கள் குடியிருந்த நோர்வேயின் வடமேற்குக் கரையோரக் கிராமத்துக்கு இன்னும் பல தமிழர்களுடன் அழைத்துவரப்பட்டேன்.

அந்த கிராமத்து வாழ்க்கையின் போதுதான் மேற்கூறிய அந்த அண்ணண் அறிமுகமானார். அதன் பின் நான் அக்கிராமத்திலேயே தங்கிவிட, அவர் சற்றுத் தூரத்தில் இருந்த ஒரு கிராமத்தில் குடியேறினார். அவரை பல வருடங்களுக்கு முன்பு அடிக்கடி சந்திப்பதுண்டு. காணும்போது மகிழ்ச்சியாய் உரையாடுவார்.

அவர் பற்றியதொரு சம்பவம் பசுமரத்தாணியாய் நினைவில் நிற்கிறது. நாம் ஒன்றாய் வாழ்ந்திருந்த காலத்தில், நாம் தங்குமிடத்தில் ஏறத்தாள 50 - 60 இலங்கைத் தமிழர்கள் தங்கியிருந்தார்கள். பலரும் தங்களது 20 வயதுகளில் இருந்தார்கள். சிலர் அதனிலும் இளமையாகவிருந்தார்கள்.

இந்த அண்ணணை எம்முடன் தங்கியிருந்த பலர் எப்போதும் கேலிபேசுவம், நக்கல் பண்ணுவதும் வழக்கம். ஒரு நாள் பலரும் ஓரிடத்தில் கூடியிருந்து உரையாடிக்கொண்டிருந்த போது ஒரு சிலர் குறிப்பிட்ட அந்த அண்ணணை கிண்டல் பண்ணியபடி இருந்தார்கள். பொறுத்துப் பொறுத்துப் பார்த்தார் அண்ணண். அவர்களின் நக்கல் எல்லைமீறிய போது இவ்வளவு கதைக்கிறீர்களே, நான் செய்வதை உங்களால் செய்ய முடியுமா என்றார்? அண்ணை! சத்தியமா உங்களைப் போல எங்களால கதைக்க ஏலாது என்றான் ஒருத்தன் நக்கலாய். அண்ணனுக்கு ரோசம் பொத்துக் கொண்டுவந்தது. நான் இப்ப செய்யுறதை நீங்கள் யாரும் செய்தால் நான் எனது மாதாந்த கொடுப்பனவை தருகிறேன் என்றார். சிலர் ஓம் என்று பந்தயம் கட்டினார்கள். கூட்டம் கூடியது.

அண்ணண் எழுந்தார். குனிந்தார். திடீரென்று கைகளால் நடக்கத்தொடங்கினார். நடந்தது மட்டுமல்ல மாடிப்படிகளில் ஏறி இரண்டாம் மாடியை அடைந்தார். பார்த்துக்கொண்டிருந்தவர்களின் முகங்கள் செத்துப்போயிருந்தன. மீண்டும் கையாலேயே கீழே இறங்கிவந்த அண்ணண், எங்கே உங்களில் யாராவது செய்யுங்கோ பார்ப்போம் என்றார். எவரும் எழும்பவில்லை. தலையைக் குனிந்திருந்தார்கள் அண்ணண் அவர்களைப் பார்த்து நக்கலாய் சிரித்துவிட்டு தனது அறைக்குச்சென்றுவிட்டார். ஒரு மனிதனை கேலிசெய்யும்போது அவனுக்குள் ஒருவித வேகம் விளித்துக் கொள்கிறது. தனக்கான இடத்தை நிறுவிக் கொள்ள, திறமையை வெளிப்படுத்த, அமைதியை உடைத்தெறிய அந்த வேகம் உதவுகிறது என்பதை அன்று அறிந்து கொண்டேன். கேலிபேசுபவர்களுக்கு கேலிபேசப்படுபவரின் மனநிலை, வலி, காயங்கள் எதுவும் புரிவதில்லை. ஆனால் அன்று அந்த அண்ணண் செய்துகாட்டிய ஒரு செயல், அதன்பின் அவர் உங்களால் முடியுமா என்று கேட்டது போன்றவை கேலிபேசிய-வர்களின் மனநிலையை உலுப்பியி-ருக்கும், வெட்கித்துப் போகும் மனநிலையைக் கொடுத்திருக்கும் என்றே எண்ணுகிறேன்.

என்ன அண்ணண் சுகமில்லையோ! என்றேன். தனக்கு தலைசுற்றும், காலில் பெரு வலி கண்டிருப்பதாகவும் சொன்னார். அப்போது அவருக்கு அவர் கையால் நடந்த கதையைக் கூறினேன். சிரித்தபடியே, அது அந்தக்காலம். இப்போ வயது போய்விட்டது என்றார். வயோதிபம்பற்றி அதிகம் பேசினார். அவரின் பேச்சில் பயமும், இனம்புரியாத நடுக்கமும் இருந்தது.

அப்போது வைத்தியர் அவரை வந்து அழைத்துப்போனார். அண்ணண் மெதுவாக ஒரு காலை இழுத்து இழுத்து நடந்துபோவதைப் பார்த்த எனக்கு, எனது வயோதிபத்தை நினைக்க பயமாயிருந்தது.

# உணர்த்தப்பட்ட பயம்

(தன்யா)




திருகோணமலை மூதூரில் இடம்பெற்ற ஓர் சம்பவம்........

கோமகன் அசட்டு துணிச்சல் உள்ளவன். எதை செய்ய கஷ்டமோ அதையே செய்ய துணிவான். யாராலும் அவனை தடுக்க முடியாது. பயந் துறந்தவனாக அனைவருக்கும் கிண்டல் செய்பவனாக இருந்தான். அவனது பள்ளிக் காலம் முடிவடைய இன்னும் ஒரு வருட காலமே உள்ளது. பள்ளிக்கூட தலைமை மாணவனாக இருந்த அவன் படிப்பு, விளையாட்டு அனைத்திலும் முதன்நிலை வகித்தான்.

தன்னிலும் ஒரு வயது மூத்தவளுடன் காதல் வயப்பட்டான் கோமகன். காதல் அவன் கண்களை மறைத்திருக்க வேண்டும். அவளுக்காக எதையும் செய்வான் அவன். இருவரும் மிகவும் நெருக்கமாக பழகி வந்தனர். பெண் வீட்டாருக்குத் தெரிய வந்ததும் அவர்கள் (கெட்டிக்காரனும், பணக்காரனுமான அவனை யாருக்குத் தான் பிடிக்காது) பச்சைக் கொடி காட்டினர்.

பல தடவைகள் விசேட வகுப்பு இருப்பதாக பொய் உரைத்து எங்கேனும் சென்று சந்தித்து வந்துள்ளனர்.

அன்றும் அவ்வாறே.... இருவரும் வீட்டில் பொய் சாட்டு சொல்லி விட்டு அருகில் இருந்த காட்டுப் பகுதிக்குச் சென்று வர திட்டமிட்டனர். திட்டத்தை அமுல்படுத்தும் நாள் இன்று....

மிகவும் ஆனந்தமாக இருவரும் வீட்டில் இருந்து புறப்பட்டனர். சற்று தொலைவில் சந்தித்து பின்னர் ஒன்றாய் பயணிக்க தொடங்கினர். காட்டினுள் செல்லும் ஒற்றையடிப் பாதையில் வைத்து இருவரது சைக்கிளினதும் டயர்களில் காற்று இறங்கியது. காதலி மேற்கொண்டு செல்ல பயந்தாள். ஆனால் அவனோ அவளை அணைத்தவாறு மெல்ல அழைத்துச் சென்றான். இன்னும் சிறிது தூரம் சென்றதும், இருள் சூழ்ந்ததை இருவரும் உணர்ந்தனர். திரும்பிப் பார்த்தால் தாம் வந்த பாதை அல்ல இது என்பதைப் புரிந்து கொண்டனர். கோமகனின் மனதும் கூட சஞ்சலத்தில் அகப்பட்டது. இருப்பினும் தைரியத்தை வரவழைத்தபடி மேற்கொண்டு நடக்கலானார்கள்.

தன்னைப் பற்றியிருந்த மென்மையான கை சற்று கரடானது. ஏதோ ஒரு மணமும் கூட அவனை பின்தொடர்ந்தது. ஏதேதோ கதைத்தவாறே சென்று கொண்டிருந்தான் அவன். சில நொடிகளில் தன்னுடன் வந்த உருவம் வேறொன்றாக மாறியிருப்பது போல் உணர்ந்தான். பின்னால் திரும்பிப் பார்க்க முடியாமல் திணறினான். இவ்வளவு காலத்தில் தான் அனுபவித்திராத உணர்ச்சி மேலெழும்பியது. என்ன செய்வதென்று புரியவில்லை. அது கையை இறுக்குவது தெரிந்தது. மறு கையினால் தொலைபேசியை தடவினான். அவ்வுரு முரட்டு குரலில் என்னம்மா தேடுகிறாய் என அவளைப் போல் வினவியது. மெல்ல கழுத்தில் கூசியது அவனுக்கு... தொடைகள் பலமிழந்தன. நடப்பதை நிறுத்தவும் பயமாய் இருந்தது. தன்னை தாண்டி தற்போது அவ்வுரு முன்னேறுகின்றது.

விரித்த தலைமுடியுடன் மிக நீண்ட பற்கள் வெளித்தெறிய குடலை பிரட்டும் நாற்றத்துடன், வீணி வடிய அது என்னை நோக்கியது.... நோக்கி சிரித்தது.

அவனுக்கோ வியர்த்துக் கொட்டியது. எப்படித் தப்பிப்பது எனத் தோன்றவில்லை. சிந்திக்க மறுத்தது மூளை.... கை உதற மறுத்தது. கால்கள் ஓட மறுத்தன. அனைத்தும் தன் கட்டுப்பாட்டை இழந்து அதன் போக்கில் போய்க் கொண்டிருந்தேன் நான். என் உள்ளுணர்வு மாத்திரமே எனக்குத் தெரிந்தது.

அது என் பிடரியில் கை வைத்து வளைத்து குரல்வளையை கடிக்க வாயைத் திறந்தது. உள்ளுணர்வையும் இழந்தேன்.

கண் விழித்த போது, தன் காதலி சைக்கிளை நிறுத்தி விட்டு வரும்முன்னர் தான் யாரோ ஒருவருடன் கதைத்தவாறு நடந்து உள்ளே சென்றதாகவும் உடன் அவள் ஐவருடன் காட்டிற்குள் தன்னை தேடி வந்ததாகவும், அனுங்கியவாறே கையை மேலே அசைத்த வண்ணம் கீழே விழுந்து கிடந்ததாயும் அவள் கூறினாள். நான் தப்பிப் பிழைத்தேன் என பெருமூச்சு விட்டான் அவன்.

# யோசித குழந்தை என்றால்...?

அண்ணே யோசிதவுக்கு எத்தினை வயது? பத்தே? என்றபடி மூச்சிறைக்க ஆலமரத்தபடிக்கு ஓடிவந்தான் சின்னத்தம்பி. உனக்கென்ன விசரே என்றார் கந்தையா. பிறகென்ன? பாக்க நல்ல பெரிய பொடியன் மாதிரி இருக்கிறான். யோசிதவை எங்கடை வீட்டுக் குழந்தை எண்டு கோத்தபாய சொல்லுறார் என்றான் சின்னத்தம்பி.

அப்பிடி அவரின்டை கண்ணுக்குத் தெரியுது. அண்ணாவின்டை பிள்ளைதானே. அது பாசமடா என்றார் கந்தையா. ஆனால் அண்ணை யோசித குழந்தையாய் தெரிஞ்ச கண்களுக்கு பாலச்சந்திரன் எப்பிடி தெரிஞ்சிருக்கிறான் எண்டு யோசிச்சுப் போருங்கோ என்றார் இரத்தினத்தார்.

ஓமடா.. ஒரு அப்பாவி பாலகனை கொன்றவங்கள் எல்லே? அந்தப் பிஞ்சு உடம்பிலை துப்பாக்கியை வைச்சு கொன்றவங்கள். அதுவும் கோத்தபாயவின்டை ஓடரிலைதான் அவனை கொன்றவங்களாம் என்றார் இரத்தினத்தார்.

அது மட்டுமேயடா. சனல் 4 ரிவியிலை பாறன். எத்தினை சின்னப் பொடியள். எத்தினை சின்னக் குழந்தையள் எல்லாம் கொன்று வீசியிருக்கிறாங்கள் என்றார் கந்தையா. சனல்4 ரிவியிலை இருக்கிற ஒரு பொடியன் பிறகு சித்திரவதை செய்து கொல்லப்பட்டிருக்கிறான் என்றார் இரத்தினத்தார்.

எத்தினை சிறு பொடி பிள்ளையள் காணாமல் போயிருக்குது கையிலை குடுத்ததுகளே காணேமால் போட்டுது எண்டு கையை விரிச்சவையள் மகிந்த குடும்பம் என்றார் கந்தையா. ஊரிலை உள்ள பிள்ளையள் எல்லாத்தையும் அழிச்சுப்போட்டு தங்கடை பிள்ளை பால்குடி குழந்தை எண்டுறினமோ என்றார் இரத்தினத்தார் கோபமாக.

சிராந்தியக்கா தூக்குச் சட்டியிலை சாப்பாடு கொண்டு போய் யோசிதவுக்கு தீத்தி விடுறாவாம் என்றார் கந்தையா. உவையளால எங்கடை எத்தினை சனங்கள் ரயில் ஏறி மாதம் ஒருமுறை சிறையிலை இருக்கிற பிள்ளையள பாத்திட்டு வருகுதுகள் என்றார் இரத்தினத்தார்.


அதுமட்டுமே எங்கயிருந்தாலும் சாப்பாடு கொண்டேய் குடுக்கலாம். எங்க இருக்கெண்டே தெரியாமல் பிள்ளையளைத் தேடுற தாய்மார் எத்தினை பேரடா என்றார் கந்தையா. பின்னை என்ன? அந்த தாய்மார் அதுகளை தேடாத இடமிருக்கே? உந்தப் பாவம் விடுமே என்றார் இரத்தினத்தார்.

அடேய் பாலச்சந்திரனை கொன்றதை அவையள் நியாயப்படுத்தினது உனக்கு நினைவிருக்கே என்றார் கந்தையா? ஓ.. அவனும் பயங்கரவாதி அவனும் ஆயுதப் பயிற்சி எடுத்தவன் எண்டும் உந்த குறூப் சொல்லி அவன்டை படுகொலையை நியாயப்படுத்தினதை மறப்பமே என்றார் இரத்தினத்தார்.

இதை ஆரும் நம்புவினமே என்றான் சின்னத்தம்பி. அடேய் கோத்தபாயவும் மகிந்தவும் நம்பிற மாதிரியே கதைக்கிறவையள்? என்றார் கந்தையா.

அப்ப யோசித குழந்தை எண்டுறதும் அப்பிடியே? என்றான் சின்னத்தம்பி. கந்தையாவும் இரத்தினத்தாரும் சிரித்தனர்.

குழந்தையை கடற்படையிலை சேத்த குற்றத்திற்கு கோத்தபாயவை சிறையிலை அடைச்சால் என்ன என்று கேட்டுச் சிரித்தது ஆலமரம்.




www.globaltamilnews.net

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேற்கையும் சீனாவையும் சமாளித்தல்

பிராந்திய அளவிலும் உலகப் பரப்பரப்பிலும் மேற்கின் கடல் போக்குவரத்தில் அதிகாரம் செலுத்தும் நீண்டகால பண்பை மாற்றி அமைக்கும் சக்தியாக உள்ள சீன-பாகிஸ்தானிய பொருளாதார பாதை ஒப்பந்தம் ஆட்ட-மாற்றீட்டு சக்தி கொண்டதாக அமையும்.

இந்தியாவின் இந்து சமுத்திர ஆதிபத்தியம் குறித்த வளர்ச்சியில், அமெரிக்கா முக்கிய பங்கு வகிக்கிறது. கடந்த ஆண்டு ஜனவரி மாத இறுதியில் அமெரிக்க அதிபர் ஒபாமா அவர்களின் இந்திய பயணத்துடன் பொது மக்கள் பாவனைக்கு உரிய அணுத் தொழில்நுட்ப ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. இதன் பிரகாரம் அமெரிக்க அணு மின் உற்பத்தி தொழில்நுட்பம் இந்தியாவுக்கு கொண்டு வருவதற்கு வாய்ப்பு ஏற்பட்டது.

இந்தியாவுக்கு புதிய உயர்தர யுத்த விமானமான எப்-35 விமானங்களையும், எப்-16 எப்-18 ரக விமானங்களும் பல்வேறு விதமான பாதுகாப்பு உபகரணங்களும் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு கிடைத்தது.

பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் ஆட்சி அதிகாரத்தை பெற்று கொண்டதிலிருந்து இந்தியாவின் கருத்துருவமே மாறிவிட்டது என பல ஆய்வாளர்கள் எழுதி வருகின்றனர். அதிவேகமாக முன்னேறிவரும் இந்திய பொருளாதாரத்திற்கு ஈடு கொடுக்கும் வகையில் இந்த வளர்ச்சி வேகத்திற்கு ஏற்றாற்போல், இந்தியா சமூக தேவைகளுக்கான அணுமின் உற்பத்தி செய்வதற்கான வர்த்தக அனுமதியைப் பெற சர்வதேச அணுசக்தி நிறுவனத்திடம் அமெரிக்கா அழுத்தம் பிரயோகித்து அந்த அனுமதியை பெற்று கொடுத்தது.

இந்தியாவுக்கான அமெரிக்க உதவிகள் பிராந்திய மட்டத்தில் சீனாவுடன் சமநிலைப்படுத்தல் என்பதையே மையமாக கொண்டது. சீன தலையீடும் செல்வாக்கும் மிகமுக்கியமாக தெற்காசிய நாடுகளில் அதிகரித்திருக்கிறது என்பது பொதுவான நோக்கு. இதனால் தெற்காசிய நாடுகள் இந்திய-அமெரிக்க கூட்டுக்குள் அடங்காது கை நழுவிப்போவதை தடுப்பதிலே மிகவும் பிரயத்தனம் எடுக்கப்படுகிறது.

பதிலுக்கு சீனா பல பில்லியன் டாலர் திட்டங்களை ஆசிய நாடுகள் மத்தியிலே அறிமுகப்படுத்தி அந்த நாடுகளை தன் வசம் கொண்டுவர முயற்சிக்கிறது. ,ந்த அரசியல் இராசதந்திர அரங்க சந்தியிலே, இராசதந்திர அழுத்தங்கள். வர்த்தக தலையீடுகள், படைபல காட்சி நிகழ்வுகள் (கூட்டு படைப் பயிற்சிகள் கடற்படை விமானந்தாங்கிகளின் வருக, பாதுகாப்பு அதிகாரிகளின் வருகை என்பனவற்றை குறிப்பிடலாம்.) என பல்வேறு வகையிலும் தெற்காசிய நாடுகள் பெரும் சோதனைகளை கண்டு வருகின்றன.

ஆக இந்து சமுத்திர பிராந்தியம் 21ஆம் நூற்றான்டின் பூகோள இராசதந்திரத்தின் மத்திய அரங்காக காட்டப்படுகிறது. இந்து சமுத்திரத்திலே கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நாடுகளாக பாகிஸ்தான் சிறீலங்கா மியான்மர் ஆகிய மூன்று நாடுகளும் அந்த மூன்று நாடுகளுக்குள் உள்ள தனிம கூறுகளும் இந்த இருதரப்பிற்கும் மத்தியில் மிக ஆழமான செல்வாக்கிற்கு உட்பட்ட நிலையில் உள்ளன .

இங்கே முதலில் பாகிஸ்தான் குறித்த ஆய்வை பார்ப்பதற்கு முன்பாக பாகிஸ்தான் -இந்திய உறவு மீதான மேற்கத்தேய பார்வை எவ்வாறு உள்ளது என்பது முக்கியமானதாகும். பாகிஸ்தானிடம் இருக்கும் அணுஆயுத பலம் குறித்த கவலை அமெரிக்க இராணுவ ஆய்வாளர்கள் மத்தியில் எப்பொழுதும் உள்ளது.

பாகிஸ்தானிடம் இருக்கும் அணு ஆயுத தொழில்நுட்பம் அமெரிக்க எதிர் நோக்குடைய எந்த சக்திகளிடமும் போய் விடக் கூடாது என்பதிலே அமெரிக்க இராணுவ ஆய்வாளர்கள் மிகவும் கரிசனை கொண்டுள்ளனர். அவர்களுடைய கருத்துப்படி, உலகில் பொதுவாக நாடுகள் தமது தேவைகளுக்காக இராணுவத்தை வைத்திருக்கின்றன, ஆனால் பாகிஸ்தானில் மட்டும் இராணுவம் தனது தேவைக்காக நாட்டை வைத்திருக்கிறது என்பதாகும்.

ஏனெனில் பாகிஸ்தானிய அரசியலில் இராணுவத்தின் செல்வாக்கு மிகவும் ஆழமானது என்பது அமெரிக்க ஆய்வாளர்களின் பார்வையாக உள்ளது.

அதேவேளை, பிரபல அரசியல், பொருளியல் மேதையும் சமூக பொருளாதார விஞ்ஞான ஆய்வுக்காக நோபல் பரிசு பெற்று கொண்டவருமான அமர்தியா சென் (Amartya Sen) , இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தனது பிரதமர் பதவி ஏற்பு வைபவத்திற்கு பாகிஸ்தானிய பிரதமர் நவாஸ் சரீப் பை விருந்தினர்கள் பட்டியலில் சேர்த்துக் கொண்டதை, நரேந்திர மோடியின் புத்திசாலித்தனம் என்று மெச்சியிருந்தார்.

அதுமட்டுமல்லாது, இந்தியா பிரிக்கப்பட்ட போது காங்கிரஸ் கட்சியினர் இந்து-முஸ்லீம் மக்களிடையே பிரிவினை இருக்கக் கூடாது என்ற கூறி வந்தனர். அதாவது இந்து நாடு இந்தியா வென்றும் இஸ்லாமிய நாடு பாகிஸ்தான் என்றும் பிரிவே இருக்கக் கூடாது என்றும் வலியுறுத்தினர். ஆனால் பாகிஸ்தானிய தேச தந்தையாக கருதப்பட்ட தலைவர் முகமது அலி ஜின்னா தான் முஸ்லீம்களுக்கு ஒரு நாடு, இந்துகளுக்கு ஒருநாடு என்று கூறி வந்தார். இப்பொழுது இந்தியாவில் மோடியின் வெற்றியுடன் இந்தியா இந்து நாடாக இன்று மாறியுள்ளது. இன்று பாகிஸ்தானியர்கள் தமது விருப்பப்படி இஸ்லாமிய நாடாகவும், இந்தியா இந்து நாடாகவும் மாறி, ஜின்னா விருப்பப்பட்ட அந்த மாதிரி அமைப்பை, மோடி இட்டு நிரப்பி இருக்கிறார்- என்றும் குறிப்பிட்டிருந்தார்.

அமர்தியா சென்னின் அதே பேட்டியில் இந்தியா மதசார்பற்ற நாடாக இருப்பதாக கொண்ட சிந்தனையை மோடியால் மாற்ற முடியாது, ஆனால் பாகிஸ்தான் மத சார்புடைய நாடாகவே இருக்கும் சிந்தனையை கொண்டது என்றும் குறிப்பிட்டிருந்தார்.

இந்தியாவின் வளர்ச்சியும் அமெரிக்க இராணுவ தொழில் நுட்ப, இராசதந்திர பலமும் தெற்காசியாவின் பல நாடுகளை சமூக ,பொருளாதார, அரசியல் மாற்றங்களை உருவாக்கி வருகிறது. சென் அவர்களின் கூற்றுக்கு இணங்க ஆரம்பத்திலிருந்தே இந்திய - பாகிஸ்தானிய போட்டி நிலையை தமது பூகோள நலன்களின் தேவைக்கு ஏற்ப இன்றும் மத வடிவிலான ஒருபார்வை மேலை நாடுகளால் நகர்த்தப்படுகிறது.

இந்த நகர்வு அதீத போட்டி மனப்பாங்கை ஒருபகுதிக்கும் அதீத அதிகார நிலையை மறுபகுதிக்கும் உள்ளார்ந்த நிலையில் உருவாக்குவதில் கரிசனை காட்டப்படுகிறது. போட்டி மனநிலை கொண்ட பாகிஸ்தான், இந்தியாவுக்கு நிகரான கேந்திர முக்கியத்துவத்தை தனது வளர்ச்சிக்கு உறுதுணையாக கொண்டு செயற்பட்டு வருகிறது.

சீன- பாகிஸ்தானிய பொருளாதார பாதை இதுவரை காலத்திலும் சீனா முதலீடு செய்திராத மிகப்பெரிய 46 பில்லியன் டொலர் பெறுமதியான ஒப்பந்தம் ஒன்றை பாகிஸ்தான், சீன அரசுடன் செய்து கொண்டுள்ளதை இந்திய- பாகிஸ்தான் போட்டி நிலைக்கு மிகச்சிறந்த உதாரணமாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

பிராந்திய அளவிலும் உலகப்பரப்பரப்பிலும் மேற்கின் கடல் போக்குவரத்தில் அதிகாரம் செலுத்தும் நீண்ட கால பண்பை மாற்றி அமைக்கும் சக்தியாக உள்ள இந்த ஒப்பந்தம் ஆட்டம்-மாற்றீட்டு சக்தி கொண்டதாக அமையும் என்ற பரப்புரை பரவலாக உள்ளது. வெறும் அதிவேக வீதி அமைக்கும் ஒப்பந்தமாக அல்லாது போக்குவரத்துடன் தொலைதொடர்பு, சக்திவள கட்டமைப்பு ஆகியவற்றையும் உள்ளடக்கிய 3000 கிலோ மீட்டர் நீளமான திட்டமாக இருப்பதால் பாகிஸ்தானிய பொருளாதார வளர்ச்சியில் பெருமாற்றத்தை கொண்டு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தனது உள்நாட்டு பொருளாதாரத்தில் சுழற்சியை ஏற்படுத்தும் குறிக்கோள் கொண்ட - ஒரு சூழல் ஒரு பாதை-திட்டத்தின் கீழ் சீன வட-மேற்கு பிராந்தியமான Xinjiang > Uygur Autonomous Region, Kashgar எனும் பகுதியிலிருந்து தெற்காக பாகிஸ்தானிய காஷ்மீர் பகுதி பிரதான நகரான கில்கிட் ஊடாக இந்து நதி கரையோரமாக காரக்கோரம் வேகப்பாதை அமைக்கப்பட்டு பாகிஸ்தானிய தலைநகரான இஸ்லாமாபாத் ஊடாக பாகிஸ்தானின் பிரதான மாநிலங்களான பஞ்சாப், சிந்து, பலூசிஸ்தான் மாநிலங்களுடாக தெற்கே கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த துறைமுகமான குவடார் வரை அமைகிறது.

இந்த திட்டத்தின் கேந்திர முக்கியத்துவம் குறித்து பல ஆய்வுகள் பிராந்திய அளவிலும் சர்வதேச அளவிலும் தொடர்ந்த வண்ணம் இருக்கின்றன. பாகிஸ்தானிய பொருளாதார பாதையின் மூலம் சீனாவுக்கு என்ன நன்மைகள் என்பதை நோக்கினால் இத்திட்டம் நிறைவு பெறும் பட்சத்தில் கோர்மூஸ் நீரிணைக்கு மிக அருகில் அமைந்துள்ள குவடார் துறைமுகம் மூலம் அடுத்த நாற்பது வருடத்திற்கு சீனா உலகின் அறுபது சதவீத மசகு எண்ணெய் ஏற்றுமதியை கொண்ட கடற்போக்குவரத்தை கண்காணிக்க முடியும்.

அடுத்து பெரும் தொகையான எண்ணெய் வளங்களை இந்த பாதை யூடாக செல்லும் எண்ணெய்க் குழாய்கள் வழியாக பாதுகாப்பாக பெற்றுக்கொள்ளலாம். இதன் மூலம் பல பில்லியன் பெறுமதியான பணச் செலவையும் நேர மிச்சத்தையும் பெற்றுக் கொள்ளலாம். ,ந்து சமுத்திரம் வழியாக மிக நெருக்கமான மலாக்கா நீரிணையை ஊடறுத்து தென் சீனக்கடல் வழியாக வந்தடையும் எண்ணெய் வளத்தை மிகக்குறுகிய காலப்பகுதிக்குள் குறைந்த செலவில் பெற்று கொள்ளக்கூடிய சாத்தியகூறுகள் இருப்பதாக சீன தொழில்நுட்ப பொருளியலாளர்கள் கருதுகின்றனர்.

இது தவிர ஐக்கிய அமெரிக்க கடற்படையின் பிரசன்னம் கூடியளவில் காணப்படும் தென் சீன கடல் பகுதியை தவிர்த்துக் கொண்டு, தனது வழங்கல்களை உறுதி செய்து கொள்ளும் நிலை சீனாவுக்கு ஏற்படும். ,தன் முலம் அமெரிக்க கடற்படையினால் தென் சீனக் கடற்பகுதிக்கு கொடுத்து வரும் பெறுமானத்தை வலுவிழக்க அல்லது நீர்த்து போக வைக்க முடியும்.

அத்துடன் குவடார் ஒரு வர்த்தக துறைமுகமாக சாதாரண மக்கள் தேவையை நோக்காக கொண்ட வகையில் கட்டி அமைக்கப்பட்ட போதிலும் தேவைகள் ஏற்படுமிடத்து இராணுவ கடற்படை உபயோகத்திற்கும் ஏற்றவாறு சீன கடற்படை தளபாடங்களை இலகுவாக பொருத்தி உபயோகப்படுத்த கூடிய வகையிலேயே வடிவமைக்கப்பட்டுள்ளது.

தேவை ஏற்படும் பொழுது எந்தவித வடிவமைப்பு மாற்றங்களும் செய்து கொள்ளாது சீன கடற்படை இராணுவ தேவைகளுக்கு பாவித்து கொள்ள கூடிய வகையில் ஒவ்வொரு துறைமுகமும் அமைக்கப்பட்டு வருவது குறித்த மேலைத்தேய கேந்திர பாதுகாப்பு நோக்கர்கள் கரிசனை கொண்டுள்ளனர்.

சீனாவின் Uygur பிரதேசத்திலிருந்து பாகிஸ்தானிய எல்லைக்குள் நுழைவதற்கு குஞ்சிராப் கடவை எனும் பகுதி ஊடாக, 1947 ஆம் ஆண்டு தொடக்கம் பாகிஸ்தான் தனது கட்டுபாட்டிற்குள் வைத்திருக்கம் காஷ்மீரப் பகுதி ஊடாக இப்பாதை தொடங்குகிறது. இந்தியா தனது சொந்தமான வரலாற்று முக்கியத்துவம் கொண்ட புறநிலப்பகுதியாக இந்த பிரதேசத்தை பார்க்கிறது.

ஜம்மு காஷ்மீர் மாநிலத்தின் ஒருபகுதியான கில்கிட்-பல்திஸ்தான் மீதான சீன பாகிஸ்தானிய தலையீட்டுகள் தனது புவியியல் முலோபாயத்திற்கு சவால் விடும் நகர்வாக இந்தியா நோக்குகிறது. அதே வேளை நீண்ட காலமாக தீர்க்கப்படாது ,ருக்கும் இரு நாடுகளுக்கும் இடையிலான காஷ்மீரப் பிரச்சினையை தீர்த்து விடுவதற்கு இது நல்ல சந்தர்ப்பமாக அமைவதாக பாகிஸ்தானிய ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

சீன அதிகாரிகள் பாகிஸ்தானிய தரப்பிற்கு ஏற்கனவே கொடுத்த அழுத்தங்களின் அடிப்படையில் கில்கிட் - பல்திஸ்தான் பகுதியை தனது சட்டபூர்வ மாநிலமாக மாற்றுவதில் பாகிஸ்தான் முயன்று வருகிறது. இந்த வகையில் சீனாவின் தேவையை பூர்த்தி செய்ய வேண்டிய நிலையில் இருக்கும் பாகிஸ்தான், இந்தியாவையும் திருப்தி செய்யும் வகையில் தீர்ப்பது குறித்த கவனத்தில் உள்ளது.

அதேபோல சீன-பாகிஸ்தானிய பொருளாதார பாதையின் செயல் வேகம் உச்சநிலையை அடைந்து கொண்டிருக்கும் அதேவேளை, பாகிஸ்தானிய அரசாங்கம் தென்மாநிலமான பலூசிஸ்தானில் பாதுகாப்பு சட்டம் ஒழுங்கை நிலை நிறுத்தவேண்டிய தேவையில் உள்ளது. பலூசிஸ்தான் தேசியவாதிகள், இஸ்லாமிய அடிப்படைவாதிகள், மதப் பிரிவினை வாதிகள் என பல ஆயுதக்குழுக்களின் செல்வாக்கினை கடந்து சட்டம் ஒழுங்கை நிலை நிறுத்த வேண்டிய பொறுப்பு பாகிஸ்தானிய அரசாங்கத்திடம் உள்ளது

ஆக சடுதியான மாற்றங்களை உருவாக்கக் கூடிய பலூசிஸ்தான் பிரதேசம் இந்த முழுத்திட்டத்திற்கும் வாயிற்கதவாக அமைந்திருப்பது பாகிஸ்தானின் பாதுகாப்பு செலவீனத்தை பெருமளவில் அதிகரிக்கும் என எதிர் பார்க்கப்படுகிறது.

சீன-பாகிஸ்தானிய பொருளாதார பாதையில் பாகிஸ்தானின் அயல் நாடான ஈரான் இனைந்து கொள்ளும் போது சீன-பாகிஸ்தான்- ஈரானிய கூட்டு மத்திய ஆசிய பிராந்தியத்தை தன்னிறைவு பெற்ற பிராந்தியமாக மாற்றக்கூடிய நிலை ஏற்படலாம் என்பது மேலைதேய ஆய்வாளர்களின் பார்வையாகும்.

பிராந்திய நாடுகள் மத்தியிலான "ஒன்றில்-ஒன்று தங்கி இருக்கக்கூடிய இராசதந்திரம் வளர்ச்சியடையும் போது, மேலைத்தேய இராசதந்திர பலம் பிராந்தியங்களில் வலுவிழந்து போவது தவிர்க்க முடியாது என்பது சர்வதேச உறவு குறித்த கோட்பாட்டாளர்களின் பார்வையாகும்.

பிரதான கனிம வளங்களை கொண்ட மத்திய ஆசியாவின் முக்கியத்துவம் மிக வேகமாக வளர்ச்சி நிலையை கண்டுவரும் அதேவேளை, சீன பொருளாதார உதவியும். இருதரப்பிற்கும் வெற்றியை தரும் பொருளாதார ஒப்பந்தங்களும் நாடுகள் பிராந்திய நாடுகள் மத்தியிலே போர் தவிர்ப்பு உடன்படிக்கைகளை உருவாக்க வேண்டிய தேவை உள்ளது.

சீன-பாகிஸ்தானிய பொருளாதார பாதையின் உறுதிப்பாடும் அதன் அவசியமும் பாகிஸ்தானுக்கு எதிரான எந்த வல்லரசின் நடவடிக்கையும் சீன பொருளாதார வளர்ச்சிக்கான பிராண வாயுவை தடுக்கும் செயலாக சீனா பார்க்க வேண்டிய நிலை ஏற்படும். மிக நீண்ட தூரத்திற்கு முழு நாட்டையும் கொள்ளடக்கி உள்ள இப்பாதை அமைக்கும் திட்டத்திற்காக, பாகிஸ்தானை ஒரு கட்டமைப்பின் கீழ் வைத்திருப்பதன் முலமே சீனா தனது பொருளாதார வளர்ச்சியை உறுதிப்படுத்திக் கொள்ள முடியும்.

தோல்வியுற்ற அரசுகளின் பட்டியலில் பாகிஸ்தானை சேர்த்து விமர்சித்து வரும் மேலை நாடுகள், சிறு சிறு ஆயுதக் குழுக்கள், மதவாத அமைப்புகள், அடிப்படைவாதக் குழுக்களின் தலைமை-களை விமானி அற்ற விமானங்கள் மூலம் குண்டு வீசி அரசியல் படுகொலைசெய்யும் நடவடிக்கைகளை பாகிஸ்தானின் பின்தங்கிய பிரதேசங்களில் மேற்கொண்டு வருகின்றன.

அதேவேளை இந்த குழுக்களை பாகிஸ்தான் கட்டுப்படுத்த வேண்டும் என்பது மேற்கின் தொடர்ச்சியான அழுத்தமாகும். நாட்டின் சட்டம் ஒழுங்கு வலுஅற்ற நிலை, உள்ளூர் மக்களின் வறுமை நிலை, அரசியல் தலைவர்களின் ஊழல் அரசியல், இராணுவ தலையீடுகள், ஆகிய உள்ளக அழுத்தங்களோடு சீன-பாகிஸ்தானிய பொருளாதார பாதையின் புதிய நலன்களை எதிர்பார்த்து பயணிக்கிறது பாகிஸ்தான்.

**நன்றி - லோகன் பரமசாமி**
**புதினப்பலகை**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீன் முரசு

## பாவங்களுக்கு பரிகாரமாகும் நோன்பு

**மனைவியைத் தாய்க்கு ஒப்பிடுதல்:**

எவர் தமது மனைவியரைத் தாய்க்கு ஒப்பிட்டு, பின்னர் (தாம்) கூறியதிலிருந்து மீண்டு விடுகின்றார்களோ அவர்கள், (கணவன், மனைவியாகிய இருவரும்) ஒருவரை ஒருவர் தீண்டுவதற்கு முன்னர் ஓர் அடிமையை விடுதலை செய்ய வேண்டும். இதைக் கொண்டே நீங்கள் உபதேசிக்கப்படுகிறீர்கள். மேலும், நீங்கள் செய்பவற்றை அல்லாஹ் நன்கறிந்தவன்.



எவர் (அடிமையைப்) பெற்றுக் கொள்ள வில்லையோ அவர், ஒருவரை ஒருவர் தீண்டுவதற்கு முன்னர் தொடராக இரண்டு மாதங்கள் நோன்பு நோற்க வேண்டும். (இதற்கு) எவர் சக்திபெற வில்லையோ அவர் அறுபது ஏழைகளுக்கு உணவளிக்க வேண்டும். இது நீங்கள் அல்லாஹ்வையும் அவனது தூதரையும் நம்பிக்கை கொள்வதற்காகவே (விதியாக்கப்பட்டுள்ளது.) இவை அல்லாஹ்வின் வரம்புகளாகும். நிராகரிப்பாளர்களுக்கு நோவினை தரும் வேதனையுண்டு. (58:2-4)

ஜாஹிலிய்யாக் காலத்தில் மனைவியை தாய்க்கு ஒப்பிட்டால் அவர்கள் பின்னர் கணவன்-மனைவியாகச் சேர்ந்து வாழ முடியாது என்ற விதி இருந்தது. இஸ்லாம் மனைவியைத் தாய்க்கு ஒப்பிடுவதைக் கண்டிக்கின்றது. அப்படி ஒருவர் ஒப்பிட்டால் மீண்டும் மனைவியுடன் சேர்வதற்கு முன்னர் பரிகாரம் காண வேண்டும். தகுந்த பரிகாரம் கண்ட பின்னர் அவர்கள் கணவன்-மனைவியாக இணைந்து இல்லறம் நடாத்தலாம் என்று கூறுகின்றது.

இந்த வசனத்தில் இதற்கான பரிகாரம் பற்றி விபரிக்கப்படுகின்றது.

தொடரும் .. ..

**– இஸ்மையில் –**

## ஜெபம்

**மனிதரின் இரத்தத்தை உறிஞ்சி நோயையும், தூக்கமின்மையையும் ஏற்படுத்துகிற "கொசு" க்களைப் ஏன் கடவுள் படைத்தார்?**

எல்லா உயிரினங்களும் ஒன்றை ஒன்று சார்ந்து வாழ்கின்ற நியதி இறைவன் கொடுத்த நியதி.



அவை ஒன்றுக்கொன்று உதவி செய்கின்றன. ஒருவேளை தனிப்பட்ட ஒரு பூச்சியோ விலங்கோ மனிதருக்கு நேரடியாக உதவிசெய்யவில்லை என்றாலும் மற்ற உயிரினங்களுக்கு உதவி செய்யவோ அல்லது உணவாகவோ கடவுள் அவைகளைப் படைத்திருக்கிறார். ஆனால் கொசுவைப் படைத்த கடவுள் அதன் கடியிலிருந்து பாதுகாத்துக்கொள்ள ஆயிரம் வழிமுறைகளைக் கொடுத்திருக்கிறார்.

எனவே, நீ நீதியையும் நியாயத்தையும் நேர்மையையும் நலமார்ந்த நெறிகள் அனைத்தையும் தெரிந்துகொள்வாய். ஞானம் உன் உள்ளத்தில் குடிபுகும் அறிவு உன் இதயத்திற்கு இன்பம் தரும். அப்பொழுது, நுண்ணறிவு உனக்குக் காவலாய் இருக்கும் மெய்யறிவு உன்னைக் காத்துக்கொள்ளும். - நீதிமொழிகள் 2:9-11

எல்லா உயிரினங்களுக்கும் அதிபதியாக மனிதரைப் படைத்தாலும் நாம் விரும்பியவாறு உயிரினங்களை கொல்ல அல்லது கொடுமைப்படுத்த, மனிதருக்கு உரிமையில்லை.

அவைகளும் வாழவேண்டு மென்றே கடவுள் படைத்துள்ளார். இருந்தாலும் நமது உணவிற்காக கொல்வதும் அல்லது நமது அன்றாட வாழ்விற்கு பெரும் இடைஞ்சலாக இருக்கும் சூழ்நிலைகளில் அதை அப்புறப் படுத்துவதோ அல்லது கொல்வதோ குற்றமாகாது. ஈக்கள் வாழ வேண்டிய இடம் நமது வீடு அல்ல. அதனால் வீட்டிற்குள் புகும் ஈக்களையெல்லாம் கொல்வதும் சரியான செயல் ஆகாது.

**மூட்டைபூச்சியையும் கடவுள் படைத்தார் எனில் அதை நாம் நசுக்குவது சரியா?**

தொடரும் .. .

www.bible.me

## குறுக்கெழுத்து புதிர் 05

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | ■ | 2 | | | ■ |
| 3 | 16 | த | | | 4 | 17 | 18 | |
| 5 | | | 6 | | | கை | | 19 |
| 7 | ண | 20 | | 21 | | | 8 | |
| ■ | | | 9 | | று | ■ | | ■ |
| 10 | | | | | 11 | | | |
| ■ | 12 | 22 ர | | | 13 | பு | | ■ |
| ■ | | | | 14 | | | | |
| 15 | | | | ல | | ■ | ■ | ■ |

முடிவுத் திகதி : 11.02.2016

### இடமிருந்து வலமாக

1. காண்டீபதாரியின் அஸ்திரத்தால் மடிந்தவர்.
2. சிவனடியார்கள்
3. குதிரையை வைத்து விளையாடும் இதுவும் சூதுதான்.
4. தீபாவளி சமயத்தில் இடப்படும் விசேட கோலம்
5. இவளையும் இவள் செய்யும் தொழிலையும் ஒரு சொல்லில் அழைக்கலாம்.
6. அண்மையில் வெளிவந்த ஜீவாவின் படம்.
7. நெற்றிக்கண் திறந்தமை பெண்களின் கூந்தலின் இது பற்றி வாதித்ததால் - திரும்பியுள்ளது.
8. ஆண்களின் பாரம்பரிய ஆடைகளுள் ஒன்று
9. யானை
10. நால்வர் சந்திக்கும் இடம்
11. காண்டீபதாரியை இவ்வாறும் அழைக்கலாம்
12. மனிதனுக்கு ஒட்சிசனைப் பெற்றுத்தர பங்களிப்பது
13. வெளிச்சம் தருவதை பேச்சு வழக்கில் குறிப்பது
14. ஆங்கில தொடர் நாடகம், ஒரு காரைத் தழுவியது
15. நிலம் ஒப்படைக்கப்பட்டாலும் நிபந்தனைகள் விடுக்கப்பட்ட பிரதேசம்

### மேலிருந்து கீழாக

1. ஆடை இவ்வாறானாலும் கசக்கிக் கட்டு
2. பல திறமையாளிகள் இது இல்லாமையால் அவதியுறுகின்றனர்.
8. சிவனுறையும் இடம்
12. அன்னை தெரேசா செய்த தொழில்
16. இக் கைதிகளை வைத்தே தீவிரவாதிகள் அரசாங்கத்தை மிரட்டுவர் - குழம்பியுள்ளது.
17. பாசமலர் படத்தின் தீம் எந்த உறவை மிகைப்படுத்துகின்றது. - திரும்பியுள்ளது
18. தற்கொலை செய்யத் துணிந்தவன் ஏன் வாழ்வை எண்ணி ........... ஆகின்றான்.
19. தாம் செய்த தவறை யார் மீதும் போடுதல்.
20. இதனால் செய்யாததை தந்திரத்தால் செய்யலாம்.
21. பரதத்தில் முக்கியமானது
22. அழகிய பெண்களை ............, ஊர்வசி என்பர்.

### 04 ற்கான விடைகள்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 மு | 13 ஜா | கு | தீ | ன் | ■ | 2 அ | 14 வி | சு |
| றி | ன் | ■ | ■ | ■ | 3 இ | டை | ய | ன் |
| 4 ந் | சி | த | னை | ■ | ளை | 5 கா | ப் | பு |
| 6 த | ரா | 15 சு | ■ | 16 க | ஞ | ப் | பு | ■ |
| 7 ப | ணி | ப் | பா | ள | ர் | 8 பு | 17 ர | 18 வி |
| 9 னை | அ | ர | னு | சு | ■ | ■ | ங் | ண் |
| சா | ல | 23 பா | ம் | ஞ் | 20 த | ■ | ன் | 19 ண |
| ட் | 11 நா | 10 த | ஸ் | 22 வ | ர | ம் | 21 கூ | க |
| டு | ■ | ம் | ■ | ■ | வை | 12 சு | டு | ம் |

*விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி :*
*மலைமுரசு. இல - 159தி.*
*கடற்கரைக்காட்சி வீதி, திருகோணமலை.*

- விடைகளை இங்கு வெளியாகி உள்ள கூப்பனில் எழுதி கத்தரித்து அனுப்பவும்.
- முற்றிலும் சரியான விடை எழுதுபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் மூன்று அதிஷ்டசாலிகளுக்கு முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகளாக ரூபா 150, ரூபா 100, ரூபா 50 பெறுமதியான கொள்வனவு கூப்பன் வழங்கப்படும்.

## இவ்வார இராசி பலன்



**மேஷம்** : புஉற்சாக மனதுடன் பணிகளை தொடங்குவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். ஆரோக்கியத்தில் கவனம் வேண்டும். வியாபார வளர்ச்சியால் வருமானம் கூடும்.



**ரிஷபம்** : எதிர்பார்த்த நன்மை முழு அளவில் கிடைக்கும். நிலுவைப் பணம் வசூலாகும். வியாபாரத்தில் லாபம் கிடைக்கும். மாணவர்கள் படிப்பில் ஆர்வமுடன் ஈடுபடுவர்.



**மிதுனம்** : திட்டமிட்ட பணிகள் சிறப்பாக நிறைவேறும். வழக்கு விவகாரத்தில் நன்மை கிடைக்கும். வியாபாரத்தில் முன்னேற கிடைத்த வாய்ப்பை பயன்படுத்துவர்.



**கடகம்** : விலகிச் சென்ற நண்பரும், அன்பு பாராட்டுவர். கடனில் பெரும்பகுதியைச் செலுத்துவீர்கள். பணியாளர்களுக்கு, அதிர்ஷ்டவசமாக சலுகை கிடைக்கும்.



**சிம்மம்**: மனதில் ஆன்மிக சிந்தனை மேலோங்கும். அன்றாடப் பணிகளில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். ஆரோக்கியம் பலம் பெறும். வியாபாரத்தில் வளர்ச்சி கூடும்.



**கன்னி** : பேச்சு செயலில் நிதானம் நிறைந்திருக்கும். ஆரோக்கியம் பலம் பெறும். உழைப்பில் ஆர்வம் அதிகரிக்கும். பணியாளர்கள் நன்மதிப்பை பெறுவர்.



**துலாம்** : செயல்களில் உற்சாகம் பிறக்கும். அன்புக்குரியவர்களின் பாராட்டு கிடைக்கும். எதிரியிடம் விலக்கவும். வியாபாரத்தில் வளர்ச்சி படிப்படியாக உயரும்.



**விருச்சிகம்** : முக்கியமான பணிகளை ஆர்வமுடன் நிறைவேற்றுவீர்கள். குடும்பத்துடன் சுற்றுலா செல்வீர்கள். வாழ்க்கைத் தரம் உயரும். வருமானம் உயரும்.



**தனுசு** : இடம் சூழல் உணர்ந்து பேசுவீர்கள். செயல்கள் வெற்றி இலக்கை அடையும். வியாபாரத்தில் விடாமுயற்சியும், கடின உழைப்பும் தேவைப்படும்.



**மகரம்** : மனதில் தைரியம் அதிகரிக்கும். திட்டமிட்ட பணி நிறைவேறும். வருமானம் அதிகரிக்கும். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும். மாணவர்கள் அவதானமாகவும்.



**கும்பம்** : நிதானமுடன் செயல்படுவீர்கள். கொடுத்த பணம் திரும்ப கிடைக்கும். லாபம் கிடைக்கும். பணியாளர்கள் பணிச்சுமையைச் சந்தித்தாலும் வருமானம் கிடைக்கப் பெறுவர்.



**மீனம்** : புதிய முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். அன்புக்கு உரியவரின் ஆலோசனை கிடைக்கப்பெறும். சீரான ஓய்வு தேவை. பிறருக்காக பொறுப்பு ஏற்க வேண்டாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான வழிகாட்டி - 14

01. வீட்டுத்தோட்டத்தில் நிழலுக்காக வளர்க்கப்படும் மரம் எது?
1) வாழை 2) அன்னாசி 3) இஞ்சி 4) கத்தாப்பு

02. நீரில் பூக்கும் தாவரம் எது?
1) கானல்வாழை 2) ஆம்பல் 3) போகன்விலா 4) மே மலர்

03. எதிரிக்கு வி'மயிரை கொட்டித் தாக்கும் பிராணி எது?
1) அட்டை 2) மயிர்க்கொட்டி 3) குளவி 4) மண்புழு

04. கூர்மையான பார்வையால் இரைதேடும் பறவை எது?
1) கழுகு 2) வெளவால் 3) செண்பகம் 4) தீக்கோழி

05. மின்னேரியாக் குளத்தை கட்டுவித்த மன்னன் யார்?
1. துட்டகைமுனு 2. தாதுசேனன் 3. மகாசேனன் 4. பராக்கிரமபாகு

06. கிரிக்கட் விளையாட்டில் ஒரு குழுவிலுள்ள விளையாட்டு வீரர்களின் எண்ணிக்கை?
1. 9 2. 11 3. 15 4. 16

07. இலங்கையில் மிக நீளமான நதி எது?
1. மாணிக்ககங்கை 2. நில்வள கங்கை
3. நைல்நதி 4. மகாவலிகங்கை

08. மின்னல் ஏற்படும் நேரங்களில் செய்யக் கூடாதது?
1. நித்திரை செய்தல் 2. பாடம் படித்தல்
3. செல்லிட தொலைபேசியில் கதைத்தல்
4. உணவு சமைத்தல்

09. அருகில் காட்டப்படும் குறியீடு குறிப்பது எது?
1) முன்னால் வரும் வாகனங்களை நிறுத்துக.
2) பின்னால் வரும் வாகனங்களை நிறுத்துக.
3) முன்னாலும் பின்னாலும் வரும் வாகனங்களை நிறுத்துக.
4) இடது பக்கம் வரும் வாகனங்களை நிறுத்துக.



10. இலங்கை மக்களின் பிரதான உணவு அரிசிச்சோறு. இலங்கையில் அதிகளவு நெல் உற்பத்தி செய்யும் மாவட்டம் எது?
1. அம்பாறை 2. குருணாகல் 3. மட்டக்களப்பு 4. அனுராதபுரம்

11. இரும்புச் சத்து குறைபாடு காரணமாக ஏற்படும் நோய்?
1. நிறக்குருவி 2. கண்டமாலை 3. மாலைக்கண் 4. அனிமியா

12. பாடசாலை மாணவர்கள் தயாரித்து உண்ணக்கூடிய போசணைமிக்க உணவு?
1. திரிபோஷா 2. இலைக்கஞ்சி 3. பாற்சோறு 4. நூடில்ஸ்

13. அசுத்தமான நீரைக் குடிப்பதால் ஏற்படும் நோய் ?
1. நெருப்புக் காய்ச்சல் 2. தொண்டைக் கரைப்பான் 3. பிடிசுரம் 4. காசநோய்

14. 4 பென்சில்களை வாங்கிய ஒருவர் கடைக்காரரிடம் ரூபாய் 10.00 ஐக் கொடுத்து மிகுதிக்காசுகளை 50சத நாணயங்களாகக் பெற்றார் எனின், அவர் பெற்ற நாணயங்கள் எத்தனை?

.....................................................................

15. பேருந்து காலை 6.45 இற்கு பேருந்து நிலையத்தலிருந்து புறப்பட்டது. 15 நிமிடங்களுக்குப் பின்னர் இரண்டாம் பேருந்து புறப்பட்டது. இரண்டாம் பேருந்து புறப்பட்ட நேரம் எவ்வளவு?

.....................................................................

16. 515 மாம்பழங்கள் ஐந்து பெட்டிகளில் சமனான எண்ணிக்கையில் அடைக்கப்பட்டன எனின் ஒரு பெட்டியிலுள்ள மாம்பழங்களின் எண்ணிக்கை யாது?

.....................................................................

17. வியாபாரி ஒருவர் 500 மாம்பழங்கள் இருந்த ஒரு குவியலில் இருந்து 201 மாம்பழங்களை விற்றார். விற்பதற்கு இன்னும் எத்தனை மாம்பழங்கள் எஞ்சியுள்ளன?

.....................................................................

18. ஐந்தாயிரத்து ஐந்நூற்று நாற்பத்தொன்பது என்பதை இலக்கத்தில் எழுதுக?

.....................................................................



**புலமைப் பரிசில் வழிகாட்டல்**
**ஆசிரியர் திரு.ந.மனோகரன்**

# சிறுவர் முரசு



**சிறுவர்களுக்கான குட்டிக் கதை**



## செய்த வினை

சரவணனுக்கு பணம்தான் குறி. க'டப் படுவர்களுக்குப் பணம் தேவை என்றால் சரவணனிடம் தான் ஓடி வர வேண்டும். அதுவும் சும்மா ஓடி வந்தால், அவன் பணம் கொடுக்க மாட்டான். பண்ட பாத்திரமோ, நகையோ கொண்டு வந்தால்தான் பணம் கொடுப்பான். அதுவும், பாதி விலைக்குத்தான் வாங்குவான்.

கடவுள் அவன் பக்கம் இருந்து. எல்லா மக்களுக்கும் க'டத்தைக் கொடுத்து, அவனுக்கு லாபத்தை வாரிக் கொடுத்தார்.

"இதெல்லாம் ரொம்பப் பாவம். நம் மகனுக்குப் பாவத்தைச் சேர்த்து வைக்காதீர்கள்," என்று அவன் மனைவி கமலா கண்டிப்பாள்.

"போடி, போடி பிழைக்கத் தெரியாதவளே, பணம்தான் உலகம்... பணம் இல்லை என்றால் ஒருவனும் நம்மை மதிக்க மாட்டான்" என்று அவளைக் கிண்டல் செய்வான் சரவணன்.

ஒருநாள் புதிய ஆள் ஒருவன் சரவணனிடம் வந்தான்.

"என மனைவிக்கு ஒரு பெரிய ஆபரேசன் செய்ய வேண்டும். அதற்குப் பணம் தேவைப்படுகிறது என்னிடம் உள்ள நகைகளை வாங்கிக் கொள்கிறீர்களா?" என்று கேட்டான்.



"அவனைப் பார்த்தால், திருட்டுப் பயல் போல இருக்கிறது. ஒரு மூட்டை நகை கொண்டு வந்து இருக்கிறான். நிச்சயமாக எங்காவது திருடிக் கொண்டு வந்திருப்பான். அவனைப் போகச் சொல்லுங்கள் வீண் வம்பு வேண்டாம்" என்றாள் மனைவி.

ஆனால், நகையைக் கண்டதும் பேராசையும் பொங்கியது சரவணனுக்கு. இவ்ளோ நகை எங்கே கிடைக்கும்? என்று நினைத்து யோசிக்க மறந்தான்.

"கமலா! நீ இந்த விஷயத்தில் தலை இடாதே... உனக்கு என்ன தெரியும்!" என்று அவளைத் திட்டி அனுப்பி விட்டு, மூட்டையுடன் வந்த ஆளை உள்ளே அழைத்தான்.

அந்த ஆள் மூட்டையைப் பிரித்தான். ஏராளமான தங்க நகைகள் மின்னின. மாற்று உறைத்துப் பார்த்தான் சரவணன். எல்லாமே சுத்தத் தங்கம். லட்ச ரூபாய்க்கு மேல் பெறும்.

"பத்தாயிர ரூபாய் தான் கொடுப்பேன். இஷ்டம் இருந்தால் கொடு. இல்லாவிட்டால் போ," என்று கண்டிப்பாகப் பேசினான்.

"சரி ஐயா பணத்தைக் கொடுங்கள்" என்று அழுது வடிந்தான் அந்த ஆள். உடனே, பணத்தைக் கொடுத்து, நகைகளை வாங்கி பீரோவில் வைத்துப் பூட்டினான் சரவணன்.

மனம் முழுவதும் சந்தோஷம். இப்படி ஒரு அதிர்ஷ்டம் யாருக்கு அடிக்கும். லட்ச ரூபாய் பெறுமானமுள்ள நகையை பத்தாயிரத்திற்கு சுருட்டிய தன்னுடைய திறமையை எண்ணி மகிழ்ந்தான்.

ஒருமாதம் சென்றது-

சரவணன் வீட்டு வாசலில் காவல்துறை-யினரின் ஜீப் வந்து நின்றது. அதில் இருந்து அதிகாரியும், காவலர்களும் கையில் விலங்கு பூட்டிய ஒருவனோடு க'ழே இறங்கினார்கள். கையில் விலங்குடன் காணப்பட்டவன் ஒரு மாதத்திற்கு முன்னால் சரவணனிடம் நகைகளை விற்ற ஆசாமி.

சரவணன் பயத்துடன் வாசலுக்கு வந்தான்.

"இவர்தான் என் திருட்டு நகைகளை வாங்கியவர்" என்று சரவணனை அடையாளம் காட்டினான் திருடன்.

அவ்வளவுதான்! அதிகாரியும், காவலர்களும் சரவணனின் வீட்டுக்குள் புகுந்து, அலுமாரியைத் திறந்து திருட்டு நகைகளோடு மற்ற நகைகளையும் சேர்த்து எடுத்துக் கொண்டு, சரவணனை ஜீப்பில் அள்ளிப்போட்டுக் கொண்டு போனார்கள்.

**ஏழைகளின் வயிற்றெரிச்சல் சும்மா விடுமா?**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சிந்திக்க .....

**சென்று கொண்டிருப்பவன், காலத்தை வென்று கொண்டிருக்கிறான்: நின்று கொண்டிருப்பவன், காலத்தை தின்று கொண்டிருக்கிறான்.**

## மலைமுரசு



### பாராட்டு பெறுவோர்

*மா.கனகா, கடற்கரைச்சேனை, திருகோணமலை*
*செ.டிலுஷன், டொக்யாட் வீதி, திருகோணமலை*

தரப்பட்டுள்ள இப்படத்திற்கு நிறந்தீட்டி மலைமுரசு அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கவும்.
வயதெல்லை : 12 வயதிற்கு குறைந்த மாணவர்கள் மாத்திரம்

***அனுப்ப வேண்டிய முகவரி : மலைமுரசு. இல - 159ஏ, கடற்கரைக்காட்சி வீதி, திருகோணமலை.***

### விடுகதைகளும்

01. மூவராய்ச் சேர்வார்கள், சிவப்பு வண்ணம் தீட்டுவார்கள் –
02. புளிப்பான மீனுக்கு உப்பு போதலையாம், மூடி வச்ச ஜாடிக்குள்ளே உப்பில் நீந்துதாம்
03. வெள்ளைக்கார வீரன், சுட்டுப் போட்டால் நொறுங்குகிறான் -
04. சின்னப் பையனுக்குப் படுக்க வீட்டளவு பாய் வேணும் -
05. உரச உரச குழைவான், பூசப் பூச மணப்பான் -
06. தொட்டு விட்டால் ஏதும் இல்லை, அரைத்து விட்டால் சிவந்திடுவான்


### விடைகளும்

01. வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு
02. மாங்காய், ஊறுகாய்
03. அப்பளம் 04. சிலந்தி வலை
05. சந்தனம் 06. மருதானி

# க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டி

## பாடம் : கணிதம்

01. பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை 100 பேர் ஆகும். சித்தியடைந்தவர் விபரம் பின்வருமாறு




T- தமிழ் M- கணிதம்
S-விஞ்ஞானம்

அ) வென்வரிப்படத்தைப் பிரதி செய்து பின்வருவனவற்றைக் காண்க.
1. கணிதம், விஞ்ஞானம் மட்டும் சித்தியடைந்தவர்கள் 12 பேர்
2. தமிழ் மட்டும் சித்தியடைந்தவர், கணிதம் மட்டும் சித்தியடைந்தவர்களின் மூன்று மடங்கு
3. ஏதாவது இரு பாடங்களில் மட்டும் சித்தியடைந்தவர்கள் 34 பேர்.

ஆ) n[MuSuT]=90 ஆயின், x இன் பெறுமானம் யாது?
இ) n[M'n(SnT)] இன் பெறுமானம் யாது?
ஈ) இம் மூன்று பாடங்களும் சித்தியடைந்தவர்கள் எத்தனை பேர்?

02. ஒரு குறித்த முதலின் 10வீத கூட்டுவட்டிக்கும், 10வீத எளிய வட்டிக்கும் 3 வருடங்களுக்கு கொடுக்கப்படுகின்றது. இரு வட்டிக்கும் இடையிலான வித்தியாசம் 620 ரூபா எனில் முதலைக் காண்க.

03. கூட்டல் விருத்தி ஒன்றின் 5ம் உறுப்பு 25 ஆகும். மூன்றாம் உறுப்பினதும் எட்டாம் உறுப்பினதும் கூட்டுத்தொகை 55 ஆகும்.
1. முதலாம் உறுப்பு, பொது வித்தியாசத்தைக் காண்க.
2. 12ம் உறுப்பு யாது? 3. 50 எத்தனையாம் உறுப்பு?
4. 12 உறுப்புக்களின் கூட்டுத்தொகை யாது?
5. எத்தனை உறுப்புக்களின் கூட்டுத்தொகை 390 ஆகும்.

## பாடம் : வரலாறு

01. துலாபாரம் எனும் தானம் வழங்கும் முறையை ஏற்படுத்திய பொலநறுவை ஆட்சியாளன்
1. 1ம் பராக்கிரமபாகு 2. 2ம் விஜயபாகு 3. 6ம் மகிந்தன் 4. நிஸ்ஸங்கமல்லன்

02. இந்தியாவின் ஸ்ரீமாறஸ்ரீவல்லபன் இலங்கை மீது படையெடுத்து செல்வங்களை கொள்ளையிட்டுச் சென்ற போது இலங்கை ஆட்சியாளன்
1. மகாசேனன் 2. தாதுசேனன் 3. மித்தசேனன் 4. 1ம் சேனன்

03. மின்னேரியா, கந்தளாய் குளங்களுக்கு நீரை வழங்கும் கால்வாய்
1. பப்பதந்த கால்வாய் 2. எலகர கால்வாய்
3. அங்கமட்டில கால்வாய் 4. மினிப்பேகால்வாய்

04. இலங்கையின் நீர்வள நாகரிக காலத்தில் றுஹுணு பிரதேச ஆட்சியாளன்
1. ஏப்பா 2. மாபா 3. இளிகிரி 4. கமிக

05. குப்பிகல திஸ்ஸ தேரருக்கு தானமாக வழங்க வலகம்மா மன்னனால் பூசிக்கப்பட்ட ஆராமை
1. ஜேத்தவனராமய 2. அபயகிரி 3. ருவன்வெலிசாய 4. ரண்கொத்

06. இந்தியாவின் குலசேகர பாண்டிய மன்னனின் ஆக்கிரமிப்புக்கு ஆளான யாப்பகூவ ஆட்சியாளன்
1. 2ம் பராக்கிரமபாகு 2. 3ம் பராக்கிரமபாகு 3. 1ம் புவனேகபாகு
4. 1ம் விஜயபாகு

07. இலங்கையை ஒரு குடையின் கீழ் கொண்டு வந்த இறுதி ஆட்சியாளன்
1. 6ம் பராக்கிரமபாகு 2. 1ம் பராக்கிரமபாகு 3. 1ம் விமலதர்மசூரியன்
4. 1ம் விஜயபாகு

## Grammar

***Complete the sentences.***

have lunch, have a swim, have a nice time, have a chat, have a cigarette, have a rest, have a good flight, have a baby, have a shower, have a party, have a look

1. I don't eat much during the day. I never .................
2. David likes to keep fit, so he ......................... every day.
3. We ...................... last Saturday. It was great - we invited lots of people.
4. Excuse me, can I .................. at your newspaper, please?
5. 'Where's Jim?' 'He ........................ in his room. He's very tired'.
6. I met Ann in the supermarket yesterday. We stopped and ..................................
7. I haven't seen you since you came back from holiday. ................................?
8. Suzanne ......................... a few weeks ago. It's her second child.
9. I don't usually smoke but I was feeling very nervous, so I ............................
10. The phone rang but I couldn't answer it because I ................................
11. You meet Tom at the airport. He has just arrived. You say: Hello, Tom ..............................................?

## பாடம் : தமிழ்மொழியும் இலக்கியமும்

தமிழ் இலக்கணம்

### இலக்கணத் தொடர்கள்

### பதவியல்

**பகுபதம்**

பகுதி விகுதி முதலிய சொல்லாக்கக் கூறுகளை இனங்காணத்தக்க சொல் பகுபதம் எனப்படும். பெயர்ச்சொல் வினைச்சொல் எனும் இருகைச் சொற்கள் பகுபதங்களாக அமையும்.

ஒரு பகுபதத்தில் இடம் பெறும் கூறுகளை அவற்றின் தொழிற்பாட்டின் அடிப்படையில் ஆறு பிரிவுகளாக வகைப்படுத்தலாம். ஆவை பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம் எனப்படும். ஒரு பகுபதத்தில் இந்த ஆறு உறுப்புக்களும் கட்டாயம் அமையும் என்பதில்லை. ஆனால் பகுதி விகுதி என்னும் இரு உறுப்புக்களும் குறைந்தபட்சம் அமையும்.

**பெயர்ப்பகுபதம்**

எடுத்துக்காட்டு:
ஊரார் - ஊர் (பகுதி) + ஆர் (விகுதி) (இரண்டு உறுப்புக்கள்)

அறிஞன் - அறி (பகுதி) + ஞ் (இடைநிலை) + அன் (விகுதி)

| | | பகுதி | | விகாரம் | | விகுதி |
|---|---|---|---|---|---|---|
| அவன் | - | அ | + | (வ்) | + | அன் |
| இவன் | - | இ | + | (வ்) | + | அன் |
| எவன் | - | எ | + | (வ்) | + | அன் |

| | | பகுதி | | விகுதி |
|---|---|---|---|---|
| முன்னோர் | - | (முன் | + | ஓர்) |
| பின்னோர் | - | (பின் | + | ஓர்) |
| நல்லோர் | - | (நன்மை | + | ஓர்) |

| | | பகுதி | | சாரியை | | விகுதி |
|---|---|---|---|---|---|---|
| புத்தளத்தான் | - | (புத்தளம் | + | அத்து | + | ஆன்) |



தமிழ் இலக்கியத் தொகுப்பு
ஆசிரியர் : A. ரவீந்திரன் B.A.(Hons)Tamil Special Dip.In.Education
மாணவர் ஒளி கல்வி வளாகம்,
திருஞானசம்பந்தர் வீதி, திருகோணமலை

## பாடம் : விஞ்ஞானம்

01. வயலினிலிருந்து உண்டாகும் ஒலி பற்றிய பின்வரும் கூற்றுக்களை கருதுக.
அ. தந்தியின் இழுவை அதிகரிக்கும் போது ஒலியின் சுரதி அதிகரிக்கின்றது.
ஆ. வில்லினால் தந்திகளை தேய்க்கும் போது அத்தந்திகள் வழியே ஒலியலைகள் செல்லுகின்றன.
இ. ஒலியை கூடுதலான வளி மேற்பரப்புக்கு ஊடுகடத்தச் செய்தல் பெட்டியில் நடைபெறுகின்றன.

மேற்குறித்த கூற்றுக்களில் உண்மையானது உண்மையானவை.
1. அ மாத்திரம் 2. அ, ஆ மாத்திரம்
3. அ, இ மாத்திரம் 4. அ, ஆ, இ எல்லாம்.

04. மின்னோட்டம் பாயும் கடத்தி மீது காந்தப் புலத்தின் மூலம் உண்டாக்கப்படும் இசை பற்றிய பின்வரும் எக்கூற்று உண்மையானது?
1. காந்தப்புலத்தின் திசையில் கடத்திய மின்னோட்டம் பாயும் போது கடத்திக்குச் செங்குத்தாக விசை தாக்குகின்றது.
2. காந்தப்புலத்தின் திசைக்கு எதிராக கடத்தியில் மின்னோட்டம் பாயும் போது கடத்திக்குச் செங்குத்தாக விசை தாக்குகிறது.
3. காந்தப் புலத்திற்கு செங்குத்தாக கடத்தியில் மின்னோட்டம் பாயும் போது கடத்திக்கு செங்குத்தாக விசை தாக்குகிறது.
4. காந்தப்புலத்திற்கு செங்குத்தாக மின்னோட்டம் பாயும் போது காந்தப்புலம் கடத்தி ஆகிய இரண்டுக்கும் செங்குத்தாக விசை தாக்குகிறது.

05. ஒரு சோடியம் குளோரைட்டு கரைசலின் அமைப்பு $58.5gdm^{-3}$ ஆகம். அக்கரைசலின் அமைப்பை வேறு விதத்தில் சரியாக எடுத்துரைக்கும் விடை யாது?
1. $58.5moldm^{-3}$ 2. $5.85moldm^{-3}$ 3. $1moldm^{-3}$ 4. $0.1moldm^{-3}$

06. அண்மைக்காலத்தில் தலைநகரத்தை அண்டியுள்ள சில பிரதேசங்களை பல தடவை சடுதியாக வெள்ளம் ஏற்பட்டமைக்கு முக்கிய காரணமாகிய மனிதச் செயற்பாடு யாது?
1. பொலித்தீனை பயன்படுத்தல்
2. காடுகளை அழித்தல்
3. ஒழுக்கற்ற நிர்மாணிப்புக்கள்
4. ஒழுக்கற்றவாறு குப்பைகூலங்களை அகற்றுதல்

07. பின்வரும் விலங்குகளிடையே இலங்கைக்கே உரித்தான விலங்காக அமையாதது?
1. [illegible] 2. பச்சைப்புடையன் 3. திலாப்பியா 4. சருகுமான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்கள் போராட்டத்தில் தலைவர்கள் கொண்டாட்டத்தில்

இலங்கையின் சுதந்திரதினமான கடந்த 4ம் திகதி வடக்குகிழக்கின் அனைத்து மாவட்டங்களிலும் தமிழ் மக்களால் கறுப்புப்பட்டிப் போராட்டங்களும் கவனயிர்ப்புப் போராட்டங்களும் நடத்தப்பட்டன.

## தலைவர்கள் ???

அதேவேளை தமிழ் மக்களின் வாக்குகளால் நாடாளுமன்றம் சென்று அங்கு கூட்டரசாங்கத்தின் பங்காளிப் பதவியான எதிர்கட்சித் தலைவர் பதவியைக் கைப்பற்றிக் கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனும், கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுமந்திரனும் சுதந்திரதின வைபவங்களில். கலந்துகொண்டிருந்தனர்.

கடந்தவருடம் இவ்வாறு சம்பந்தன் மற்றும் சுமந்திரன் ஆகியோர் சுதந்திரதின விழாவில் பங்கேற்றதை அடுத்து அவர்களின் மீது ஒழுக்காற்று நடவக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என அப்போதைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் ஈபிஆர்எல்எவ் கட்சித் தலைவருமான சுரேஸ் பிரேமச்சந்திரன் வெளிப்படையாக ஊடகங்களுக்கு அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

எனினும் அவ்வாறான நடவடிக்கைகள் எவையும் அதன்பின்னர் எடுக்கப்படவில்லை.

## போராடிய அமைப்புக்கள்!

மாவட்டங்கள் தோறும் பல்வேறு மனித உரிமை அமைப்புக்கள் மற்றும் காணாமலாக்கப்பட்ட உறவினர்களும் அவர்களின் அமைப்புக்களும், அரசியல் கைதிகளின் விடுதலைக்காக உழைக்கும் அமைப்புக்கள், கபளீகரிக்கப்பட்ட காணிகளுக்குச் சொந்தமான மீள்குடியேற்றக் கோரும் அமைப்புக்கள், கடல்வளச் சுரண்டலுக்கு உள்ளான அமைப்புக்ள் போன்ற பல்வேறு அமைப்புக்கள் தங்களது சுதந்திரம் தற்போதுவரை கிடைக்கவில்லை என்ற கோசங்களுடன் போராட்டங்களில் ஈடுபட்டனர்.

அதேவேளை இப்போராட்டங்களில் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வடக்கிலும் கிழக்கிலும் கலந்து கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.

அண்மையில் தமிழீழக் கொரிக்கையைக் கைவிடுவோம் என்று பேசிச் சர்சைக்குள்ளாகியிருக்கும் யாழ்ப்பாண நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் கிளிநொச்சியில் நடைபெற்றிருந்த போராட்டங்களுக்குச் சென்றிருந்தார்.

### திருமலையில்!

திருகோணமலையில் வண. பிரபாகரன் அடிகளின் தலைமையில் நடைபெற்ற போராட்டத்தின் போது நல்லாட்சியின் பெயரால் தாபிக்கப் பட்டுள்ள இந்த அரசாங்கத்தின் கீழும் எண்ணிக்கணக்கற்ற புலனாய்வாளர்களால் போராடிய மக்கள் சூழப்பட்டிருந்ததுடன் அப்புலனாய்வாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்ட அனைத்து மக்களையும் தமது புகைப்படக் கருவிகளுக்குள் அடக்கிக்கொள்ளப் பகீரதப் பிரயத்தனப்பட்டதுடன், படத்தொகுப்புக்களையும் தமது கையடக்கத் தொலைபேசிகளின் ஊடாகப் படமாக்கிக் கொண்டனர்.

இப்போராட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் எவரும் பங்குபற்றாத நிலையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் திருமலை மாவட்டத் தலைவர் இரா.ஶ்ரீஞானேஸ்வரன் போராட்டக்காரராகவே அமர்ந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பெயரில் போட்டியிட்ட சிலர் போராட்டத்தில் பங்குபற்றாது, ஆனால் அவ்விடத்திற்கு வந்திருந்தனர்.

அவர்கள் உட்படச் சில அரச அலுவலர்கள், சட்டத்தரணியொருவர், கிழக்கு மாகாண அமைச்சரொருவரின் உதவியாளர் உட்படச் சிலர்

**திருமலை-தவம்**







அவ்விடத்தில் வந்து போராடுபவர்கள் அணிந்திருந்த கறுப்புப் பட்டியைத் தலையில் அணியாது தேவைக்கேற்பப் பார்வையாளர்கள் போலவும், போராட்டக்காரர்கள் போலவும் மதில்மேல் பூனைகளாக இருந்ததை அவதானிக்க முடிந்தது.

### வவுனியாவில்!

வவுனியாவில் நடைபெற்ற மக்கள் போராட்டங்களின் போது நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனுக்கு எதிராக வெளிப்படையாகவே கண்டனப் பதாதைகளை காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் தாங்கியிருந்தனர்.

இப்போராட்டங்களில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிமலநாதன் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



தம்மைத் தேர்வு செய்த மக்களும், அவர்களினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் குழுக்களும் போராட, அப்போராட்டத்தை சட்டை செய்யாமல் தலைவர்கள் கொண்டாட்டங்களில் ஈடுபட்டது எவ்வகைச் சாணக்கியத்திற்குள் வகைப்படும் என்பதை பொறுத்திருந்து பார்க்கலாம்!

## சம்பூரில் சிலர்....

அக்காணிகள் அனல் மின்நிலையப் போக்குவரத்துப் பாதைக்காகவும் அதி உச்சக் கொதிநிலை கொண்ட நீரினை கடலினுள் பீச்சியடிக்கவும், குளிர்ந்த கடல்நீரை அனல் மின்நிலையத்திற்குக் கொண்டு செல்லவும் தேவையான குழாய்களை நிலத்திற்குக் கீழாகக் கொண்டு செல்வதற்காகப் பரிந்துரைக்கப்பட்ட காணிகளுக்குள் இம்மூவரது காணிகள் முற்றுமுழுதாக அகப்பட்டுக் கொள்வதால் அவர்களை மீளக் குடியேற்ற முடியாது என அரச அதிகாரிகள் தெரிவித்து வந்தனர்.

அத்துடன் கையகப்படுத்தப்படும் காணிகளுக்குப் பதிலாக அதேயளவு காணிகளை அதேயளவு வசதிகளுடன் வழங்க அரச அதிகாரிகள் முன்வராததால், தமது காணிகளை விடுத்து இடம்பெயர அம் மூன்று குடும்பத்தினரும் மறுத்துள்ள நிலையில், காணிகளை விட்டு வெளியேறுமாறு கடும் அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டு வருவதாக இக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் மீண்டும் மீண்டும் தெரிவித்து வருகின்றனர்.

இதனையடுத்து குறித்த குடும்பங்களின் நிலை தொடர்பாகத் திருகோணமலையின் மனித உரிமை ஆணைக்குழு தனது கரிசனையை வெளிப்படுத்தியிருந்ததுடன் இவ்விடயம் சம்பந்தமாக கடந்த 28.12.2015ற்கு முன் அறிக்கை சமர்ப்பிக்குமாறும் பிரதேசச் செயலாளரைக் கேட்டிருந்தது.

இந்நிலையில் தற்போது பிரதேசச் செயலாளர் குறித்த காணிச் சொந்தக்காரர்கள் அத்துமீறித் தமது காணிக்குள் குடியிருப்பதாகவும், பலதடவைகள் அறிவித்தல் விடுக்கப்பட்டிருந்த போதும் அவர்கள் வெளியேற மறுபப்பதாகவும் மனித உரிமை ஆணைக்குழுவிற்குத் தனது கடிதத்தின் மூலம் தெரிவித்துள்ளார்.

## உண்டியல்....

குறித்த சந்தேநகபர்களிடமிருந்து சில்லறையாகவும், தாள்களாகவும் காவல்துறையால் கைப்பற்றப்பட்டுள்ள தொகை அறுபத்து மூவாயிரத்து ஐநூற்றுத் தொண்ணூறு ரூபா எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சந்தேகநபர்கள் நீதிமன்றில் முன்நிலைப்படுத்தப்படவுள்ளனர்.

## திருமலை நடராசன்...

உரையாற்றிய மதிப்பிற்குரிய யோகேந்திரம் ஐயா அவர்கள் அன்று நடந்தவைகளை இவ்வாறு நினைவு கூர்ந்தார்.

"சிங்கள சிறீ எழுத்தை அழித்து தமிழ் சிறீ எழுத்தை எழுதும் போராட்டத்தை 1957ம் ஆண்டின் முதல்திங்கள் கடைசி நாட்களில் தமிழரசுக் கட்சி அறிமுகம் செய்திருந்ததை அடுத்து வந்த மாதமான பெப்ரவரி நாலாம் திகதியில் தமிழ்த் தேசமெங்கும் கறுப்புக்கொடியேற்றும் போராட்டம் நடைபெற ஏற்பாடாகியிருந்தது.

அதற்கமைய திருகோணமலையில் நகரசபைக்குச் சொந்தமான மணிக்கூட்டுக் கோபுரத்தில் ஏற்றப்பட்ட கறுப்புக்கொடிக்கு எதிராக நகரசபைக்குச் சொந்தமான அங்காடிக் கட்டங்களில் சிங்கக்கொடியைப் பறக்கவிட்டதை எதிர்க்க முனைந்த போது எவ்.ஜி.மனுவல் சில்வா என்பரினால் மேற்கொள்ளப்பட்ட சுடுகலப்பிரயோகத்தில் அந்த இடத்திலேயே திருமலை நடராசன் தன் இன்னுயிரை ஈந்தார். அச்சுடுகலப் பிரயோகத்தில் மயில்வாகனம், நடராசா, வெண்டரசன், கந்தசாமி, சிவப்பிரகாசம், அருமைத்துரை, ஆகியோர் காயமடைந்தனர்" என நினைவு கூர்ந்தார்.

## நான் வன்புணரப்...

தோன்றியுள்ளதை அடுத்து தம்மை அங்கு அனுப்பினால் தாம் தற்கொலை செய்துகொள்வதைத்தவிர வெறு வழியில்லை என அப்பெண்மணி தெரிவித்துள்ளார்.

கார்டியன் செய்திகளின் படி "72 மணித்தியால அறிவித்தலில் நவுருவிற்குத் திருப்பி அனுப்பப்படலாம் என்கின்ற நிலையிலுள்ள 72 சிறுவர்கள், அவுஸ்திரேலியாவில் பிறந்த 33 குழந்தைகள் உட்பட 267 புகலிடக் கோரிக்கையாளர்களில் இப்பெண்மணியும் ஒருவர்.

இவர் 1996ல் சிறிலங்காவின் வடக்கில் உள்ள யாழ்ப்பாண நகரில் வைத்து, தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்புபட்டவர் என்ற சந்தேகத்தின் பேரில் சிறிலங்கா இராணுவ அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டார்.

கர்ப்பிணியாக இருந்த போதிலும் நான் சித்திரவதைகளுக்கும் துன்புறுத்தல்களுக்கும் ஆளாகினேன். இராணுவத்தால் தடுத்து வைக்கப்பட்ட போது எனக்கு ஆண் குழந்தை பிறந்தது. எவ்வித குற்றங்களும் முன்வைக்கப்படாது இரண்டு ஆண்டுகள் நான் தடுத்து வைக்கப்பட்டேன். நான் சிறிலங்கா தடுத்து வைக்கப்பட்ட போது எனது கணவர் சிறிலங்காவில் இடம்பெற்ற இறுதிக்கட்ட யுத்தத்தின் போது காணாமற்போன பல பத்தாயிரக் கணக்கானவர்களில் எனது கணவரும் ஒருவராவார்

கொழும்பில் மீண்டும் சிறிலங்கா புலனாய்வு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டேன். விடுவிக்கப்பட்ட பின்னர், சிறிலங்கா ,ராணுவ அதிகாரிகள் எனது வீட்டிற்கு வருவர். என்னைப் பலவந்தமாக பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்துவார்கள்.

யூலை 2014ல் அவுஸ்திரேலிய அதிகாரிகளால் நவுரு தீவில் நாம் தங்க வைக்கப்பட்டுள்ள கூடாரங்களில் எவ்வித பூட்டு வசதிகளும் காணப்படவில்லை. சிறிலங்காவில் எனக்கு உண்டான காயங்களால் நான் நித்திரை மாத்திரைகளை உண்டுவிட்டு படுத்துறங்கினேன். அடுத்த நாள் காலையில் நான் எழுந்து பார்த்த போது, எனது உடைகள் களையப்பட்டிருந்தன. எனது அறையிலிருந்த பொருட்கள் சிதறுண்டிருந்தன. நான் பாலியல் வன்புணர்விற்கு உட்படுத்தப்பட்டேன் என்பதை உணர்ந்து கொண்டேன் எனத் தெரிவித்திருப்பதாக செய்தி தொடர்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சமையல் சமையல்

# மணக்க மணக்க நாட்டுக்கோழி கறி

### தேவையான பொருட்கள்

நாட்டுக் கோழி கறி - ஒரு கிலோ, சி.வெங்காயம் - கால் கிலோ, தக்காளி - இரண்டு, பட்டை, கிராம்பு, இலை, எண்ணெய் - தேவையான அளவு, கறிவேப்பிலை – சிறிதளவு, உப்பு - தேவையான அளவு, சீரகம் - ஒரு கரண்டி, மஞ்சள் பொடி - 1 கரண்டி, பூண்டு - 10 பல், இஞ்சி - சிறிய துண்டு

### செய்முறை

முதலில் கோழி இறைச்சியை சிறிய துண்டங்களாக நறுக்கி அரை மே.கரண்டி மஞ்சள் பொடி சேர்த்து பிசைந்து வைக்கவும். பின்னர் சீரகம், ஒரு மே.கரண்ள மஞ்சள் பொடி, இஞ்சி, பூண்டு சேர்த்து தனியாக அரைக்கவும்.

மிளகாய், மல்லியை தனியாக பட்டுப் போல் அரைக்கவும், தேங்காய் துருவல், கசகசா தனியாக விழுதாக அரைக்கவும். பின் வெங்காயம், தக்காளியை பொடியாக நறுக்கி வைக்கவும். இப்போது கோழிஇறைச்சியை நன்கு கழுவவும்.

அடுப்பில் தாச்சியை வைத்து எண்ணெய் ஊற்றி தாளிக்கவும். வாசனை வந்ததும் கறிவேப்பிலை, வெங்காயம் போட்டு சிவக்க வறுக்கவும். பிறகு கோழி இறைச்சியை போட்டு ஐந்து நிமிடம் வதக்கி பின் தக்காளி சேர்க்கவும்.

ஐந்து நிமிடம் வதக்கிய பின் நான்கு டம்ளர் தண்ணீர், அரைத்த விழுது, உப்பு சேர்த்து பத்து நிமிடம் கொதிக்கவிடவும். பின் மிளகாய், மல்லி கலவை சேர்த்து பத்து நிமிடம் கொதிக்க விடவும். பின் தேங்காய் விழுது சேர்த்து பத்து நிமிடம் கொதிக்க விட்டு இறக்கவும்.

# ஆரோக்கியமாக வாழ 6 பழக்கங்கள்

ஆரோக்கியமான வாழ்க்கை வாழ வேண்டுமென்று ஒவ்வொருவரும் ஆசைப்படுவார்கள்.

அதற்காக கீழ்வரும் 6 பழக்கவழக்கங்களை கடைப்பிடித்தாலே சரி என்கிறது ஓர் ஆய்வு



### தியானம்

நம் உடல் மற்றும் மனதை மேம்படுத்தும் தியானத்தை அன்றாடம் செய்ய வேண்டும். தியானம் ஒன்றுதான் பக்க விளைவுகள் இல்லாத இயற்கையாக மனம் சார்ந்த பிரச்சனையிலிருந்து வெளிவர ஒரே வழி.

தியானம் தொடர்ந்து செய்யும்போது மனது ஆனது சரியான வழியில் செல்லும். சரியாக முடிவு எடுக்க சொல்லும். மனது சரியான வழியில் சென்று கொண்டு இருக்கும்போது நல்ல உடல் ஆரோக்கியத்திற்கும் தியானம் வழி வகுக்கிறது.



### மனதை லேசாக்குங்கள்

மனதை பொறுத்துதான் நோய்களின் வீரியம் குறைந்தும், அதிகரிக்கவும் செய்கிறது, மனதை ஆரோக்கியமாக வைத்துக்கொண்டால் நோயிலிருந்து எளிதில் விடுபடலாம், மனம் ஆரோக்கியம் பெற அமைதியான சூழல், அளவான ஆழ்ந்த தூக்கம் அவசியம்.

தொடரும்...



# அழகாய்த் திகழ சில டிப்ஸ்

அழகு குறிப்பு

அழகை அதிகரிப்பதற்கு பல்வேறு விதமான குறிப்புகள் உள்ளன. அந்த குறிப்புகளை சரியான முறையில் பயன்படுத்தினால், நமக்கு இருக்கும் அழகை விட கொஞ்சம் அதிகரிக்கும், ஆனால் வரையறையின்றி சென்றால் அலங்கோலம்தான் என்பதனை நினைவில் கொள்க,

கால், கை, முகம், கூந்தல் என ஒவ்வொன்றுக்கும் பல்வேறு குறிப்புகள் இருந்தாலும், இவை எல்லாவற்றிற்கும் சேர்த்து மொத்தமான குறிப்புகளை தெரிந்துகொள்ளுங்கள்.



1. பருமனாக இருப்பவர்கள், எடையை குறைக்க தினமும் காலையில் ஒரு டம்ளர் வெதுவெதுப்பான வெந்நீரில் ஒரு மூடி எலுமிச்சை பழச்சாற்றை பிழிந்து, அதனுடன் அரை ஸ்பூன் தேன் கலந்து, சாப்பிட்டால் எடை குறையும்.

2. கூந்தலில் எண்ணெய் பசை அதிகமாக இருந்தால், கோழி முட்டையில் கொஞ்சம் சர்க்கரையை கலந்து தலையில் லேசாக தடவிக்கொண்டு, பிறகு தலைக்கு குளிக்க வேண்டும். இதனால் எண்ணெய் பசை நீங்கி, முடி அழகு பெறும்.

3. தேநீரில் வடிகட்டிய பின், மிஞ்சும் தேயிலைத் தூளில் எலுமிச்சை சாறை பிழிந்து, தலையில் தேய்த்துக் குளித்தால், தலைமுடி பளபளப்பாகும்.

4. வேப்பிலை, புதினா, சிறிது மருதாணி மற்றும் குப்பைமேனி இலைகளை காயவைத்து, தூளாக்கி வைத்துக் கொள்ளவும். இதில் சிறிது எடுத்து, பாலில் குழைத்து, முகத்தில் பூசி, 20 நிமிடம் ஊற வைத்து குளித்தால், முகத்தில் பரு வராமலும், கறுத்துப் போகாமலும் இருக்கும்.

5. ஒரு லிட்டர் இளஞ்சூடான நீரில், இரண்டு ஸ்பூன் உப்பைப் போட்டு, கண்களை கழுவினால் கண்கள் பிரகாசமாக இருக்கும்.

6. கை, கால் முட்டிகளில் கறுப்பு நிறம் அதிகமாக இருந்தால், தொடர்ந்து அந்த இடத்தில் எலுமிச்சம்பழ சாற்றை தேய்த்து சோப்பு போட்டு குளிக்க வேண்டும். நாளடைவில் கறுப்பு நிறம் போய் விடும். தோல் வறண்டும், சுருக்கத்துடனும் இருந்தால், ஆலிவ் ஆயிலைப் பூசி, சிறிது நேரம் ஊற வைத்து, சோப்பு போட்டு குளிக்க வேண்டும்.



7. இரவு படுக்கும் முன், புதினா சாறு இரண்டு தேக்கரண்டி, அரை மூடி எலுமிச்சம்பழ சாறு ஆகியவற்றுடன், பயத்தம் பருப்பு மாவை கலந்து, முகத்தில் தடவிக் கொண்டு பத்து நிமிடம் ஊறிய பிறகு, ஐஸ் ஒத்தடம் கொடுத்தால் முகம் சுத்தமாகும்.

8. பருவினால் ஏற்பட்ட தழும்பும் மறையும். ஆப்பிள் பழத்தை சின்னச் சின்ன துண்டுகளாக வெட்டி முகத்தில் தடவினால் சருமத்தில் உள்ள எண்ணெய் பசை குறையும்.

9. முகத்தில் உள்ள முடிகளை அகற்ற, முட்டையின் வெள்ளை கரு, சர்க்கரை, சோளமாவு அனைத்தையும் ஒன்றாக கலந்து, பசைபோல் ஆனதும் முகத்தில் தடவவும்.

காய்ந்தவுடன் மெதுவாக பிய்த்து எடுத்தால், முட்டையுடன் முடியும் எளிதில் வரும்.

10. பால், கடலை மாவு, மஞ்சள், சந்தனம், அனைத்தையும் கலந்து முகத்தில் தடவி குளித்தால் சருமம் அழகாகவும், பளபளப்பாகவும் மாறும். தேங்காய்ப் பாலுடன் ஒரு தே.கரண்டி தேன் கலந்து முகத்தில் ஐந்து நிமிடம் மசாஜ் செய்தால், சோர்வடைந்த சருமம் புத்துணர்ச்சி பெறும்.

தக்காளி பழத்தை இரண்டாக நறுக்கி முகத்தில் தடவினால் சருமத்தில் உள்ள எண்ணெய் பசை குறையும். தோல் வறண்டும், சுருக்கமாகவும் இருந்தால் ஆலிவ் ஆயிலைப் பூசி, சிறிது நேரம் ஊற வைத்து, சோப்பு போட்டு குளிக்க வேண்டும்.

இலகுவான இம்முறைகளை செய்து வந்தாலே நல்ல பலனை பெறலாம்.

# தில்லையம்பல பிள்ளையார் ஆலய குடமுழுக்கு திருவிழா

திருகோணமலை அன்புவழிபுரம் தில்லையம்பலப் பிள்ளையார் ஆலயம் எதிர்வரும் பெப்ரவரி 05ம் திகதி வெள்ளிக் கிழமை காலை 07 மணிமுதல் 09 மணிவரையுள்ள சுப முகூர்த்த வேளையில் திருகோணமலை அருள் மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலய பிரதம குரு வேதாகமமாமணி சோ.இரவிச்சந்திர குருக்கள் அவர்க்ளால் கும்பாபிசேகம் இடம் பெற்றுள்ளது.

நிகழும் மன்மத வருடம் தை மாதம் 22ம் நாள் 05.02.2016 கும்பலக்கனமும் அமிர்த சித்த யோகமும் துவாதசி திதியும் மூலம் நட்சத்திரமும் கூடிய காலை 07 மணிமுதல் 09 மணிவரையுள்ள சுப முகூர்த்த வேளையில் திருகுடமுழுக்கு திருவிழா என பெருமையாக பேசப்படும் மஹாகும்பாபிசேகம் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இதனை முன்னிட்டு முதலாம் நாள் 03.01.2016 புதன் கிழமை காலை 06.00 மணிக்கு விநாயகர் வழிபாட்டுடன் ஆரம்பமாகிய நிகழ்வுகள் புண்ணியாக வாஜனம் தேவபிராமண அனுக்ஜை திரவியசுத்தி தனபூஜை கணபதி ஹோமம் போன்ற பல ஹோமங்களுடன் விபூதிபிரசாதம் வழங்கப்பட்டு தொடர்ந்து பல பூசைகளும் கிரிகை களும் யாகபூஜை பஞ்சகண்ட அக்கினி விபர்ஜனம் தீபாராதனை வொஸ்தோத்திரம் பாராயனம் துாபிஸ்தானம் தீபஸ்தாபனம் யந்திரஸ்தாபனம் விம்பஸ்தாப அஸ்டபந்தனம் என்பன இடம்பெற்றுள்ளது.



தொடர்ந்து 04.02.2016 அன்று 07 மணிக்கு தைலாம்பியாக்கம் பக்தர்களால் எண்ணெய்காப்பு சாத்தும் நிகழ்வு மாலை 5.00 மணிவரை இடம்பெற்று தொடர்ந்து 05ம் திகதி காலை 07 மணிமுதல் கும்பாபிசேக கு முழுக்கு நிகழ்வுகள் ஆரம்பமாகி சிறப்புற இடம்பெற்றுள்ளது. தில்லையம்பலப் பிள்ளையாரின் பக்தர்கள் அனைவரும் அன்றைய தினங்களில் ஆலயத்திற்கு வருகை தந்து எம் பெருமானின் ஆசிகளைப் பெற்றேகினர்.



சேனையூர் நிருபர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூர் விளையாட்டு செய்திகள்

## மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டி – 01.02.2016


இ.கி.ச.ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி தேசிய பாடசாலையின் வருடாந்த மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டி கடந்த 01.02.2016 அன்று பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டிக்கு கல்வி, பண்பாட்டு, விளையாட்டு மீள்குடியேற்ற அமைச்சின் உதவிச் செயலாளர் திரு. ஆ.ஞா.தெய்வேந்திரன் அவர்கள் முதன்மை விருந்தினராக கலந்து கொண்டார். மேலும் உதவிக் கல்வி பணிப்பாளர் திருமதி.து.ராஜதுரை அவர்கள் சிறப்பு விருந்தினராகவும், அத்துடன் கல்லூரியின் ஓய்வுநிலை பிரதி அதிபர் திரு.இ.முருகதாஸ் மற்றும் மக்கள் வங்கி, திருகோணமலை நகரக் கிளை முகாமையாளர் திரு.ம.பிரேம்குமார் அவர்கள் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து சிறப்பித்தனர்.

இப்போட்டியில் விபுலானந்தா இல்லம் மற்றும் ராம கிருஷ்ணா இல்லம் முறையே 3ம், 4ம் இடங்களையும் 183 புள்ளிகளுடன் விவேகானந்தா இல்லம் இரண்டாமிடத்தையும் 187 புள்ளிகளுடன் சிவானந்தா இல்லம் முதல் நிலையையும் பெற்று வெற்றிக் கோப்பையை தனதாக்கிக் கொண்டது.

வெற்றி பெற்ற அனைத்து மாணவர்களுக்கும் அதிதிகளினால் சான்றிதழ்களும், கோப்பைகளும் வழங்கப்பட்டன.

கதிரவன்






## தி-விபுலானந்தாக் கல்லூரியின் இல்லங்களுக்கு கிடையிலான போட்டிகள் ஆரம்பம்


கிரிக்கட் அணி


எல்லே அணி


எல்லே பெண் அணிகள் போட்டிக்குத் தயாராகின்றன

இல்ல விளையாட்டுப் பொட்களுக்கான முன்னோடிப் போட்டிகள் தி-விபுலானந்தாக் கல்லூரியின் இல்லங்களுக்கு இடையே ஆரம்பமாகி நடைபெற்றுவருகின்றன.



# விளையாட்டு முரசு

முள்ளிப்பொத்தானை நிரூபர்

## சுதந்திர தினத்தை முன்னிட்டு 10 கழகங்களுக்கிடையிலான கரிக்கட் சுற்றுப் போட்டி

இலங்கையின் 68ஆவது சுதந்திர தின நிகழ்வை முன்னிட்டு கிரிக்கட் சுற்றுப் போட்டி முள்ளிப்பொத்தானை மஸ்டா நிறுவனத்தின் தலைவர் ே.அ.நஷ்ரப் தலைமையில் தம்பலகாமம் சிராஜ்-மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக தம்பலகாமம் பிரதேச காவல் பொறுப்பதிகாரி தினேஷ் அத்தரங்க கலந்து சிறப்பித்தார். அத்துடன் இந்நிகழ்வு பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்த அதிகாரியினால் தேசிய கொடியேற்றி ஆரம்பிக்கப்பட்டதுடன் ஆரம்பமானது. இக் கிரிக்கட் சுற்றுப்போட்டி பத்து கழகங்களுக்கு இடையே இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.




## தெற்காசிய கூடைப்பந்து விளையாட்டுப் போட்டியில் மட்டக்களப்பை சேர்ந்த நிதுர்ஷன் பங்கேற்பு



இந்தியாவின் அஸ்ஸாம் மாநிலம் குவாஹாட்டியில் ஆரம்பமாகிய 12 ஆவது தெற்காசிய விளையாட்டுப் போட்டியில் மட்டக்களப்பைச் சேர்ந்த கூடைப்பந்தாட்ட வீரர் தினேஸ்காந்த் திமொத்தி நிதுர்ஷன் கலந்து கொள்கிறார்.

2015ஆம் ஆண்டு இந்தியாவில் நடைபெற்ற தெற்காசிய கூடைப்பந்தாட்ட சம்மேளனத்தின் வெள்ளிப்பதக்கம் பெற்ற 24ஆவது விளையாட்டுப் போட்டியில் இலங்கை தேசிய அணி சார்பில் இவரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. இதுவரையில் 19 தங்கம், 7 வெள்ளி, 7 வெணகலம் அடங்கலாக 33 பதக்கங்களை வென்றுள்ள இவரின் பயிற்றுவிப்பாளர்களாக மல்கம் டிலிமா, விரேன் சரவணமுத்து, சுரேஸ் றொபட் ஆகியோர் செயற்ப்பட்டுள்ளனர்.

## கரப்பந்தாட்டச் சம்பியனாகியது தம்பலகாமம் அணி பாரதிபுரம் இரண்டாவது வெற்றியாளர்கள்


வெற்றிக்கோப்பையை வழங்கும் வண். பிரபாகரன் அடிகள்

மனித உரிமைகள் மேம்பாட்டுக்கும் விருத்திக்குமான இல்லத்தின் அனுசரணையில் ஆலங்கேணியில் நடாத்தப்பட்ட 40 கழகங்கள் பங்குகொண்ட கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் தம்பலகாமம் அணியினர் வெற்றிக் கேடயத்தைச் சுவீகரித்ததுடன் பாரதிபுரம் அணியினர் 2வது இடத்தை அடைந்தனர்.


வெற்றி அணியுடன் ஏற்பாட்டாளர்கள்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீலங்காவிலும் - நவுறு தீவிலும் நான் வன்புணரப்பட்டேன்



**"ஸ்ரீலங்காவில் இருந்தபோது விசாரணை என்ற பெயரில் வீட்டிற்கு வரும் இராணுவ வீரர்களால் பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்தப்பட்ட நான் நவுறு தீவிலும் பாலியல் பலாத்காரத்திற்கு உள்ளானேன்"**

என படகுகள் மூலம் அவுஸ்திரேலியா-விற்குத் தப்பிச் சென்று அங்கு அடைக்கலம் கோரியுள்ள தமிழ்த்தேசத்தைச் சேர்ந்த பெண்ணொருவர் தெரிவித்துள்ளார்.

இச்செய்தியை வெளியிட்டுள்ள சர்வதேச ஆங்கில ஊடகமான கார்டியன் அப்பெண்ணின் முழுப் பேட்டியையும் வெளியிட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

நவுறு தீவில் திறந்தவெளி முகாமில் அடைக்கப்பட்டிருந்த இப்பெண் அங்கும் தான் வல்லுறவிற்கு உள்ளாக்கப்பட்டதாகத் தெரிவித்ததை அடுத்து தற்காலிகமாக அவரும் அவரது மகனும் அவுஸதிரேலியாவிற்குள் அனுமதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தற்காலிகமாக அவுஸ்திரேலியாவிற்கு அனுப்பப்பட்டுள்ள அவர்களைத் திருப்பி நவுறு தீவிற்கே அனுப்பும் நிலை........ 17

# தெற்கில் தமிழில் .. வடக்கில் சிங்களத்தில் தேசிய கீதம்

கிளிநொச்சியில் நடைபெற்ற சுதந்திர தின விழாவின் போது புனர்வாழ்வளிக்கப்பட்ட போராளிகள் சிங்களத்தில் தேசிய கீதத்தை பாடியுள்ளதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்காகத் தேசிய சுதந்திர தின விழாவில் தேசிய கீததையைச் சிங்களத்திலும் தமிழிலும் பாடப்படுவதாக தெரிவிக்கப்பட்டிருந்த வேளையில் வடக்கில் இவ்வாறு சிங்களத்தில் மட்டும் தேசிய கீதத்தை இசைத்திருப்பது பெரும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

கிளிநொச்சியில் சுதந்திரதின விழாவை சிவில் பாதுகாப்புத் திணைக்களம் ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணம். கிள்நொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களை உள்ளடக்கிய இத்திணைக்களத்தின் கட்டளை அதிகாரியான கேணல் ரத்னபிரியபந்துவின் ஏற்பாட்டிலேயே இவ்விழா நடாத்தப்பட்டுள்ளது.

சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தில் பணியாற்றும் தமிழப் போராளிகள் இந்நிகழ்வில் சிங்களத்தில் மட்டும் தேசிய கீதத்தை இசைத்துள்ளனர்.



படங்கள் - ஹிரு நியூஸ்

## உண்டியல் கள்வர்கள் கைது

மூதூர் - கந்தளாய் பிரதான பாதையில் உள்ள சூரியபுர பிள்ளையார் ஆலயத்தின் உண்டியலை உடைத்துச் சென்ற திருட்டுச் சந்தேக நபர்களைக் காவல்துறை கைது செய்துள்ளது.

கல்நேவ காவல் - துறையினருக்குக் கிடைத்த துப்பு ஒன்றின் அடிப்படையில் விரைந்து செயற்பட்ட காவல்துறையினர் சந்தேக நபர்களைக் கைது செய்த போது அவர்கள் பணத்தினை எண்ணும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்ததாகத் தெரிய வந்துள்ளது.

கைதானவர்கள் அருகிலுள்ள பத்தினிபுரம் மற்றும் கல்நேவ கிராமத்தைச் சேர்ந்தவர்கள் என்று காவல்துறையினர் தெரிவித்துள்ளனர். 17


முதற்தடவையாக திருகோணமலையில் அனைத்து வசதிகளையும் கொண்ட ஒவ்செற் அச்சுப் பதிப்பு நிலையத்தை வாடிக்கையாளரின் வசதி கருதி நிறுவியுள்ளோம்

ஸ்ரீராம் பிறிண்டர்ஸ்
SHRIRAM PRINTERS

தங்களுடைய புத்தகங்கள், திருமண அழைப்பிதழ்கள், சஞ்சிகைகள், துண்டுப்பிரசுரங்கள், வாழ்த்துமடல்கள், மற்றும் அனைத்து வகையாக ஒவ்செற் அச்சுப்பதிப்புக்களும் வாடிக்கையாளர்களின் விருப்பத்திற்கேற்ப அழகாகவும் வர்ணமயமாகவும் திறம்பட செய்து தரப்படும்.



159A, கடல் முக வீதி.
திருகோணமலை.
0777 555 738



விளம்பரங்கள் செய்ய உதவி வேண்டுமா? நாங்கள் தயாராக உள்ளோம்....!

உங்களுக்குத் தேவையான அனைத்து விளம்பரங்களையும், அனைத்துப் பத்திரிகைகளிலும் விளம்பரப்படுத்த எங்கள் உதவியை நாட முடியும்....!

உங்கள் வீடு, காணி, வாகனம், வியாபாரத் தேவைகள். வாடகை, விற்பனை மற்றும் கொள்வனவு செய்வதற்கு IKMAN.LK இணையத்தளத்தில் பதிவேற்றுவதற்கு நாம் உதவுகின்றோம்

தொடர்பு
077 11 28 299
rebevijith@gmail.com


இவ்வாராந்தப் பத்திரிகை மலைமுரசு நிறுவனத்தினால் இல.159 ஏ, கடல் முக வீதி, திருகோணமலையில் இருந்து 06.02.2016ல் அச்சிட்டு வெளியிடப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org